www.padippakam.com

1-15 ஏப். '93 ரூ. 3.00

# புதிய ஜனநாயகம்

# ம்பாய் பயங்கரம் ஏன்?



படிப்பகம்

www.padippakam.com

# பாரதீய ஜனதாவுக்குப் பாய்விரிக்கும் தரகு முதலாளிகள்

*மக்கள் ஆதரவை இழந்து நெருக்கடியில் சிக்கியுள்ள காங்கிரசு நொண்டிக் குதிரை மீது நம்பிக்கை வைத்து இனிமேலும் சூதாட, தரகுப் பெருமுதலாளிகளில் ஒரு பிரிவினர் தயாராக இல்லை. வட மாநிலங்களில் வீசும் இந்து வெறி அலையில் பாரதீய ஜனதா கட்சிதான் அடுத்ததாக மத்தியில் ஆட்சிக்கு வரும் என்று அவர்கள் உறுதியாக நம்புகிறார்கள். மத்தியிலுள்ள சிறுபான்மை காங்கிரசு அரசு தொடர்ந்து தாக்குப் பிடிக்க முடியாது என்கிற நிலையில், பாரதீய ஜனதாவுக்கு 'நன்கொடை'கள் அளிப்பது மட்டுமின்றி, அதன் இந்துவெறி பாசிச அட்டூழியங்களுக்கும் பணத்தை வாரியிறைத்து ஆதரிக்குமளவுக்கு அவர்கள் முன்னேறிவிட்டார்கள்.*

மத உணர்வுகளைத் தூண்டி, இந்துக்களின் ஓட்டுக்களைக் கவர்ந்திழுத்து அரசியல் அரங்கில் தீர்மானகரமான சக்தியாக வளர்ந்துள்ள பா.ஜ.க.-ன் பின் நாட்டின் பெரும் தரகு முதலாளிகளின் ஒரு பிரிவினர் திரளத் தொடங்கியுள்ளனர். குறிப்பாக பிப்ரவரி 2-ல் கல்கத்தா நகரில் பத்துக்கும் மேற்பட்ட பெரும் தரகு நிறுவனங்களின் அதிபர்களும், அந்நிறுவனங்களின் உயர் அதிகாரிகளும் கல்யாண் சிங்கை சந்தித்தது, எதிரணியினர் தங்களது புருவங்களை உயர்த்துமளவு அரசியல் வட்டாரங்களில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

மார்வாரி, குஜராத்தி தொழிலதிபர்கள் மட்டுமல்லாது மேவங்காளம், மகாராஷ்டிரா போன்ற பிற பகுதி தொழிலதிபர்களும் இந்து மதவாதிகளை வட்டமிடத் தொடங்கியுள்ளனர். முதலாளிகள் தரும் நன்கொடையில் பெரும் பகுதியினைத் தனது கைவசம் வைத்திருக்கும் காங்கிரசு இனியும் அந்நிலையைத் தக்கவைத்துக் கொள்வது கடினம் எனுமளவு பா.ஜ.க. தனது செல்வாக்கை தொழிலதிபர்களின் மத்தியில் உயர்த்திக் கொண்டுள்ளது. ஒரு கரசேவை ஊழியருக்கு ரூ.5,000/- வரை லெவியாகவும், இது தவிர போக்குவரத்து செலவும், விலைவாசியை அடிப்படையாகக் கொண்டு வழங்கப்படும் பஞ்சப்படியும் கொடுக்குமளவு இக்கட்சியின் நிதி ஆதாரங்கள் உயர்ந்துள்ளன.

பா.ஜ.க.-ன் பின்புலத்துடன் நடத்தப்பட்டு வரும் 'ஆராய்ச்சி நிறுவனங்களை' முதலாளிமார்கள் மறைமுகமாக தத்தெடுத்துக் கொண்டு வருகின்றனர். உதாரணமாக, சென்னையில் இயங்கி வரும் 'கொள்கை ஆராய்ச்சி மையத்தை' (Centre for Policy Research) டி.வி.எஸ். பார்ப்பனக் கும்பல் ஆதரித்து வருகிறது. அம்பானி முடிய அணி திரண்டுள்ள இத் தொழிலதிபர் கும்பலில், பலர் பா.ஜ.க. இனியும் மதச்சார்பின்மையைப் பேசிக் கொண்டிருக்கத் தேவையில்லை என அக்கட்சியின் பிரச்சாகர்களாகவே மாறுமளவு இந்துத்துவ சக்திகளுடன் இரண்டறக் கலந்துள்ளனர்.

மறுபுறம் மத்திய அரசைக் கைப்பற்றும் நோக்கத்துடன் செயல்பட்டு வரும் பா.ஜ.க., ராவ் அரசின் வரவு-செலவு திட்டத்துக்கு மாற்றாக, 'மனித நேய நோக்குடனான பொருளாதார வளர்ச்சி — ஒரு சுதேசி மாற்று' எனும் பெயரில் தனது நிழல் வரவு-செலவு திட்டத்தைத் தயாரித்து வெளியிட்டுள்ளது. 'தற்சார்பு, குறிப்பிட்ட தொழிற் துறைகளில் மட்டும் அந்நிய முதலீடுகளுக்கு அனுமதி விவசாயத்திற்கு முதலிடம்' என்பனவற்றை தனது பொருளாதார திட்டத்தின் முக்கிய அம்சங்களாகக் கூறி வருகிறது.

தொழிற் துறையில் மட்டும் 1,000 கோடி வரை இழப்புக்களை ஏற்படுத்திய பம்பாய் கலவரம் காரணமாக, அந்நகர தொழிலதிபர்களில் சிலர் டாடாவின் தலைமையில், பம்பாய் பகுதியில் மட்டும் அவசர நிலையை அறிவிக்க கோரிக்கை விடுத்தனர். உடனே சுதாரித்துக் கொண்ட பா.ஜ.க. அத்வானி மூலம், "நாங்களும் அமைதியைத்தான் விரும்புகிறோம்; கலவரங்களுக்கு காரணம் வெளிநாட்டு சக்திதான்" என அறிக்கை விடுத்து அவர்களை தனது பக்கம் கவர்ந்திழுக்க முயற்சியெடுத்தது. அது போன்று தனது சுதேசி கொள்கைகளை சந்தேகக் கணகளோடு பார்க்கும் தொழிலதிபர்களுக்கு 'நிச்சயமாக நாங்கள் பொருளாதார சீர்திருத்தங்களுக்கு எதிரானவர்கள் அல்லர்' என வாக்குறுதி அளிக்கிறது. மேலும், 'சீரான பொருளாதார சீர்திருத்தங்களுக்கும், வளர்ச்சிக்கும் உறுதியான அரசியல் ஸ்திரத்தன்மை தேவை; அவை எங்களால் மட்டுமே வழங்க முடியும்' என தொழிலதிபர்களுக்கு பொறி வைக்கிறது.

ஏற்கனவே இந்து மதவாதிகளின் வளர்ச்சியினால் ஆட்டங்கண்டு வரும் தனது ஆட்சியினை, அவர்களை சாந்தப்படுத்தும் நடவடிக்கைகளின் மூலம் தக்க வைத்து வரும் ராவ் அரசும் — காங்கிரசு கட்சியும், மறுபுறம் தனது கோஷ்டித் தகராறுகளால் மேலும் சிதைந்து நெறுங்கி வருகிறது. இதனைப் புரிந்து கொண்ட தொழிலதிபர்களுக்கு பா.ஜ.க. புதுக் காதலியாகிப் போனதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை. அதை அவர்களே பின்வரும் வார்த்தைகளில் ஒப்புக் கொள்கின்றனர்: 'காற்று எந்தப் பக்கம் வீசுகிறதோ அந்தப் பக்கமே நாங்கள்'.

○ செல்வம்



தரகு முதலாளிகள், தொழிலதிபர்கள், உயர் அதிகாரிகளுடன் கூடி மகிழும் முன்னாள் உ.பி. முதல்வர் கல்யாணசிங்

படிப்பகம்

www.padippakam.com

புதிய ஜனநாயகம்

மார்க்சிய — லெனினிய அரசியல் ஏடு

எட்டாம் ஆண்டு

10-11

1 - 15 ஏப். '93

உள்நாடு:
தனி இதழ்: ரூ.3.00
ஆண்டு சந்தா: ரூ.72.00

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
ஆண்டு சந்தா: US$ 16

படைப்புகள் அனுப்பவும் மற்றும் அனைத்துத் தொடர்புக்கும்

இரா. சண்முகராஜ,
ஆசிரியர், புதிய ஜனநாயகம்,
4, சாமியார் தோட்டம்,
ஆலந்தூர் சாலை,
சைதாப்பேட்டை,
சென்னை - 600 015.

# குடிநீருக்கான கண்ணீரை போக்க வக்கற்ற ஆட்சியாளர்கள்

குடிநீர் பிரச்சினை தமிழக மக்களை, குறிப்பாக சென்னை மற்றும் அதன் புறநகர் பகுதி மக்களை வாட்டி எடுக்கிறது. குடிநீருக்காக இம்மக்கள் படும் அவதி, திண்டாட்டம் காணச் சகிக்க முடியாததாக, வேதனையும் ஆத்திரமும் ஏற்படுத்தக் கூடியதாக உள்ளது. குடிநீர்க் குழாய் வசதியுள்ள வீடுகளில் நள்ளிரவு - நடுப்பகல் எப்போது, என்று வருமோ என வேலையும் செய்ய முடியாமல், தூங்கவும் முடியாமல் தவிக்கின்றனர். அந்த வசதி இல்லாத மக்களின் நிலையோ அவலமாகவே உள்ளது. தண்ணீர் லாரி வரும் என்ற செய்தியே பல சமயம் வதந்தியாகி, வெறுப்பும் ஆத்திரமும் பொங்க வெறுமனே கலைந்து போகிறார்கள். தப்பித்தவறி தண்ணீர் லாரி வந்தாலும் முண்டியடித்துக் கொண்டு ஒரு குடம் நீருக்காக அவர்கள் சண்டையிட்டுக் கொள்ள வேண்டியுள்ளது. மருந்துவமனைகள் முதற்கொண்டு தொழில் சாலைகள் வரை பல பெரும் நிறுவனங்களும் தண்ணீர் தட்டுப்பாட்டினால் பாதிக்கப்பட்டுள்ளன. சென்னை மற்றும் அதன் புறநகருக்கு குடிநீர் வழங்கும் பூண்டி, சேழவரம், செங்குன்றம் ஆகிய மூன்று ஏரிகளுமே ஏப்ரல் மாத இறுதியில் வற்றிப் போய்விட்டன என்ற செய்தி மக்களிடையே பீதியை ஏற்படுத்தியிருக்கிறது. உயிராதாரமான இந்தக் குடிநீர் விநியோகத்திலும் உள்ளூர் அரசியல் குண்டர்களின் கை வரிசையும், வஞ்சமும் தலைவிரித்தாடுகிறது.

அவதியுறும் இந்த மக்கள், உண்மை நிலைக்கு நேர்மாறாக அமைச்சர்கள், அதிகாரிகளின் வாக்குறுதிகள் வருவது கண்டு மேலும் ஆத்திரம் கொள்ள வேண்டியிருக்கிறது. குடிநீர் பிரச்சினையை யுத்த கால அடிப்படையில் தீர்ப்பதாகவும், முதல்வரே நேரடி ஆணை போட்டிருப்பதாகவும் புளுகுகிறார்கள். நெய்வேலியிலும், ஈரோட்டிலும் இருந்து ரெயில்களில் குடிநீர் கொண்டுவர ஏற்பாடாகியுள்ளதாம். ஆந்திரா - கிருஷ்ணாவில் இருந்தும் குடிநீர் ரெயில் மூலம் கொண்டு வர முயல்வார்களாம். பத்தாயிரம் லாரிகள் விநியோகத்தில் ஈடுபடுத்தப்படுமாம். சென்னையிலும் புறநகர் பகுதியிலும் தனியார் கிணறுகள் தூரேடுத்துத் தரப்படுமாம். நிலத்தடி நீர் எடுத்து விநியோகிக்கப்படுமாம். பல கோடி ரூபாய் திட்டம் உள்ளதாம். எவ்வளவு செலவு செய்யப்படுகிறதோ, அவ்வளவுக்கு குடிநீர் பிரச்சினை தீரும் என்று யாரும் நம்பப் போவதில்லை; அவ்வளவு தூரம் ஊழல் தலைவிரித்தாடும் என்பது மக்கள் அறிந்ததே. குடிநீர் விநியோகம் - தண்ணீர் லாரிகள் ஒழுகிக் கொண்டு போவதுபோல அரசியல் பிரமுகர்களுக்கே பெருந்தொகை போவதாக இருக்கும் என்பது சந்தேகமில்லை.

குடிநீர்ப் பிரச்சினை திடீரென்று வந்ததில்லை. நான்கு மாதங்களுக்கு முன்பே வடகிழக்குப் பருவமழை வட தமிழ்நாட்டில் பொய்த்து விட்டபோதே அரசுக்குத் தெரியும். ஆனால் தகுந்த முன்னேற்பாடுகள் செய்யத் தவறியதோடு, குடிநீரைக் கொண்டுபோய் லாரிலாரியாக மயிலைத் தெப்பக்குளத்தில் கொட்டி தெப்பத் திருவிழா நடத்தி மகிழ்ந்தது பார்ப்பன - பாசிச ஜெயா கும்பல். பத்திரிக்கைகள், பொது மக்களின் எதிர்ப்பைக் கூட மதியாது, அந்த பாதகச் செயலை நியாயப்படுத்தியது.

குடிநீர் பிரச்சினை என்பது தமிழகத்தில், குறிப்பாக சென்னை மற்றும் அதன் புறநகர் பகுதிக்கு இந்த ஆண்டு மட்டும் புதிதாக வருவதில்லை; குறைந்தது இரண்டாண்டுகளுக்கு ஒருமுறை வருவது என்றாகிவிட்டது. தலைநகரக் குடிநீர் பிரச்சினையைத் தீர்க்க கருணாநிதி கொண்டு வந்த வீராணம் திட்டம் ஊழலில் சிக்கிப் பாழாய் போய்விட்டது. 20 ஆண்டுகளுக்கு முன்பு கிருஷ்ணா நீர்த் திட்டத்தை அறிவித்தார் அப்போதைய பிரதமர் இந்திரா; பத்தாண்டுகளுக்கு முன்பு எம்.ஜி.ஆரும், என்.டி. ஆரும் அடிக்கல் போட்டார்கள்; தமிழ்நாடு சார்பாக பல கோடி ரூபாய் வாரிக்கொடுத்தும் ஆமை வேகத்தில் நகருகிறது அத்திட்டம். இடையே கூட்டணி, ஆட்சி மாற்றம் என்கிற அரசியலில் சிக்கி இழுபடுகிறது. அடிப்படையான, உயிராதாரமான குடிநீர் பிரச்சினையைக் கூட அரசியலுக்கு அப்பாற்பட்ட பொது நலனாக வைப்பதற்கு ஓட்டுப் பொறுக்கி அரசியல்வாதிகள் இடந்தரவில்லை. இப்போதும் மக்களின் அவதியைக் கவனிக்கும் அக்கறையின்றி சட்டமன்ற ரௌடித் தனங்களும், கூட்டணி மாற்றங்களும், இந்து மதவெறி கலவரங்களும் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். பஞ்சம் தாங்க முடியாத அளவு வாட்டும் போது உணவுக் கலகங்கள், சூறையாடல்களில் மக்கள் இறங்குவதை பல நாடுகளின் வரலாறில் பார்க்கிறோம். அதுபோன்று குடிநீர் கலவரங்களால் அரசே நிலைகுலையும் அளவுக்கு மக்கள் எழுச்சியுறும் போதுதான் ஆட்சியாளர்கள் சிறிதாவது கவனம் செலுத்துவார்கள் என்ற நிலை வந்துவிட்டது.

படிப்பகம்

## பம்பாய் குண்டு வெடிப்பு பயங்கரம்:

# இந்துவெறி பாசிச அட்டூழியத்தின் எதிர்விளைவு!

***அயோத்தியில் பாபர் மசூதியை இடித்து, வட மாநிலமெங்கும் பயங்கரவாதக் கலவரங்களைக் கட்டவிழ்த்துவிட்டு முஸ்லீம்களை நரவேட்டையாடியது இந்துவெறி பாசிச கும்பல். இதற்குப் பழிவாங்கும் நடவடிக்கையாகவே, உலகில் இதுவரை காணாத மிகக் கொடூரமான குண்டு வெடிப்புச் சம்பவங்கள் பம்பாயில் நடந்துள்ளன.***

அயோத்தி மசூதி இடிப்பைத் தொடர்ந்து, இரு மாதங்களுக்கு மேலாக நீடித்த கலவரத்தினால் நிலைகுலைந்துபோன பம்பாய் மக்கள் அதிலிருந்து மீள்வதற்குள்ளாகவே தாங்கொணா துயரம் அவர்களை மீண்டும் தாக்கியுள்ளது. கடந்த மார்ச் 12-ம் தேதியன்று நண்பகலில் பம்பாயின் தெற்கிலிருந்து வடக்காக அடுத்தடுத்து 13 இடங்களில் நடந்த மிகக் கொடூரமான குண்டு வெடிப்பினால் 500-க்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டுள்ளனர். 1,000-க்கும் மேலானோர் குற்றுயிரும் கொலையுயிருமாக உயிருக்குப் போராடிக் கொண்டிருக்கின்றனர். இந்தியாவின் வர்த்தகத் தலைநகரமான பம்பாயின் பல மாடிக் கட்டிடங்கள் நொறுங்கி விழுந்து மயான பூமியாய் காட்சியளிக்கிறது.

தெருவில் நடந்து சென்றவர்கள், பேருந்தில் பயணம் செய்தவர்கள், ஓட்டலில் உணவருந்திக் கொண்டிருந்தவர்கள், கடைகளில் பொருட்களை வாங்கிக் கொண்டிருந்தவர்கள் — யாருமே தப்பவில்லை. கண்ணிமைக்கும் நேரத்திற்குள் எல்லாமே முடிந்துவிட்டது. மாண்டு போனவர்களை அடையாளம் காண முடியாத அளவுக்கு அங்கங்கள் பிய்த்தெறியப்பட்டு இரத்தமும் சதையுமாக எங்கும் சிதறிக் கிடந்தது. இடிபாடுகளில் சிக்கி உயிருக்குப் போராடிக் கொண்டிருந்தவர்களின் மரண ஓலம் எங்கும் எதிரொலித்தது. தீயும் புகையும் ஓங்கி உயர்ந்து சூரியனையே மறைத்தது. மார்ச் 12 — பம்பாய் நகர மக்களை மாளாத் துயரில் ஆழ்த்திய கறுப்பு வெள்ளிக் கிழமையாகியது.

பிணக்குவியலில் தனது மகனை அடையாளம் காண முடியாமல் விம்மித் தவித்தார் ஒரு தாய்; தனது மனைவியின் பிணத்தை அடையாளம் காண முடியாமல் அவர் உடுத்தியிருந்த புடவையின் நிறத்தைக் கொண்டு ஊகித்து சதைக் கோளங்களை அள்ளிச் சென்று துக்கம் தொண்டையை அடைக்க இறுதிச் சடங்கைச் செய்தார் ஒரு கணவர். வேறொரு பிணத்தின் கை, கால்களுடன் தனது மகனின் சிதைந்த உடலைப் பெற்ற தந்தை, உருவமே இல்லாமல் வெறும் சதைக் கோளங்களைப் பெற்ற சகோதரன், தெருவில் விளையாடிக் கொண்டிருந்த தமது குழந்தையைக் காணாமல் இடிபாடுகளின் நடுவே கண்ணீர் மல்க தவித்துக் கொண்டிருந்த பெற்றோர் என தாங்கொணா துயரத்தில் மூழ்கி பம்பாய் நகரமே மௌனத்தில் ஆழ்ந்து மரத்துப் போனது.

பம்பாயின் தென்முனையிலுள்ள பங்குச் சந்தை கட்டிடம், ஐந்து நட்சத்திர சென்டார், சீராக் ஓட்டல்கள், ஏர்-இந்தியா தலைமை அலுவலகம், சிவசேனா கட்சித் தலைமையகம், இரு சினிமா திரையரங்குகள், விக்டோரியா முனை அருகிலுள்ள கட்டிடம், பேருந்து என இரண்டு மணி நேரத்திற்குள் 13 இடங்களில் இக் குண்டு வெடிப்புகள் நிகழ்ந்துள்ளன. இக் குண்டுகள் அனைத்தும் ஆர்.டி.எக்ஸ். (RDX) அல்லது "செம்டெக்ஸ்" எனப்படும் அதிநவீன சக்தி வாய்ந்த பிளாஸ்டிக் வகை குண்டுகளாகும். ஒரு பிஸ்கட் அளவுள்ள குண்டு 12 பேரைக் கொல்லக்கூடிய அளவுக்கு சக்தி வாய்ந்தது. வெடிகுண்டுச் சோதனைக் கருவிகளைக் கொண்டு இந்த வகைக் குண்டுகளை எளிதில் கண்டறியவும் முடியாது. இதனால் சர்வதேச பயங்கரவாதக் குழுக்களும், இரகசிய உலக மா∴பியாக்களும் இவ்வகை குண்டுகளை எளிதில் கடத்திச் சென்று தமது நோக்கங்களைச் சாதித்துக் கொள்கின்றனர். ராஜீவைக் கொல்ல புலிகளால் பயன்படுத்தப்பட்ட குண்டும், அண்மையில் அமெரிக்காவின் நியூயார்க் நகரில் வெடித்த குண்டும் இந்த வகையைச் சேர்ந்ததாகும்.

இக் குண்டு வெடிப்பை நிகழ்த்திய பயங்கரவாதிகள், கார்களில் குண்டுகளை வைத்து தொலைக் கட்டுப்பாட்டு முறையின் மூலம் வெடிக்கச் செய்துள்ளனர். இக் குண்டுகள் மற்றும் அவற்றை வெடிக்கச் செய்ய பயன்படுத்திய கார்கள், கூலிப் படைகளைக் கணக்கிட்டுப் பார்த்தால் கோடிக் கணக்கில் இப் பேரழிவுக்குச் செலவிடப்பட்டுள்ளது என்பதை வெடிகுண்டு தகர்ப்பு போலீசாரே ஒப்புக் கொள்கின்றனர். அதிலும் குறிப்பாக, பங்குச் சந்தைக் கட்டிடம், இந்திய விமான தலைமை அலுவலகம், நட்சத்திர ஓட்டல்கள், நகரின் நெரிசல் மிக்க இடங்களில் குண்டு வெடிப்பை நிகழ்த்தியதன் மூலம் இந்தியாவின் பொருளாதாரக் குறியிடங்களைத் தாக்குவதையே இப் பயங்கரவாதிகள் நோக்கமாகக் கொண்டுள்ளனர். இதன் மூலம் இந்திய அரசுக்கு எதிரான பயங்கரவாத யுத்தப் பிரகடனத்தையே அவர்கள் அறிவித்துள்ளனர்.

தாவூர் இப்ராஹிமின் கையாள் யாகூப் மேமன்.



இக் குண்டு வெடிப்பை நிகழ்த்தியவர்கள் விடுதலைப் புலிகள் அல்லது சீக்கிய பயங்கரவாதிகளாக இருக்கலாம் என்று ஆரம்பத்தில் சந்தேகித்த இந்திய அரசு, இப்போது பாகிஸ்தான் உளவுப் படையினர் தமது இந்தியக் கைக்கூலிகளைக் கொண்டு இத்தாக்குதலை நடத்தியுள்ளதாக குற்றம் சாட்டுகிறது. துபாய்க்கு தப்பியோடிவிட்ட பம்பாயின் கிரிமினல் மா∴பியா தலைவனான தாவூத் இப்ராஹிமின் உதவியோடு இச்சதி வேலை நடந்துள்ளதாகக் கருதுகிறது.

இப் பயங்கரவாதச் சதியை அரங்கேற்றிய குற்றவாளிகளான மேமன் சகோதரர்கள், குண்டு வெடிப்புக்கு சற்று முன்பு துபாய்க்குப் பறந்தோடிவிட்டனர். யாரும் சந்தேகிக்க முடியாதபடி கடத்தல் தொழிலில் ஈடுபட்டு வந்த இச் சகோதரர்கள் தாவூத் இப்ராஹிமின் நம்பகமான எடுபிடிகள் என்று கருதப்படுகிறது. குண்டு வெடிப்பு நிகழ்ந்த வெள்ளியன்று காலையில் இவர்களது குடியிருப்பிலிருந்து அடுக்கடுக்கான பெட்டிகள் கார்களில் ஏற்றிச் செல்லப்பட்டதைக் கொண்டும், குண்டு வெடிப்புக்குப் பின்னர் குண்டுகளுடன் தெருவில் அனாதையாக நின்ற காரின் உரிமையாளர்கள் மேமன் சகோதரர்கள்தான் என்பதைக் கொண்டும், இவர்களது வீட்டில் கைப்பற்றப்பட்ட லட்சக்கணக்கான ரூபாய்கள், தங்கக் கட்டிகளைக் கொண்டும் இவர்களே பிரதான குற்றவாளிகள் என்று இந்திய அரசு குற்றம் சாட்டி, அவர்களைக் கைது செய்து ஒப்படைக்குமாறு துபாய் அரசிடம் கோரியது. ஆனால் அதற்கு முன்னர் அவர்கள் அங்கிருந்து தப்பிச் சென்று விட்டனர். அவர்கள் பாகிஸ்தானுக்குச் சென்றிருக்கலாம் என்று சந்தேகித்து அவர்களைக் கைது செய்து ஒப்படைக்க அந்நாட்டு அரசின் உதவியை இந்தியா கோரியுள்ளது. பம்பாய் குண்டு வெடிப்புச் சம்பவம் குறித்து தனது ஆழ்ந்த வருத்தத்தைத் தெரிவித்துள்ள பாக். அரசு, குற்றவாளிகள் தமது



www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com



பம்பாய் பயங்கரத்தின் கோரக்காட்சி: தெருவில் நடந்து சென்றவர்கள், பேருந்தில் பயணம் செய்தவர்கள், ஒட்டலில் உணவருந்தியவர்கள், அலுவலக சிப்பந்திகள் என யாருமே தப்பவில்லை!

நாட்டுக்கு வந்தால் கைது செய்து ஒப்படைப்பதாக உறுதியளித்துள்ளது.

★★★

பம்பாய் பயங்கரவாதச் செயலுக்கு அடிப்படைக் காரணமே அயோத்தி மசூதி இடிப்பும் அதைத் தொடர்ந்து இந்து வெறியர்கள் வடமாநிலமெங்கும் நடத்திய நரவேட்டையும்தான். இந்துவெறி பாசிச பயங்கரத்துக்குப் பழிக்குப் பழிவாங்கும் நோக்கத்தோடுதான் இக்குண்டு வெடிப்புகள் நடந்துள்ளன.

பாபர் மசூதியை இந்து வெறியர்கள் இடித்துத் தரைமட்டமாக்கியதோடு, கிரிமினல் முறையில் திடீர் ராமன் கோயிலைக் கட்டியமைத்துக் கொண்ட பாசிச நடவடிக்கையானது இந்தியா மட்டுமின்றி, உலகெங்குமுள்ள முஸ்லீம்கள் மத்தியில் வெறுப்பையும் ஆத்திரத்தையும் கிளறிவிட்டுள்ளது. இந்தியா மீது அவர்கள் கொண்டிருந்த மதிப்பும் நம்பிக்கையும் தகர்ந்து போனது. மசூதி இடிக்கப்பட்ட உடனேயே வங்கதேசம், பாகிஸ்தான், துபாய், சவூதி அரேபியா, ஈரான், பிரிட்டன் முதலான நாடுகளிலுள்ள முஸ்லீம்கள் தமது கடுமையான எதிர்ப்பைக் காட்டியதோடு, சில இடங்களில் இந்து கோயில்களைத் தகர்த்து தமது அதிருப்தியை வெளிப்படுத்தினர்.

பாபர் மசூதி இடிக்கப்பட்டதற்கு வார்த்தை அளவில் வருத்தம் தெரிவித்து நாடகமாடிய இந்துவெறியர்கள் அடுத்த சில நாட்களிலேயே அதை நியாயப்படுத்தி "அவமானச் சின்னம் ஒழிந்தது" என்று கொக்கரித்தனர். மீண்டும் மசூதியைக் கட்டித் தருவதாக வாக்களித்த காங்கிரசுக் கயவாளிகள் அதைக் கிடப்பில் போட்டுவிட்டு, இந்துவெறியர்களின் நிர்பந்தங்களுக்குப் பணிந்து திடீர் ராமன் கோயிலில் 24 மணி நேர வழிபாட்டுக்கும் அனுமதியளித்துள்ளனர்.

எல்லாவற்றையும்விட, மசூதி இடிப்பைத் தொடர்ந்து வடமாநிலமெங்கும் ஒரு மாதத்துக்கும் மேலாக இந்துவெறி குண்டர்கள் முஸ்லீம் மக்கள் மீதும் அவர்களது வர்த்தக நிலையங்கள் மீதும் தாக்குதல் நடத்தினர். முஸ்லீம் பெண்களைக் கதறக் கதறக் கற்பழித்து எரியும் தீயில் அவர்களை வீசியெறிந்து கோரத் தாண்டவமாடினர். குழந்தைகள், முதியவர்களைக்கூட ஈவிரக்கமின்றி வெட்டிக் கொன்று இந்துவெறி பாசிச பயங்கரத்தைக் கட்டவிழ்த்துவிட்டனர். போலீசாரோ அவர்களோடு சேர்ந்து கொண்டு முஸ்லீம்களை நரவேட்டையாடினர். இந்திய அரசோ இந்து வெறியர்கள் மீது எந்த நடவடிக்கையுமின்றி கைகட்டி நின்று வேடிக்கை பார்த்தது.

இதனால் வெறுப்பும் ஆத்திரமும் கொண்டுள்ள முஸ்லீம்களில் சிலர் பயங்கரவாதப் பாதைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். சட்டபூர்வ வழிகளிலோ, ஜனநாயக முறைகளிலோ இந்தியாவில் இனி முஸ்லீம்களுக்குப் பாதுகாப்போ வாழும் உரிமையோ கிடையாது என்கிற விரக்தியினால் ஏற்பட்ட விளைவு இது. மேமன் குடும்பத்தினர் கூட பம்பாய் கலவரத்தில் தமது வர்த்தக நிலையங்களையும் சொத்துக்களையும் இழந்து பாதிக்கப்பட்டவர்கள்தான். இத்தகையோரைப் பயன்படுத்திக் கொண்டு அன்னிய நாட்டு இஸ்லாமிய பயங்கரவாத சக்திகள் பழிக்குப் பழிவாங்கும் நோக்கத்துடனேயே இக் குண்டு வெடிப்பை நடத்தியுள்ளனர். இக் குண்டுகளின் தன்மையும் அதற்காக கோடிக்கணக்கில் செலவிட்டுள்ளதையும் பார்க்கும்போது இது மேற்காசிய இஸ்லாமிய பயங்கரவாதிகளின் தாக்குதலாக அல்லது பாகிஸ்தானின் கைவரிசையாகவே இருக்கும் என்பது தெளிவாகிறது.

மேலும், இக்குண்டு வெடிப்பை நிகழ்த்திவிட்டு தப்பியோடிய மேமன் சகோதரர்கள் ரகசிய உலகப் பின்னணி கொண்டவர்கள் என்றாலும்கூட, கோடிக்கணக்கில் செலவிடும் அளவுக்கு அவர்கள் குபேரர்களோ, மாஃபியா தலைவர்களோ அல்ல. தாவூத் இப்ராஹிம் போன்ற ரகசிய உலகப் பேர்வழிகளின் உதவியோடு மேமன் சகோதரர்களை தமது நோக்கங்களுக்கு இஸ்லாமிய பயங்கரவாதிகள் பயன்படுத்திக் . கொண்டுள்ளனர் என்பதே உண்மை.

ஆனால், இப் பயங்கரவாதச் செயலுக்கான அடிப்படையான காரணத்தையும் நோக்கத்தையும் மூடி மறைத்துவிட்டு, கள்ளக் கடத்தலை முடக்கும் வகையில் தற்போதைய பட்ஜெட் அமைந்துள்ளதால் ரகசிய உலகப் பேர்வழிகள் இந்தியாவின் பொருளாதாரத்தைச் சிதைக்க இவ்வாறு செய்துள்ளனர் என்று இந்திய அரசு திசை திருப்புகிறது. மறுபுறம், இந்தியாவின் பொருளாதார முன்னேற்றத்தையும் அணு ஆயுதத் தயாரிப்புக்கான ஆற்றலையும் கண்டு

படிப்பகம்

www.padippakam.com

# ஜெயாவுக்கு ஒரு வீரமணி ஜோதிபாசுவுக்கு ஒரு ரஷீத்கான்

பம்பாய் குண்டு வெடிப்பைத் தொடர்ந்து கல்கத்தாவில் மார்ச் 16 அன்று நள்ளிரவில் நெரிசல்மிக்க குடியிருப்புப் பகுதியான போவ் பஜாரில் சக்தி வாய்ந்த குண்டுகள் வெடித்து 100-க்கும் மேற்பட்டோர் மாண்டனர். நூற்றுக்கணக்கானோர் படுகாயமடைந்தனர். பலமாடிக் கட்டிடம் ஒன்று தரைமட்டமாகியது. அருகிலுள்ள கட்டிடங்களுக்கும் பெருத்த சேதம் ஏற்பட்டது.

இக்குண்டு வெடிப்புக்குக் காரணமானவனும், நொறுங்கிய கட்டிடத்தின் உரிமையாளனுமான ரஷீத்கான் என்பவன் கல்கத்தாவின் பிரபலமான சூதாட்ட கிரிமினல் கும்பல் தலைவன். அதுமட்டுமல்ல; அவன் வங்கத்தை ஆளும் 'மார்க்சிஸ்டு'களின் நெருங்கிய கூட்டாளி; புரவலன் என்ற உண்மையும் இப்போது வெளிவந்துள்ளது.

சட்டவிரோதமான சூதாட்டம் உட்பட கொலை, கொள்ளை, ரவுடித்தனங்களையே தொழிலாகக் கொண்டு கல்கத்தாவின் மா∴பியா தலைவனாக வளர்ந்த ரஷீத்கானின் ஒரு நாளைய வருமானம் மட்டும் 2 லட்சரூபாய்கள். 'மார்க்சிஸ்டு' கட்சியின் தலைவர்களும், உயர் போலீசு அதிகாரிகளும் அவனது நெருங்கிய கூட்டாளிகளான பிறகு, 'இடதுசாரி' கூட்டணி ஆட்சியில் அவனது தொழில் வேர்விட்டுப் பரவியது. கல்கத்தாவிலுள்ள 24 போலீசு நிலையங்கள் அவனது சட்டைப் பையில் இருந்தன. தனது கிளைகளை பல மாவட்டங்களிலும் நிறுவியிருந்த அவன், தனக்கு வேண்டிய போலீசு அதிகாரிகளை தனது தொழில் பகுதிகளில் நியமித்துக் கொள்ளவும், தனக்கு ஒத்துழைக்காதவர்களை இடமாற்றம் செய்யுமளவுக்கும் 'மார்க்சிஸ்டு' அரசில் செல்வாக்குப் பெற்றிருந்தான்.

குண்டு வெடிப்பில் தரைமட்டமாகிய போவ்பஜார் கட்டிடம், ரஷீத்கானின் சூதாட்ட தலைமை அலுவலகம் மட்டுமல்ல; 'மார்க்சிஸ்டு' அரசியல்வாதிகள், உயர் போலீசு அதிகாரிகளுக்கு இரவு விருந்தளிக்கும் நட்சத்திர விடுதியாகவும் இருந்துள்ளது. கட்சிப் பேரணிக்கு ஆள் திரட்டுவது, வன்முறையைக் கட்டவிழ்த்து விட்டு கள்ள ஓட்டுப் போடுவது, எதிரிகளைத் தாக்கி அழிப்பது முதலான நடவடிக்கைகளுக்காக 'மார்க்சிஸ்டு' தலைவர்கள் இந்தக் கட்டிடத்தில் ரஷீத்கானுடன் பேரம் நடத்துவது வழக்கம். இவற்றை விசுவாசமாக நிறைவேற்றிய அவன், 'மார்க்சிஸ்டு' கட்சிக்குத் தேவைப்படும் போதெல்லாம் ஏராளமாக நன்கொடையும் அளித்துள்ளான். இதற்குக் கைமாறாக, ரஷீத்கானுக்கும் அவனது குண்டர்களுக்கும் நவீனரக துப்பாக்கிகள் வைத்துக் கொள்ள 'மார்க்சிஸ்டு' அரசு சட்டபூர்வ உரிமங்களை நூற்றுக்கணக்கில் வழங்கியுள்ளது.

"தனது கிரிமினல் நடவடிக்கைகளுக்காக ஏராளமான குண்டுகளை போவ்பஜார் கட்டிடத்தில் ரஷீத்கான் பதுக்கி வைத்திருந்த போது அவை வெடித்து சிதறி பேரிழப்பை ஏற்படுத்தியுள்ளன. மற்றபடி, இதற்கும் பம்பாய் குண்டு வெடிப்பு நிகழ்ச்சிக்கும் எவ்விதத் தொடர்பும் இல்லை" என்று போலிக் கம்யூனிஸ்டு அரசு விளக்கமளித்துள்ளது. ஆனால், இக்குண்டு வெடிப்புச் சம்பவத்துக்கு ஒரு வாரத்துக்கு முன்னர் ரஷீத்கான் மீதான பல்வேறு புகார்களை ஒட்டி அவனது பங்களாக்களை சோதனை செய்த போலீசார் கள்ளத்தனமான ஆயுதங்கள் எதுவுமே இல்லை என்று நற்சான்றிதழ் கொடுத்துள்ளனர்.

தமிழகத்தில் பாசிச ஜெயாவுக்கு சாராய உடையார், மதுசூதனன், வீரமணி, ஈசுவரமூர்த்தி முதலான ரகசிய உலக கிரிமினல் பேர்வழிகள் புரவலர்களாக இருக்கிறார்கள் என்றால், ஜோதிபாசுவுக்கு ஒரு ரஷீத்கான் இருக்கிறான் என்று 'மார்க்சிஸ்டு'கள் இனி மார்தட்டிக் கொள்ளலாம். ஊழலிலும் ஒடுக்கு முறையிலும் மூழ்கி இன்னுமொரு முதலாளித்துவக் கட்சியாக சீரழிந்துவிட்ட போலிக் கம்யூனிஸ்டுகளிடம் வேறு எதை எதிர்பார்க்க முடியும்?

**கல்கத்தா குண்டு வெடிப்பில் பாதிக்கப்பட்ட அப்பாவி;**
**உள்ளே: மா∴பியா தலைவன் ரஷீத்கான் - 'மார்க்சிஸ்டு'களின் தோழன்.**



பொறாமை கொண்டுள்ள பாகிஸ்தான் தனது உளவு நிறுவனத்தின் மூலம் இச்சதிச் செயலை நிகழ்த்தியுள்ளதாக குற்றம் சாட்டுகிறது.

நாட்டை ஏகாதிபத்தியங்களிடம் மறு அடகு வைத்து, பொருளாதாரத்தை காங்கிரசு துரோகிகள் திவாலாக்கிவிட்ட பிறகு அதை இன்னொரு நாடு வந்து சீர்குலைக்க வேண்டிய அவசியமில்லை. மேலும், அர்சத் மேத்தா முதலான பங்குச் சந்தை தரகர்கள் கோடிக் கணக்கில் மோசடி செய்து பொருளாதாரத்தை சீர்குலைத்ததை வசதியாக மறைத்துவிட்டு, பம்பாய் குண்டு வெடிப்பினால் பொருளாதாரம் நொறுங்கிவிட்டதாக மாய்மாலம் செய்கின்றனர்.

இந்து வெறியர்களோ தமது குற்றங்களை மூடி மறைத்து திசைதிருப்பவும், இந்து வெறியோடு தேசிய வெறியையும் கிளறிவிட்டு ஆதாயமடையவும் பம்பாய் குண்டு வெடிப்புச் சம்பவத்துக்கு பாகிஸ்தான் மீது பழிசுமத்தி தொடர்ந்து அவதூறு செய்து வருகின்றனர். பம்பாய் குண்டு வெடிப்புக் கோரத்தையும் அழிவையும் அவலத்தையும் சொல்லி, தமது இந்துவெறி பயங்கரவாத அட்டூழியங்களை மக்களிடமிருந்து மறைக்க முயற்சிக்கின்றனர். "அயோத்தி சம்பவத்துக்கும் பம்பாய் குண்டு வெடிப்புக்கும் எந்த வகையிலும் சம்பந்தமில்லை; இரண்டும் வேறு வேறானவை. நாட்டின் ஒருமைப்பாட்டை சீர்குலைத்து சிதறடிக்கும் நோக்கத்தோடு பாகிஸ்தானின் உளவுப் படையினர் திட்டமிட்டு இச்சதியைச் செய்துள்ளனர்" என்கிறார் இந்துவெறி பாசிசத் தலைவர் அத்வானி.

இதற்கு ஒத்தூதும் வகையில், பாகிஸ்தானை பயங்கரவாத நாடாக அறிவித்து உலக அரங்கில் தனிமைப்படுத்த வேண்டும் என்று காங்கிரசுப் பெருச்சாளிகள் கூச்சவிட்டு வருகின்றனர். நாட்டின் ஐக்கியத்துக்கும் ஒருமைப்பாட்டுக்கும் ஆபத்து ஏற்பட்டுள்ளது என்று அச்சுறுத்தி மக்களை தமக்கு ஆதரவாகத் திரட்டிக் கொள்ள முயற்சிக்கின்றனர். இதற்காகவே உளவுத் துறையினரைக் கொண்டு பம்பாயின் பல இடங்களில் ஆயுத - வெடிமருந்துப் புதையலைப் பிடித்ததாக நாடகங்களை நடத்தியும் பிற பெரு நகரங்களில் குண்டுப் புரளியைக் கிளப்பி பீதியூட்டியும் வருகின்றனர். இதற்கு எல்லா ஓட்டுக் கட்சிகளும் உடன்பட்டு நிற்கின்றன.

ஆனால், இந்து வெறியர்களோ அதன் கூட்டாளிகளான காங்கிரசோ பாகிஸ்தான் மீது பழிபோட எந்த வகையிலும் அருகதை கிடையாது. பம்பாய் குண்டு வெடிப்புச் சம்பவம், இந்துவெறி பாசிச அட்டூழியத்தின் எதிர்விளைவு. சிறுபான்மை மக்களின் வழி



படிப்பகம்

www.padippakam.com

பாட்டு உரிமையை மறுத்தும், அவர்களது வாழும் உரிமையையும் மறுத்தும் நரவேட்டையாடிய இந்து வெறி பாசிசத்துக்குப் பழிக்குப் பழிவாங்கும் நடவடிக்கை. அந்த வகையில் பம்பாய் குண்டுவெடிப்பு பேரழிவுக்குப் பொறுப்பேற்க வேண்டிய முதல் குற்றவாளிகள் இந்து வெறியர்களும் காங்கிரசு துரோகிகளும்தான்.

எனவே, இந்து வெறியர்கள் மற்றும் அவர்களது கூட்டாளிகளான காங்கிரசுத் துரோகிகளின் சூழ்ச்சிகளுக்கும் மக்கள் பலியாகிவிடக் கூடாது. அவ்வாறு செய்வது இந்து வெறியர்களின் நோக்கத்தை நிறைவேற்றுவதாகவே முடியும். ''இந்துக்களால் மட்டுமே அமைதியையும் ஒருமைப்பாட்டையும் காக்க முடியும்; முஸ்லீம்கள் என்றால் பயங்கரவாதிகள், பாகிஸ்தானின் கைக்கூலிகள்'' என்கிற இந்துவெறி பாசிசப் பிரச்சாரம் மேலோங்கி, இந்து - முஸ்லீம் மக்களிடையே பகைமையையும் வெறுப்பையும் வளர்த்து நாட்டை ரத்த வெள்ளத்தில் மூழ்கடித்து விடும்.

அதேசமயம், இந்துவெறி பாசிசத் தாக்குதலிலிருந்து தம்மைத் தற்காத்துக் கொள்ள சிறுபான்மை முஸ்லீம் மக்கள், இஸ்லாமிய பயங்கரவாத சக்திகளிடம் தஞ்சம் புகக் கூடாது. இந்துவெறி பாசிஸ்டுகளின் அட்டூழியங்களால் ஏற்பட்ட அவமானக் கறையைப் போக்க உடனடியான, தற்காலிகத் தீர்வு என்ற முறையில் பயங்கரவாதத்துக்குப் பலியாகிவிடவும் முடியாது. அவ்வாறு செய்வது பெரும்பான்மை இந்துக்களிடமிருந்து முஸ்லீம்களை மேலும் தனிமைப்படுத்தவே செய்யும்; இந்து வெறியர்களின் நோக்கத்தை நிறைவேற்ற உதவுவதாகவே முடியும்.

எனவே, இந்து — முஸ்லீம் உழைக்கும் மக்கள் இஸ்லாமிய அடிப்படைவாத - பயங்கரவாத சக்திகளையும், இந்துவெறி பாசிஸ்டுகளின் சூழ்ச்சிகள் - சதிகளையும் அம்பலப்படுத்தி முறியடிக்க வேண்டும். படர்ந்துவரும் இந்து வெறி பாசிச அபாயத்துக்கு எதிராக மதச்சார்பற்ற புரட்சிகர அமைப்புகளின் தலைமையில் பெரும்படையாய் திரண்டெழ வேண்டும்.

○ மனோகரன்

*டெல்லி விமானக் கடத்தல்:*

# இந்திய உளவுத்துறை நடத்திய பயங்கரவாத நாடகம்

கடந்த மார்ச் 20-ம் தேதியன்று நடந்த டெல்லி விமானக் கடத்தல் சம்பவம், பாகிஸ்தான் மீது பழிபோடுவதற்காக இந்திய உளவுத் துறையினர் நடத்திய சதித்திட்டம் என்பதை அதன் அவசரகோல கேலிக்கூத்தான நாடகமே அம்பலப்படுத்துகிறது.

192 பயணிகளுடன் டெல்லியிலிருந்து சென்னை நோக்கிச் சென்று கொண்டிருந்த விமானத்தை நடுவானில் ஹரிசிங் என்பவன் குண்டு வைத்து தகர்க்கப் போவதாக அச்சுறுத்தினான். பாகிஸ்தானுக்கு விமானத்தைத் திருப்பு என்று அவன் விடுத்த கோரிக்கையை ஏற்று, விமானிகள் லாகூர் விமான நிலையத்தின் மீது பறந்து தரையிறங்க அனுமதி கேட்டனர். ஆனால் இக்கடத்தல் விமானத்தைத் தரையிறக்க பாகிஸ்தான் அனுமதி மறுத்துவிட்டது. எனவே பஞ்சாபிலுள்ள அமிர்தசரஸ் விமான நிலையத்தில் இக்கடத்தல் விமானம் தரையிறங்கியது. பாபர் மசூதி இடிக்கப்பட்டதையும் அதைத் தொடர்ந்து நாடெங்கும் நடந்த வகுப்புக் கலவரங்களையும் தான் எதிர்ப்பதாகவும், ராவ் அரசு எல்லா வகையிலும் தோல்வியடைந்து விட்டதால் அன்று சுதந்திரப் போராட்ட வீரர்கள் செய்ததைப் போல தானும் இத்தகைய வன்முறைப் பாதையில் இறங்கியதாகவும் அவன் விளக்கமளித்தான். பின்னர் போலீசு உயரதிகாரிகள் நடத்திய சமரசப் பேச்சு வார்த்தையைத் தொடர்ந்து அவன் சரணடைந்தான் என்று செய்திகள் வெளியாகியுள்ளன.

விமானத்தைக் கடத்திய அரிசிங்;
இந்திய உளவுப்படை நடத்திய பயங்கரவாத நாடகத்தின் கதாநாயகன்.



வேடிக்கை என்னவென்றால் இவ்விமானக் கடத்தல்காரனிடம் ஆயுதங்கள் எதுவுமே இல்லை. அவனது பெட்டியில் முடி உலர்த்தும் கருவிதான் இருந்துள்ளது. மேலும், அயோத்தி சம்பவத்தை அடுத்து இக்கடத்தல் நடந்திருந்தால்கூட நம்புவதற்கு ஓரளவாவது இடமுண்டு. ஆனால், மூன்று மாதங்களுக்குப் பிறகு அயோத்தி சம்பவத்தைக் காரணம் காட்டி இக்கடத்தலைச் செய்வதிலிருந்தே இது காதில் பூ சுற்றும் வேலை என்று அம்பலமாகி விடுகிறது. அடுத்து, கடத்தல்காரன் உருப்படியாக கோரிக்கைகளை முன்வைத்து பேரங்கள் எதுவும் நடத்தவில்லை. 7 மணி நேரமாகியும் அதிரடிப் படையினர் எந்தவொரு சாகசவாத நடவடிக்கையிலும் இறங்கவில்லை. எல்லாவற்றையும்விட, பஞ்சாபில் அரச பயங்கரவாதப் படுகொலைகளை நடத்தும் டி.ஜி.பி. கில்-லை அமைதியை நிலைநாட்டியவர் என்று பாராட்டி அவரிடம் சரணடைய விரும்புவதாகக் கூறினானாம்! கடத்தல் நடந்த முறையும் கடத்தல்காரனின் தன்மையும் செயல்பாடுகளுமே இது உளவுத் துறையினர் திட்டமிட்டு அரங்கேற்றிய அவசரகோல நாடகம் என்பதை மெய்ப்பிக்கின்றன.

உளவுத் துறையினர் எதிர்பார்த்தபடி, லாகூரில் விமானத்தை இறக்க பாகிஸ்தான் சம்மதித்து இருந்தால், உடனே பாகிஸ்தான் மீது பழிசுமத்தி அதுதான் இத்தகைய பயங்கரவாத நடவடிக்கைகளில் ஈடுபடுகிறது என்று குற்றம் சாட்டவும் இந்துவெறியையும் தேசிய வெறியையும் கிளறிவிட்டு ஆதாயமடையவும் ஆளும் கும்பலுக்கு வாய்ப்பாக அமைந்திருக்கும். பம்பாய் குண்டு வெடிப்புச் சம்பவத்தைத் தொடர்ந்து, பாகிஸ்தானைப் பயங்கரவாத நாடாக சித்தரித்து வரும் இந்துவெறியர்களின் நச்சுப் பிரச்சாரத்துக்கு இது முக்கிய துருப்புச் சீட்டாக மாறியிருக்கும். ஆனால் பாகிஸ்தான் விமானத்தை தரையிறக்க அனுமதி மறுத்துவிட்டதால், தனது கைக்கூலியைக் கொண்டு இந்திய உளவுத்துறை பயங்கரவாதிகள் நடத்திய இக்கடத்தல் நாடகம் கடைசியில் பிசுபிசுத்துப் போய் விட்டது.

★ ○ ★

படிப்பகம்

www.padippakam.com

# பா.ஜ.க.—காங்.—அ.தி.மு.க. இந்து வெறியர்களுக்குள் கூட்டணி காட்சிகள்!

**மூன்று கட்சிகளின் செயல்பாடுகள் முன்னுக்குப்பின் முரணானவையாகவும், பதவி - சுயநலவெறி கொண்டதாகவும், மக்கள் விரோத, இந்துவெறி, பாசிச - பயங்கரவாதத் தன்மையுடையனவாகவும் உள்ளன.**

ஜெயலலிதா: காங்கிரசோடு உறவு இல்லை என அறிவித்த பின், தமிழகத்தில் ஆட்சிக் கவிழ்வதும் தேர்தல் - கூட்டணி அறிவிப்பதும்தான் பாக்கி என்கிற ரீதியில் பீதியும் - கிசுகிசுக்களும் அரசியலை ஆக்கிரமித்துக் கொண்டன. ஒட்டுப் பொறுக்கி அரசியல்வாதிகளும் கிசுகிசு வார ஏடுகளும், காலை, மாலை மஞ்சள் பத்திரிகைகளும் சுருதி சுத்தமாக தமது கைவண்ணத்தைக் காட்டுகின்றன.

அ.தி.மு.க. ஆட்சி மீது ஊழல் பட்டியல் தயாரித்து கவர்னரிடம் கொடுக்கப் போவதாக வாழப்பாடி ராமமூர்த்தி அறிக்கை விட்டதும், பாராளுமன்றத்தில் காங். அரசுக்கு எதிராக அ.தி.மு.க. வாக்களிக்கத் தயாரா என மத்திய அமைச்சர் அருணாச்சலம் சவால் விட்டதும் ஜெயாவின் கோபத்தை உக்கிரமாக கிளறிவிட்டன. போதாதற்கு மறுப்பு எதுவும் தெரிவிக்காமலும் வாழப்பாடி மீது அ.தி.மு.க. நடவடிக்கை எடுக்கக் கோரியும் எவ்வித அசைவும் இல்லாமல் நரசிம்மராவ் மௌனம் சாதித்தார். இவற்றையே காரணமாகக் காட்டி மார்ச் 9-ந் தேதி காங்கிரசுடன் உறவு இல்லையென அறிவித்தார், ஜெயலலிதா. காங். ஆட்சிக்கு பாண்டிச்சேரியிலும் பாராளுமன்றத்திலும் கொடுத்து வந்த ஆதரவை திரும்பப் பெற்றுக் கொண்டு அ.தி.மு.க. எதிர்ப்புக் கொடி தூக்கியுள்ளது. காங். கட்சியையும் ஆட்சியையும் தாக்கி அ.தி.மு.க. தலைவர்களின் பேச்சும், அறிக்கையும் தொடர்ந்து வெளிவருகின்றன.

சேலத்தில் நடந்த தமிழக அரசு விழாவில் மக்கள் நலத் திட்டங்களை எல்லாம் மத்திய அரசு புறக்கணித்தும் அலட்சியப்படுத்தியும் வருவதாக அடுக்கடுக்காக குறை கூறினார், ஜெயலலிதா. பஞ்சாயத்ராஜ் - நகர்பாலிகா திட்டத்தையும் எதிர்த்து, மாநில அரசின் ஜனநாயக உரிமை பறிக்கும் நடவடிக்கை - இரட்டையாட்சி முறை என்று தாக்கிப் பேசினார். ஆனால், இதே திட்டத்தை அன்று ராஜீவ் கொண்டு வந்த பொழுது ஆதரித்த ஒரே கட்சியும் அ.தி.மு.க.தான்! அண்மையில் ராவ் அரசு பஞ்சாயத்ராஜ் - நகர்பாலிகா திட்டத்திற்கு ஆலோசனைக் கூட்டம் நடத்தியபோதும் அ.தி.மு.க. எம்.பிக்கள் எதிர்க்காமல் மௌனம் சாதித்தார்கள். இதேப்போல், இதுநாள் வரை மத்தியில் காங்கிரசின் மக்கள் விரோதக் கொள்கைக்கெல்லாம் தலையாட்டி ஜால்ரா போட்டு ஒத்துழைத்தவர்கள், ஒரே நாளில் எதிர்ப்பாளர்களாக மாறினார்கள். இவை அரசியல் பொறுக்கித் தனத்தைப் படம் பிடித்துக் காட்டுகின்றன.

தி.மு.க. ஆட்சியில் சட்டசபையில் அவமானப் படுத்தப்பட்டதாகவும் ஜனநாயகமோ, பேச சுதந்திரமோ இல்லை என்றும் ஒப்பாரி வைத்த ஜெயா, தன் ஆட்சியில் அதையே ஒருபடி கூடுதலாக செய்து வருகிறார். முன்பு காங். அல்லாத எதிர்க் கட்சி எம்.எல்.ஏ.க்களின் கைவிரல் எண்ணிக்கையிலான எதிர்ப்பை எளிதாக அடக்கினார். இன்று அதே வகையில் பேச எழுந்தாலே கூச்சல்போட்டு முறியடிப்பது உட்பட அனைத்து முறைகளிலும்- தற்போது எதிர்க் கட்சியான காங்கிரசையும் அடக்குகிறார். சட்டசபைக்குள் எதிர்ப்பாளர்கள் கைமீறிப் போனால் 'சிறப்பாக கவனிப்பதற்கென்றே' தாமரைக்கனியை ஜெயா வைத்திருப்பது போதாமல் சட்டசபைக்கு வெளியேயும் குண்டர்களை ஏவி விடுகிறார். காங். எம்.எல்.ஏ., பீட்டர் அல்போன்ஸ் எம்.எல்.ஏ. விடுதியில் சுதாகோபால் எனும் அ.தி.மு.க. இளைஞரணி தலைவர் தலைமையில் குண்டர்களால் தாக்கப்பட்டார். இவர் சட்டசபையில் 'கடுமை'யாகத் தாக்கிப் பேசுகிறார் என்பதே தாக்குதலுக்கான காரணம். ஆனால், சுதாகோபாலும் (கட்சியிலிருந்து வெளியேற்றப்பட்டவராம்) காங்கிரசும் சேர்ந்து நடத்திய நாடகம் இது எனக் கூறினார், ஜெயலலிதா. 'ஆசிட்' புகழ், போலி கஞ்சா வழக்குப் புகழ், தன் கட்சி எம்.எல்.ஏக்களையே தாக்கிய புகழ் கொண்ட ஜெயலலிதாவின் ஆகாசப் புளுகை யாரும் அறியாமல் இல்லை. ஆனால், தன் கட்சிக்காரனையே ''துரோகி'' என நாக்கூசாமல் கூறும் உக்தி புதிய ம்ன்னேற்றம்தான்! மார்ச் 29-ந் தேதி சட்டசபையில், அ.தி.மு.க.வின் ஊழல் தொடர்பாக பேசிக் கொண்டிருந்த காங். எம்.எல்.ஏ. செல்லக்குமாரை தாமரைக்கனி தாக்கினார். இதைக் கண்டித்து காங்கிரசுக்காரர்கள் 4 பேர் அவை நடுவே வந்து கோஷமிட்டார்கள். இதில் தாமரைக்கனிக்கும், காங்கிரசுக்காரர்களுக்கும் சேர்த்து தண்டனை வழங்கினார் சபாநாயகர்.

ஜெயாவின் கையாள் தாமரைக்கனியால் தாக்கப்பட்ட காங். எம்.எல்.ஏ., செல்லக் குமார்.



பா.ஜ.க.-வின் மாநாடு, பொதுக்கூட்டத்திற்கு ஜெயலலிதா அனுமதி தருவதை எல்லோரும் பிரச்சினையாக்குகிறார்கள். மேலும் இது தொடர்பாக தமிழக மக்கள் மத்தியிலும் அதிருப்தி நிலவுகிறது. இவற்றை சரிகட்டுவதற்காகவே ஜெயலலிதா ஹிந்தி எதிர்ப்பு, காவிரி நீர்ப் பிரச்சினை சவடால்களை கட்டவிழ்த்து விடுகிறார். கூடவே இது காங்கிரசை எதிர்க்கும் ஆயுதமாகவும் பயன்படுகிறது. காவிரி நீர்ப் பிரச்சினை முடிந்து பல மாதங்களாகியும் காங்கிரசின் ஓரவஞ்சனையை உணராத ஜெயா, தற்போது உரைத்ததுபோல் கூச்சலிடுகிறார். அரிசி விலையேற்றக் குற்றச்சாட்டு, தமிழக அரசுக்கு நிதி ஒதுக்கீடு குறைவு, புயல்-வெள்ள நிவாரண நிதி ஒதுக்கீடு குறைவு முதலியவற்றை கிளப்பி விட்டு காங்கிரசை மிரட்டி வருகிறார்.

ஜெயலலிதாவின் சலசலப்புக்கு எல்லாம் கிழநரி காங்கிரசு அஞ்சவில்லை; மெதுவாக, சாமர்த்தியமாக காய் நகர்த்தி வருகிறது. தமிழகத் தலைமைகளைக் கொண்டு நெருக்கடி, மத்தியத் தலைமையோ கூட்டணி நீடிக்க விரும்புவதாக சமாதானத் தூது என நாடகமாடுகிறது. ஜெயலலிதாவை எதிர்ப்பதன் மூலம் தமிழக காங்கிரசின் செல்வாக்கை தூக்கி நிறுத்தவும் வேண்டும்; மத்தியில் ஆட்சி நெருக்கடியை தவிர்ப்பதற்கு அ.தி.மு.க.-வின் 11 எம்.பிக்களின் ஆதரவும் தேவை என்ற இரட்டை ஆசை காங்கிரசுக்கு!

ஆனால், நெருக்கடி கொடுத்தே ஜெயாவை தானாக ஓடவைக்க வேண்டும் என்கிற காங்கிரசின் நோக்கத்தில் ஜெயலலிதா கூட்டணி உறவு முறிந்துவிட்டதாக தானாக அறிவிக்கும்படி செய்தது, காங்கிரசுக்குக் கிடைத்த முதல் வெற்றிதான். இதைத் தமிழகத் தலைமைகள் குதூகலமாகக் கொண்டாடினார்கள். மூப்பனாரும், வாழப்பாடியும் தோள்மீது கைபோட்டு எதிர்ப்பு தீர்மானங்கள் போட்டு சந்தோசப்பட்டார்கள். தொகுதிதோறும் பொதுக்கூட்டங்கள், வட்டார மாநாடுகள் நடத்தி அதில் மூப்பனார், வாழப்பாடி இருவரும் கலந்து கொள்வர் என அறிவித்து தமது மகிழ்ச்சி



படிப்பகம்

www.padippakam.com

யைப் பறைசாற்றினார்கள். இவர்களுக்கு மானமும் ரோசமும் இருப்பதாகக் காட்டி, போடும் கூச்சல் எல்லாம் வெற்று ஆரவாரம்தான்!

ஜெயலலிதா ஆட்சியில் எல்லாத் துறைகளிலும் ஊழல் மலிந்துவிட்டதாகவும் விரைவில் இதை வெளிச்சத்திற்குக் கொண்டு வருவதாகவும் காங்கிரசுக்காரர்கள் அறிவித்தார்கள். இவ்வளவு காலம் ஜெயலலிதாவின் ஊழல் நாறியபோது இவர்களுக்கு உரைக்கவில்லை! மூக்கையும் மூளையையும் சேர்த்து ஜெயலலிதாவிடம் அடகு வைத்திருந்தார்களோ என்னவோ தெரியவில்லை!

சட்டசபையில் பேச அனுமதி மறுக்கும் சபாநாயகரைக் கண்டித்தும் காங். எம்.எல்.ஏ. செல்லக்குமாரை தாமரைக்கனி தாக்கியதைக் கண்டித்தும் வெளிநடப்பு செய்தது காங்கிரசு. ஆனால், இதே சபாநாயகர் முன்பு தி.மு.க., பா.ம.க., எம்.ஜி.ஆர்.அ.தி.மு.க. எம்.எல்.ஏக்களை பேசவிடாமல் அடாவடித்தனமாக அனுமதி மறுத்தபோதும் தாமரைக்கனி, பண்ருட்டியை தாக்கிய போதும் காங்கிரசுக்காரர்கள் கைகூப்பிக் கொண்டு வேடிக்கைப் பார்த்தார்கள். இப்பொழுது இவர்களது கூட்டணி போய்விட்டதால் சட்டசபையில் உரிமை போய்விட்டதாம்!

பா.ஜ.க.வின் பேரணிக்கு அனுமதி தரக்கூடாது என்று மத்திய அமைச்சர் சவான், ஜெயலலிதாவுக்கு கடிதம் எழுதினார். மாநிலத் தலைவர்கள் பா.ஜ.க. பேரணி — பொதுக்கூட்ட அனுமதியைக் கண்டித்து மாறிமாறி தாக்கிப் பேசினார்கள். டில்லிப் பேரணியைக் காங்கிரசு தடுத்ததையும், அத்வானி பொதுக்கூட்டத்திற்கு கேரளாவில், கர்நாடகாவில் அனுமதி மறுக்கப்பட்டதையும் சுட்டிக்காட்டி ஜெயலலிதா மதச்சார்பு சக்திகளை வளர்த்து விடுகிறார் என கூச்சல் போட்டார்கள் வாழப்பாடிகள்! ஆனால், அசாமில் இதே காங்கிரசு அரசுதான் பா.ஜ.க. பேரணிக்கு அனுமதி கொடுத்தது. டில்லி முதல் ராஜஸ்தான், குஜராத், ம.பி., உ.பி. என வட மாநிலங்கள் முழுவதும் பா.ஜ.கவின் பொதுக்கூட்டப் பிரச்சாரங்கள் தடங்கலின்றி நடைபெறுவதை வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருக்கிறது மத்திய அரசு. அயோத்தி திடீர் ராமன் கோயிலுக்கு தரிசன அனுமதி அளித்திருப்பதோடு இன்று 24 மணி நேர தரிசன அனுமதி என்றெல்லாம் இந்து மதவெறியர்களுக்கு வால்பிடித்து செல்கிறது. காங்கிரசு. வடநாட்டில் உள்ள பா.ஜ.க. செல்வாக்கு - இந்துக்களின் ஆதரவு, தென்னாட்டில் உள்ள பா.ஜ.க. எதிர்ப்பு இவற்றை கணக்கிலெடுத்து இடத்திற்கேற்றாற்போல் இரட்டை வேடம் போடுகிறது, காங்கிரசு.

அண்ணன் எப்பொழுது சாவான்; திண்ணை எப்பொழுது காலியாகும் எனக் காத்திருந்த பா.ஜ.க., காங்.—அ.தி.மு.க. உறவு முறிந்ததுமே அ.தி.மு.க. — பா.ஜ.க. கூட்டணியைப் பற்றிய குரலை ஓங்கி ஒலிக்கிறது. இந்துக்களையும் தேசியத்தையும் விழிப்புணர்வு கொள்ளச் சொல்லியும் எழுச்சி கொள்ளச் சொல்லியும் கொட்டமடிக்கிறார்கள்!



**வாழப்பாடி தோளில் கைபோட்டு கூட்டணி உறவு முறிவைக் கொண்டாடி மகிழும் மூப்பனார்.**

திராவிடக் கட்சிகளின் ஆரிய - பார்ப்பன எதிர்ப்பும், ஹிந்தி எதிர்ப்பும் பா.ஜ.க. தமிழகத்தில் காலூன்ற தடையாக இருந்தன. ஆனால், இன்று பாப்பாத்தி திராவிடக் கட்சியின் தலைமையைப் பிடித்து பார்ப்பனீயத்தை நிலைநாட்டி வருகையில் தமிழகத்தில் நாம் காலூன்ற முடியாதா என்ற நம்பிக்கை பா.ஜ.க.விற்குப் பிறந்துவிட்டது. அதனால்தான் ஜெயலலிதா பாணியில் திராவிடத்தையும் தம்முள் ஐக்கியமாக்கும் எத்து வேலையில் முனைப்பாக இறங்குகிறது பா.ஜ.க.! இதன் தலைவர்களின் அண்மைக்காலப் பேச்சுக்கள் இந்த அடிப்படையிலேயே அமைந்துள்ளன. திராவிடத்திற்கும் இந்துத்துவத்திற்கும் என்றுமே பகை இருந்தது இல்லையாம். ஆரியர்களும் இந்தியாவின் பூர்வ குடிகளாம். ஆரிய — திராவிடப் போர் எல்லாம் கட்டுக்கதைகளாம். நாக்கில் பல் படாமல் புளுகுகிறார்கள். திராவிடத் தலைவர்களையும், முன்னோர்களையும் நாயன்மார், ஆழ்வார்கள், பாரதி, கட்டபொம்மன், சிதம்பரனார், முத்துராமலிங்கத் தேவர், தாணுலிங்க நாடார், திருவள்ளுவர், ராஜராஜ சோழன், மருது பாண்டியர், நீதிகாத்தப் பாண்டியன் முதலானோர்களை தாங்களும் மதிப்பதாக ஏற்றுக் கொள்வதாக கூறுகிறார், பா.ஜ.க.வின் தமிழ் மாநில பொதுச் செயலாளர் இல.கணேசன்.

**ஜெயலலிதாவை எதிர்ப்பதன் மூலம் தமிழக காங்கிரசின் செல்வாக்கை தூக்கி நிறுத்தவும் வேண்டும்; மத்தியில் ஆட்சி நெருக்கடியை தவிர்ப்பதற்கு அ.தி.மு.க. -வின் 11 எம்.பி.க்களின் ஆதரவும் தேவை என்ற இரட்டை ஆசை காங்கிரசுக்கு!**

இதேப் போல் தமிழ்மொழி - பாரம்பரியத்தை மதிப்பதாகவும், தமது கொள்கை மும்மொழித் திட்டமாக இருந்தாலும் ஹிந்தியை திணிப்பது தமது நோக்கமில்லை என்றும் விருப்ப மொழியாகவே கையாள்வோம் என்றும் அறிக்கை விடுகிறார்கள், பா.ஜ.க.வினர். சமஸ்கிருதம் தேவ மொழியென்றும் இதன் துணை மொழிதான் ஹிந்தி என்றும் பிற இந்திய மொழிகள் அனைத்தும் நீசமொழி — காட்டுமிராண்டி மொழி என்றும் இழிவுபடுத்திக் கொண்டே, இழிவுபடுத்தும் புராணக் குப்பைகளையும் புராணத் தலைவர்களையும் உயர்த்திப் பிடித்துக் கொண்டே இப்படி பித்தலாட்டமாக பேசித் திரிகிறார்கள். முதலில் விருப்பப் பாடம் - விருப்ப மொழி என்று மூக்கை நுழைப்பது பிறகு ஹிந்தி கற்றுக் கொள்ளும் விருப்பத்தை தூண்டிவிடுவது அத்தகைய சூழ்நிலையை உருவாக்குவது, பிறகு ஹிந்தி கற்க வேண்டும் என்ற நிர்ப்பந்தம் தவிர்க்க முடியாத நிலைமையை ஏற்படுத்துவது, பிறகு ஹிந்தி மட்டும் போதும் என்று கூறிவிடலாம் என்பதே இக்கும்பலின் கனவாக உள்ளது.

காங்கிரசு உறவு முறிவுக்குப் பின் ஜெயலலிதாவுடன் பகிரங்க கூட்டணி அமைப்பதற்கான முகாந்தரத்தில் பா.ஜ.க. இறங்கியிருந்தாலும் தன்னுடைய கொள்கையை விட்டுக்கொடுக்காது என்றும் ஜெயாவின் ஊழலை - ஆடம்பரத்தை ஏற்றுக் கொள்ளாது என்றும் பசப்பி ஒரு தனித்துவத்தை நிலைநாட்ட முயற்சிக்கிறது. பா.ஜ.க.வின் கொள்கை இந்து ராஷ்டிரமும் வர்ணாசிரம ஆட்சியும்தான்! இதை ஜெய

படிப்பகம்



**ஜெயலலிதாவை சந்திக்கும் காங். எம்.பி., மார்க்கரெட் ஆல்வா; சமாதானத் தூது இல்லையாம், நட்பாம்!**

லிதாவுடன் கூட்டு சேருவதால் விட்டுக் கொடுக்க வேண்டியதன் அவசியமே இல்லை. மற்றபடி ஜெயாவின் ஊழலை - ஆடம்பரத்தை எதிர்ப்பதாக ஆடும் நாடகமெல்லாம் இங்கு எடுபடாது. ஏனெனில் பட்டு, தங்கம், பங்களா என ஆடம்பரத்திலேயே வீழ்ந்து கிடக்கும் மாதவராவ் — ராஜமாதா குடும்பம் போன்ற பழைய மன்னர் பரம்பரையினர்தான் பா.ஜ.க.வின் தலைவர்கள் என்பதும் பா.ஜ.க. ஆட்சி செய்த ம.பி., ராஜஸ்தான், ஒரிசா, ஹிமாச்சல் பிரதேசத்தில் நாறிய ஊழலும் உலகறிந்த உண்மை.

— இப்படி மூன்று கட்சிகளின் செயல்பாடுகள் முன்னுக்குப் பின் முரணானவையாகவும், பதவி - சுயநலவெறி கொண்டதாகவும், மக்கள் விரோத, பாசிச - பயங்கரவாதத் தன்மையுடையனவாகவும் உள்ளன. ஆனால், மூன்றுமே ஏதோ தமக்கென்று தனிக் கொள்கை, நெறி முறை இருப்பது போலவும் தாமோ அல்லது தாம் உருவாக்கும் கூட்டணியோ மக்கள் நலன் கொண்ட, பிரச்சினைகளுக்கு சரியான மாற்று போலவும் பசப்புகின்றன. மூன்று கட்சிகளுக்கும் தனித்துவமோ கொள்கை முரண்பாடுகளோ ஒன்றும் இல்லை. அதேபோல் அ.தி.மு.க. — காங். கூட்டணி சந்தர்ப்பவாத கூட்டணியும் அல்ல; பா.ஜ.க. — அ.தி.மு.க. கூட்டுக்கு எதிர் முகாம் காங்கிரசும் அல்ல. எல்லாம் ஒரு முகத்துக்குப் பூசப்படும் வெவ்வேறு சாயங்கள்! பாசிசம், பயங்கரவாதம், பார்ப்பனீயம், இந்து மதவெறியே இவர்களின் முகங்கள். அளவுகளிலும், வெளிப்பாடுகளிலும் வித்தியாசங்களும் போலித்துவமும் இருப்பினும் உள்ளடக்கம் ஒன்றே. பா.ஜ.க. பகிரங்கமாக இவற்றை வெளிப்படுத்தி தன்னை நிலைநிறுத்திக் கொள்கிறது. காங்கிரசு, மதச்சார்பின்மை, அஹிம்சை, நிலையான - நீண்ட - தியாகமிக்க பாரம்பரியம் என்ற போர்வை மூலம் தன்னை நிலைநிறுத்திக் கொள்கிறது. அ.தி.மு.க. — ஜெயாவோ திராவிடத் தில்லுமுல்லு அரசியல், கவர்ச்சி அரசியல் மூலம் தம்மை நிலை நிறுத்திக் கொள்கிறார். மூவருமே பாசிச - பார்ப்பன - இந்துமதப் பங்காளிகள்தான்! தற்போது இவர்களுக்குள் நடப்பது நாற்காலி பிடிக்கும் பங்காளிச் சண்டையே! மக்களை ஏய்ப்பதற்கான ஜோடி மாற்றங்களே!

இவற்றை அம்பலப்படுத்தி முறியடிக்க வேண்டும். கூடவே இத்தகைய ஆரவாரங்களுக்குப் பின்னே, மாயக் காட்சிகளுக்குப் பின்னே ஓசைபடாமல் தமிழகத்திலும் காலூன்றி வரும் இந்து மதவெறி பாசிச சக்திகளை கவனமாக ஒழித்துக்கட்ட வேண்டும். ''தமிழகத்தில் காலூன்றி விட்டோம்'' என்று அவர்கள் பகிரங்கமாக அறிவித்து குதூகலிக்கிறார்கள். இந்து முன்னணி, பா.ஜ.க.வின் மாநாடு பேரணி - பொதுக் கூட்டங்களோ, அ.தி.மு.க. — பா.ஜ.க. கூட்டணி பற்றிய பேச்சு - பரபரப்பு கிசுகிசுக்களோ இவர்களின் பிரச்சார வடிவங்களே! இதன் தார்மீக பலத்தில் இவர்கள் கையெழுத்து இயக்கம், துண்டறிக்கை, பிரசுரங்கள் வாயிலாக தெரு முனைகளிலும் வீடுவீடாக ஏறியும் ஆள் திரட்டுகிறார்கள். எல்லோரும் இந்துக்கள், நமக்குள் ஒற்றுமை வேண்டும், நமக்கென ஒரு நாடு வேண்டும்; நமக்குள் ஒரு மொழி - ஒரு சிந்தனை வேண்டும் என்று கூறி கட்சி, சாதி, மொழி, இனத்திற்கு அப்பாற்பட்டு எல்லோரையும் கவர்கிறார்கள். திராவிடத்தையும், நாத்திகத்தையும், பார்ப்பனீய எதிர்ப்பையும் முஸ்லீம் - கிறித்துவ மதத்தினரையும் பார்ப்பனீயத்திற்குள் — இந்துத்துவத்துக்குள் அடக்கிவிட ஏராளமான பொய்களையும் புனைச்சுருட்டுக்களையும் அவிழ்த்து விடுகிறார்கள். இவற்றைத் தாக்கி முறியடித்து இக்கும்பலை முடமாக்க வேண்டும். ஆனால், தமிழகக் கட்சிகள் - திராவிடக் கட்சிகள் என்ன செய்து கொண்டிருக்கின்றன.

> ஜெயாவின் ஊழலை, ஆடம்பரத்தை எதிர்ப்பதாக ஆடும் நாடகமெல்லாம் இங்கு எடுபடாது. ஏனெனில் பழைய மன்னர் பரம்பரையினர்தான் பா.ஜ.க.வின் தலைவர்கள் என்பதும் பா.ஜ.க. ஆட்சி செய்த மாநிலங்களில் நாறிய ஊழலும் உலகறிந்த உண்மை.

தமக்கிருக்கும் சக்திக்கு தி.மு.க. இந்நேரம் எவ்வளவோ செய்திருக்க முடியும். ஆனால், கருணாநிதி ஹிந்தி எதிர்ப்பு போராட்டத்தை பெயரளவிற்கு அறிவித்து இழுத்து நீட்டித்துக் கொண்டிருக்கிறார். பா.ம.க.வோ தீவிர போராட்டங்களையெல்லாம் கைவிட்டுவிட்டு காங்கிரசோடு கூட்டணிக்கு பாலம் அமைத்துக் கொண்டிருக்கிறது. ஆயிரக்கணக்கிலிருக்கும் அம்பேத்கார் அமைப்புகளோ சலுகை, இட ஒதுக்கீடு, முன்னுரிமை என்ற வட்டத்திற்குள் நின்றுகொண்டு வெளி உலகை - புற எதார்த்தத்தைப் பார்க்கவே மறுக்கின்றன. தி.க. என்ற ஒரு கட்சி இருப்பதையே மறந்து விடலாம்! சி.பி.ஐ., சி.பி.எம். கட்சிகளோ பத்திரிகையில் அறிக்கைவிட்டே காரியம் சாதிக்கும் கருணாநிதி நிலைக்குப் போய்விட்டார்கள்.

தி.மு.க.வும், பா.ம.க.வும் கேவலம் காங்கிரசோடு கூட்டு வைப்பதற்காக மாறி மாறி (அழைப்பு விடுத்தும், மறுத்தும்) அறிக்கை விடுவதிலேயே முனைப்பாக உள்ளன. அ.தி.மு.க. — பா.ஜ.க. கும்பல் ஒருபுறம் கூட்டணி பற்றிய செய்திகளை கசியவிட்டு மக்களின் கருத்தை - உள்ளக்கிடக்கையை ஆழம் பார்த்து வருகிறது என்றால் மறுபுறம் காங்.—தி.மு.க. — பா.ம.க. மூன்றும் எந்த கூட்டணி அமைக்கலாம் என்பதற்காக மக்களை ஆழம் பார்த்து வருகின்றன.

இந்து மதவெறியர்களுக்கு ஜெயலலிதா பட்டுக் கம்பளம் விரிக்கிறார் என்றால் பிற கட்சிகள் — திராவிடக் கட்சிகள் ஜெயா பட்டுக் கம்பளம் விரிக்கிறார் என்று ஓலமிட்டே ஆட்சியைப் பிடித்துவிட துடிக்கிறார்களே ஒழிய இந்து மதவெறியர்களை முறியடிப்பதற்கான போராட்டமோ, முனைப்போ காட்டவில்லை. திராவிடத் தலைவர்களின் பிழைப்புவாத நடவடிக்கைகளால் — அரசியல் ஓட்டாண்டித்தனத்தால் திராவிடப் பாரம்பரியத்தின் பரிணாம வளர்ச்சியாக ஜெயலலிதா ஆட்சியைப் பிடித்து பார்ப்பனீயத்தை நிலைநாட்ட முடிந்தது. தமிழகக் கட்சிகளின் இதே தன்மையினால் இன்று இந்து மதவெறி பாசிச சக்திகளும் வளர வழி வகுக்கப்படுகிறது.

○ ராசு.



www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com

# ருஷ்ய அரசியல் நெருக்கடி:

# ஏகாதிபத்திய தயவில் யேல்ட்சினின் சதிராட்டம்

அதிபரா? நாடாளுமன்றமா? யாருக்கு அதிகாரம் என்பதற்கான பலப் பரீட்சை ரஷியாவில் கடந்த ஆண்டிலிருந்தே தீவிரமடைந்து வருகிறது. நாடாளுமன்றம் அரசைக் கட்டுப்படுத்துவதா அல்லது அதிபர் கையில் அதிகாரத்தைக் குவித்து அரசை இயக்குவதா என்பதே தற்போதைய அதிகாரப் போட்டியின் மையப் பிரச்சினையாக உள்ளது. ஈரடுக்கு கொண்ட ருஷ்ய நாடாளுமன்றத்தில் முன்னாள் போலிக் கம்யூனிஸ்டுகளும், அதிபர் யேல்ட்சின் எதிர்ப்பாளர்களும் பெரும்பான்மையாக உள்ளனர். இவர்கள் ரஷ்யாவில் ஆட்சிக் கவிழ்ப்புக்கு முன் நடந்த தேர்தலில் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளாவர்.

அதே சமயம், மக்களால், யேல்ட்சின் அதிபராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளாரே தவிர, அவருக்கென தனிக்கட்சி எதுவும் கிடையாது. தற்போதைய புதிய சட்டப்படி, ஒரு அரசியல் உறுப்பினரோ, தலைவரோ, அக்கட்சியைச் சார்ந்தவரோ அதிபர் தேர்தலில் போட்டியிட முடியாது. அரசாங்கத்தின் மீது போலிக் கம்யூனிஸ்டுகளின் ஆதிக்கத்தை உடைக்க அதிபர் யேல்ட்சின் கொண்டு வந்த வினோதமான இச்சட்டமே இன்று அவரை ஆதரவற்ற அரசியல் அனாதையாக்கி விட்டது. போதாக் குறைக்கு அவரது முதலாளித்துவ சீர்திருத்த பொருளாதாரக் கொள்கைகள் பெருந்தோல்வியைச் சந்தித்து, மக்களிடம் செல்லாக் காசாகிவிட்டது.

எனவே அதிகாரத்தைத் தக்க வைத்துக் கொள்ள அடுத்தடுத்து பல அவசரச் சட்டங்களைக் கொண்டு வந்து சர்வாதிகார சதிராட்டம் போட்டார் யேல்ட்சின். நாடாளுமன்றத்தைக் கலந்தாலோசிக்காமல் தனக்கு விசுவாசிகளான நபர்களை தன்னிச்சையாக மந்திரிகளாக நியமித்துக் கொண்டார். மார்ச் 20-ந் தேதியன்று யேல்ட்சின் ஒரு அவசர சட்டத்தைக் கொண்டு வந்தார். இதன்படி, கருத்துக் கணிப்பு நடைபெறவுள்ள ஏப்ரல் 25-ந் தேதி வரை தன்னிடம் அதிகாரத்தைக் குவித்துக் கொள்ளும் வகையில், சிறப்பு நிர்வாக ஆட்சி முறையை உருவாக்கிக் கொண்டார். இதனால் ஆத்திரமடைந்த போலிக் கம்யூனிஸ்டுகள், தமது தளபதியும் சபாநாயகருமான காஸ்புலடோவைக் கொண்டு அவசரமாக நாடாளுமன்றத்தைக் கூட்டி, யேல்ட்சின் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வந்து அவரைப் பதவியிலிருந்து விரட்ட முயற்சித்தனர். பதிலுக்கு யேல்ட்சின் கும்பலும் சபாநாயகர் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வந்து அவரது பதவியைப் பிடுங்க முயன்றது. இதனால் ஏற்பட்ட அரசியல் நெருக்கடியைத் தீர்க்க அரசியல் சட்டத்துறை வழக்கு மன்றம் தலையிட வேண்டியதாயிற்று.

சட்டத்துறை வழக்கு மன்றத்தின் தலைமை நீதிபதியான வலேரிசோர்கின், யேல்ட்சினின் சட்டம் சர்வாதிகாரமானது, தன்னிச்சையானது என்று குற்றம் சாட்டிவிட்டு 10 அம்ச சமரசத் திட்டம் ஒன்றை முன் வைத்தார். இதன்படி ஏப்ரல் 25-ந் தேதியன்று, யேல்ட்சின் மீது நம்பிக்கை உள்ளதா என்று மக்களிடம் கருத்துக் கணிப்பு நடத்துவது. அதைத் தொடர்ந்து அதிபர் தேர்தலையும், நாடாளுமன்றத் தேர்தலையும் நடத்துவது. புதிய அரசியல் சட்டத்துக்கு மக்களிடம் அங்கீகாரம் பெறுவது. ஈரடுக்கு கொண்ட நாடாளுமன்ற முறையை ஒழிப்பது என்கிற திட்டத்தை இரு தரப்பினரும் ஏற்றுள்ளனர்.

எதிர்த் தரப்பினரின் நெருக்கடி ஒருபுறமிருக்க, அவரால் நியமிக்கப்பட்ட துணை அதிபர், அரசு முதன்மை வழக்கறிஞர், பாதுகாப்புக் கவுன்சில் செயலாளர் முதலானோர் திடீர் ''பல்டி'' அடித்து எதிர்த் தரப்பினருடன் சேர்நது கொண்டு யேல்ட்சின் மீது குற்றம் சாட்டத் தொடங்கினர். இச் சிக்கலிலிருந்து மீள முடியாத யேல்ட்சின், வயிறு முட்ட குடித்துவிட்டு மார்ச் 28-அன்று நாடாளுமன்றத்துக்கு வந்து உளறத் தொடங்கினார். எதிர்த்தரப்பினர் அவரைக் கேலி செய்து, இது நாட்டுக்கே ஏற்பட்ட அவமானம் என்று சாடினர்.

ருஷ்ய நாடாளுமன்றத்தில் அரசியல் நெருக்கடிக்கு இன்னமும் தீர்வு காணப்படாத போதிலும், எதிர்த் தரப்பினர் யேல்ட்சினின் அதிகாரங்களை பெருமளவு குறைத்து அவரைப் பல் பிடுங்கிய பாம்பாக்கி விட்டனர். இவற்றைத் தாங்கிக் கொள்ள முடியாத யேல்ட்சின் கும்பல், மாஸ்கோ நகரில் ஆர்ப்பாட்டங்களை நடத்தியும், எதிர்த் தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களைத் தாக்கியும் வன்முறையில் இறங்கத் தொடங்கியுள்ளது.

ஜனநாயக முகமூடியைக் கழட்டி எறிந்து விட்டு பதவியைப் பாதுகாத்துக் கொள்ள யேல்ட்சின் சர்வாதிகார சதிராட்டம் போட்டாலும் கூட, அரசியல் அனாதையாகிவிட்ட அவரை மேற்கத்திய ஏகாதிபத்தியங்கள் வரிந்து கட்டிக் கொண்டு ஆதரிக்கின்றன. ரஷ்யாவில் முதன்முதலாக ஜனநாயக முறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட அதிபர் அவர்; கொல்லைப் புறமாக அவரை வீழ்த்த முயற்சிப்பது தான் சர்வாதிகாரம்; மீண்டும் கம்யூனிச சர்வாதிகாரத்துக்கு ரஷ்யாவைத் தள்ள அனுமதிக்க முடியாது என்று எச்சரித்து மறைமுகமாக பொருளாதார நிர்ப்பந்தங்களைக் கொடுத்து வருகின்றன. அண்மையில் உள்நாட்டு நெருக்கடி தாளாமல் எதிர்ப்பாளர்களை அடக்குவதற்காக யேல்ட்சின், அவசர நிலை சட்டத்தைப் பிறப்பித்துள்ளார். சர்வாதிகார சதிராட்டம் போட்டு மக்களிடமிருந்து தனிமைப் பட்டாலும், ஏகாதிபத்திய ஆதரவாளனாக, கம்யூனிச எதிர்ப்பாளனாக இருந்தால் போதும் - அவர்தான் உண்மையாக ஜனநாயகவாதி! இதுதான் ஏகாதிபத்தியங்களால் பீற்றிக் கொள்ளப் படும் முதலாளித்துவ ஜனநாயகம்! ருஷ்ய மக்களோ, யேல்ட்சினின் சர்வாதிகாரத்திடமும், மீண்டும் ஆட்சியைப் பிடிக்குமளவுக்கு பலம் பெற்றுள்ள போலிக் கம்யூனிச சர்வாதிகாரத்திடமும் சிக்கிக் கொண்டு ஜனநாயக எதிர்காலத்தை நோக்கி ஏக்கத்துடன் காத்திருக்கிறார்கள்.




● குமார்

படிப்பகம்

www.padippakam.com

★ 'உப்புக்குக் கூடவா வரி' என பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை எதிர்த்து காந்தி தலைமையில் காங்கிரசு கொதித்தெழுந்தது என. மார்தட்டிக் கொள்ளும் 'தண்டி' யாத்திரையின் சொந்தக்காரர்கள் இன்று உப்பு தயாரிப்பையும் அந்நியக் கம்பெனிகளிடம் தாரை வார்த்துள்ளனர். காண்ட்லா துறைமுகப் பகுதியில் சுமார் 6,000 ஹெக்டேர் நிலப் பரப்பை 'கார்கில்' எனும் பன்னாட்டு ஏகபோக நிறுவனத்திற்கு இதற்காக பட்டா போட்டுக் கொடுத்துள்ளது ராவ் அரசு. இதன் விளைவாக அப்பகுதியைச் சேர்ந்த 2 லட்சம் தொழிலாளர்கள் வேலை இழப்பார்கள் என்பதனை எடுத்துக்கூறி, பிற எதிர்க்· கட்சிகள் பாராளுமன்றத்தில் எதிர்ப்பு தெரிவித்த பொழுது, 'சுதேசி' வாய்ச்சவடால் அடிக்கும் பா.ஜ.க. வாய் மூடி தனது அடிவருடிதனத்தை வெளிக்காட்டிக் கொண்டுள்ளது. கடந்த இரு மாதங்களுக்கு முன்பாக கர்நாடக விவசாயிகள் பெங்களூரில் இக்கம்பெனியின் கிளை அலுவலகத்தில் முன்தான் ஆர்ப்பாட்டம் செய்து, அதன் கோப்புகளை தீயிட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

★ சில குறிப்பிடத்தக்க சிறப்பு நீதிமன்றங்களிலும், முறையீட்டு மன்றங்களிலும் வழக்குரைஞர்கள் வாதாடுவதைத் தடை செய்யும் மசோதா ஒன்றினை நடப்பு பாராளுமன்றக் கூட்டத் தொடரில் நிறைவேற்ற உள்ளது ராவ் அரசு. இதனை எதிர்த்து மார்ச் 20 அன்று 500-க்கும் மேற்பட்ட தில்லியைச் சேர்ந்த வக்கீல்கள் உச்சநீதி மன்றம் முன்பு கூடி, 'வழக்குரைஞர்களின் உரிமையினைப் பறிக்கும் கறுப்புச் சட்டத்தை வாபஸ் வாங்கு' எனக் கோஷமிட்டு ஆர்ப்பாட்டம் செய்துள்ளனர். வக்கீல்கள் என்று விட்டுவிடுமா ராவ் அரசு? ஆர்ப்பாட்டக்காரர்களைக் கைது செய்து நீதி மன்றக் காவலில் வைத்து, தனது பாசிசத் தன்மையைக் காட்டிக் கொண்டது.

★ மகாராஷ்டிரா மாநிலம் கோல்காபூரில் இயங்கும் தனியார் கல்வி நிறுவனம் — டி.ஒய். பாட்டீல் தொழில் நுட்பக் கல்லூரி - தனது வருடாந்திர கல்விக் கட்டணத்தை எவ்வித முன்னறிவிப்புமின்றி தேர்வு நெருங்கும் சமயத்தில் ரூ.10,000 -விருந்து ரூ.21,000 ஆக உயர்த்தியது. இதனை எதிர்த்து ராஜன் எனும் மாணவர் தீக்குளித்து இறந்து போயுள்ளார். ராஜனின் இறப்புக்கு காரணமான கல்லூரி நிர்வாகத்தின் மேல் நடவடிக்கை எடுக்கக் கோரி ஆர்ப்பாட்டத்தில் இறங்கிய இக் கல்லூரி மாணவ - மாணவிகளின் மற்றும் அவர்களின் பெற்றோர்களின் மீது தடியடி நடத்தி கைது செய்துள்ளது காவல்துறை. இப்பிரச்சினையை ஒட்டி சட்டசபையில் எதிர்க்கட்சிகள் வெளிநடப்பு செய்தும், காங். அரசு வேடிக்கை பார்த்துக் கொண்டுதானுள்ளது. 'நன்கொடைக்குப் பதிலாக தங்களின் கட்டணத்தை தனியார் கல்வி நிறுவனங்கள் உயர்த்திக் கொள்ளலாம்' என உச்சநீதி மன்றம் மூலம் தீர்ப்பு வழங்கியதே இக் காங்கிரசு கயவாளிகள்தான். இவர்களிடமா போராடும் மாணவர்களுக்கு நீதி கிடைக்கும்?



# சிவந்த கண்கள் கவனிக்கட்டும்

★ அமெரிக்கா, ஈராக்குக்கு எதிரான யுத்தத்தில் 'யுரேனியத்தை முனைகளில் மட்டும் கொண்ட குண்டுகளை' 4,000 முறைக்கு மேலாகப் பயன்படுத்தியது தற்பொழுது அம்பலமாகியுள்ளது. இதன் பின்விளைவுகளை ஒரு பத்து வருடம் கழித்துத்தான் கண்டுபிடிக்க முடியுமென்றும், புற்று நோய் மற்றும் சிறுநீரகக் கோளாறுகளை இது ஏற்படுத்துமென்றும், போரில் ஈடுபட்ட வீரர்களை மட்டுமல்லாது, இத்தகைய குண்டுகளைத் தயாரிக்கும் தொழிற்சாலைகளுக்கு அருகிலுள்ள மக்களும் இதனால் பாதிக்கப்படுவர்' என இது பற்றி ஒரு நூல் எழுதியுள்ள ஆசிரியர்கள் கூறுகின்றனர். 'இது ஒரு மரபுவகை ஆயுதம்தான்' என அமெரிக்கா மறுக்கும்பொழுது, இந்த யுத்தத்தின் கதிர் வீச்சினால் பாதிக்கப்பட்டுள்ள ஒரு அமெரிக்கப் போர் வீரர், 'சோதனைச் சாலை மிருகங்களைப் போல எங்களைப் பயன்படுத்தியுள்ளனர்' என அமெரிக்க அரசை அம்பலப்படுத்தியுள்ளார்.

★ இந்து மத வெறியர்களின் மற்றும் காங்கிரஸ் துரோகிகளின் முகங்களில் உத்திரப் பிரதேச பல்கலைக் கழக மாணவர்கள் கரியைப் பூசியுள்ளனர். இம் மாநிலத்திலுள்ள அலகாபாத், லக்னோ, பனாரஸ், அலிகார், குமாவோன் பல்கலைக் கழகங்களில் நடந்த மாணவர் தலைவர் தேர்தலில், இந்த இரண்டு கட்சிகளின் மாணவர் அமைப்புகள் சார்பாக போட்டியிட்ட வேட்பாளர்கள், இந்திய மக்கள் முன்னணி மற்றும் சமாஜ்வாடி ஜனதாதள மாணவர் அமைப்புகளின் வேட்பாளர்களிடம் மிகப் பெரும் தோல்வியைச் சந்தித்துள்ளனர். குறிப்பாக, அலகாபாத் பல்கலைக்கழகத்தில் தலைவர் பதவியை இந்து மதவெறியர்களிடமிருந்து கைப்பற்றியுள்ளது இ.ம.மு.-ன் மாணவர் அமைப்பு. மேலும், இவ்வமைப்பினர் இப்பல்கலைக் கழகத்தில் சனவரி 26 என்று தேசியக் கொடியினை ஏற்ற வந்த அசோக் சிங்காலை முற்றுகையிட்டு, கொடியேற்ற விடாமல் தடுத்து திருப்பி அனுப்பியுள்ளனர்.

சூரஜ்கந்த் — காங். மாநாட்டின் ஆடம்பரமான பந்தல்.



★ சீனாவில் தனியார் வசம் உள்ள மொத்த வருவாய் சார்ந்த சொத்தின் மதிப்பு, கடந்த 15 ஆண்டுகளில் 50 மடங்கு அதிகரித்துள்ளது. 1975-களில் 655 கோடி டாலராக இருந்த இவ்வகை சொத்தின் மதிப்பு, 90-களில் 31,000 கோடி டாலராக உயர்ந்துள்ளது. அதே பொழுது, அரசின் சொத்து மதிப்பு, இக் காலத்தில் 5,500 கோடி டாலரிலிருந்து 24,000 கோடி டாலராக - 5 சதவீதத்துக்கும் குறைவாகவே அதிகரித்துள்ளது. பொருளாதாரத் துறையில் மட்டுமல்லாது, இத்தனியார் நிறுவன முதலாளிகளுள் பலரை, அதிக அதிகாரமற்ற தனது அரசியல் அமைப்புகளான தேசிய மக்கள் காங்கிரஸ் மற்றும் சீன· மக்கள் அரசியல் ஆலோசனைக் கூட்டங்களிலும் பங்கு பெற அனுமதித்துள்ளது டெங் கும்பல்.

★ பிரான்சில் நடந்து முடிந்த பாராளுமன்றத்திற்கான முதல் கட்ட தேர்தலில் மையவாத - வலதுசாரி கட்சிகளின் கூட்டணி, மொத்தமுள்ள 577 இடங்களில் 480 இடங்களைக் கைப்பற்றி உள்ளது. வேலையின்மை, ஊழல், பொருளாதார மந்தம் ஆகியவை காரணமாக மக்கள் 20 ஆண்டு காலமாக அதிகாரத்திலிருக்கும் சோசலிஸ்ட் கட்சியைப் புறக்கணித்துள்ளனர். பொருளாதார திட்டங்களைவிட சித்தாந்த பிரச்சினைகளில்தான் இக்கட்சிகளிடையே வேறுபாடு உள்ளது. இதனை, இடது சாரிகள் மற்றும் பசுமைக் கட்சிகளைவிட கூடுதலாக வாக்குகள் பெற்று, மூன்றாவது இடத்திலுள்ள அதிதீவிர வலதுசாரி நவீன நாஜிக் கட்சியான தேசிய முன்னணி தனது வளர்ச்சிக்கு சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ளவே வாய்ப்பு அதிகமுள்ளது. ஐரோப்பா வெங்கும் புற்றீசல்போல் பெருகிவரும் நவ நாஜிகளின் செல்வாக்கின் வளர்ச்சியாகவே இந்த வலதுசாரிகளின் வெற்றியைக் கணிக்க முடியும்!

★ சூரஜ்கந்தில் நடந்து முடிந்த காங்கிரஸ் கமிட்டி கூட்டத்திற்கு மக்களின் வரிப்பணத்தில் ஓர் ஐந்து நட்சத்திர உலகத்தையே நிர்மானித்துள்ளனர். முக்கிய தலைவர்கள் செல்லும் பாதையை அகலப்படுத்துவதற்காக ஒன்றரை கோடி ரூபாய் செலவு செய்திருப்பதுடன், அவ்வழியில் இருந்த குடிசைகளையும், வீடுகளையும் எவ்வித முன்னறிவிப்பும், நட்டஈடும் தராமல் இடித்துத் தரை மட்டமாக்கியுள்ளனர். பிரதமர் ஒரு நாள் இரவு தங்குவதற்காக 25 லட்சம் ரூபாய் செலவில் குளிர்சாதன வசதியுள்ள குடில் ஒன்றும், 5,000 பேர் அமரக்கூடிய பிரதான பந்தல் தீப்பிடிக்காதவாறும், மழையில்

படிப்பகம்

www.padippakam.com

நனையாதவாறும் அமைக்கப்பட்டுள்ளது. கலந்து கொள்ளும் உறுப்பினர்களின் அந்தஸ்திற்கு ஏற்றவாறு நான்கு வகையான உணவுக் கூடங்களை அமைத்துள்ளனர். குடிசைப் பகுதிகள் இடிக்கப்பட்டது எனக்குத் தெரியாது என மார்கரெட் ஆல்வா கூறியதற்கு, '2,000 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள ஜெயலலிதாவைப் பார்க்கச் செல்லும் அமைச்சருக்கு 200 கி.மீ. தொலைவில் நடப்பது தெரியாது எனக் கூறுவது வெட்கக்கேடு' என எதிர்க்கட்சிகள் அனைத்தும் விமர்சிக்கும் அளவிற்கு காந்தியவாதிகளின் ஆடம்பரமும், வக்கிரமும், அதிகாரத் திமிரும் பொங்கி வழிகிறது.

★ திரிபுராவில் பர்மன் அரசாங்கம் தனது அமைச்சரவையின் ராஜினாமாவை கவர்னரிடம் கொடுத்து 20 மணி நேரம் கழித்த பின்னும் கூட மத்திய அரசு எவ்வித முடிவையும் அறிவிக்காமல் காலம் கடத்தியுள்ளது. 'நாங்கள் எந்த ஆட்சியின் கீழ் இருக்கிறோம் என்பது எங்களுக்கே தெரியாது' என ஓர் அமைச்சரே கூறுமளவு காங்கிரசு தலைமை தடுமாறியுள்ளது. இதே போல், கடந்த மார்ச் 16-ல் திரிபுராவில் ஏப்-3-ல் தேர்தல் நடத்துவது சம்பந்தமான அனைத்து கட்சி கூட்டத்தில் முன்னாள் முதலமைச்சர் பர்மன் தலைமையில் காங்கிரசு சார்பாக இரு பிரதிநிதிகள் கலந்து கொண்டுள்ளனர். ஆனால், மாநிலத் தலைமையோ தேர்தல் கமிஷனருக்கு காங்கிரசின் சார்பாக நாங்கள் யாரையும் அனுப்பவில்லை எனக் கடிதம் எழுதுகிறது. உட்கட்சி சண்டைகளை நடத்துவதுதான் காங்கிரசின் முன்னுள்ள ஒரே பணி. ஆனால், தேர்தல் கோஷம் மட்டும் 'இயங்கும் அரசைத் தேர்ந்தெடுங்கள்' என்பது!

★ ராஜீவ் திவாரி - லக்னோவைச் சேர்ந்த பேராசிரியர். இவர் கடந்த மார்ச் 2 அன்று பிரதமரிடம் லாட்டரி முறைகேடு ஒன்றினைப் பற்றி தெரிவிக்க அவரின் இல்லத்திற்குச் சென்றுள்ளார். பிரதமரின் இல்ல பாதுகாப்பு அதிகாரிகள் மார்ச் 6 வரை பேராசிரியருக்கு எவ்வித பொறுப்பான பதிலும் கூறாததுடன், பொய்யான குற்றச்சாட்டுகளை சுமத்தி இரண்டு முறை காவலில் வைத்துள்ளனர். இரு முறையும் வழக்கை விசாரித்த நீதிபதி 'பிரதமரை சந்திப்பது குடிமகனின் அடிப்படை உரிமை' எனக்கூறி அவரை விடுவித்துள்ளார். காவல் துறையோ தீர்ப்பைக் காலில் போட்டு மிதித்துள்ளது. கடைசிவரை பிரதமரை சந்திக்க முடியாமலேயே பேராசிரியர் தனது சொந்த ஊருக்குத் திரும்பியுள்ளார்.

★ முன்னால் கிழக்கு ஜெர்மனியில், 'பிச்சை' எடுப்பதை சமூகக் குற்றமாக, ஜெர்மன் குற்றவியல் சட்டத்தின் கீழ் தடை செய்யப்பட்டிருந்ததை. இணைப்புக்குப் பின் 'பிச்சை எடுப்பதற்கு தனிப்பட்ட / சமூகக் காரணங்கள் உள்ளன' என்ற அடிப்படையில் அனுமதித்துள்ளனர். தற்சமயம், கிழக்குப் பகுதியில் பிச்சல்ககாரர்கள் இல்லாத ஒரு நகரத்தைக்கூட காணுவது அரிதாக உள்ளதுடன், குழந்தைகள் பிச்சையெடுப்பதும், இந்த இழிவான தொழிலை சமூக



மகாராஷ்டிரா ஷாஹாட்' எனுமிடத்தில் நடந்த தொழிற்சாலை விஷவாயுக் கசிவால் பாதிக்கப்பட்டவர்கள்.

விரோதக் கும்பல்கள் தனது ஆதாயத்துக்குப் பயன்படுத்துவதும் அதிகரித்து வருகிறது. அதே போன்று கிழக்குப் பகுதியில் வேலை இழந்து, அரசிடமிருந்து மாதாந்திர நிவாரண உதவித் தொகை பெறுபவர்களின் எண்ணிக்கை மட்டும் 40 லட்சத்தைத் தாண்டியுள்ளது. 'இந்த உதவித் தொகையைப் பெற அரசு அலுவலகங்களில் படியேறி இறங்குவதே என்னைக் குன்றிப் போகச் செய்துவிடுகின்றது' என்கிறார் வேலை இழந்த தொழிலாளி ஒருவர்.

★ கடந்த மார்ச் இரண்டாவது வாரத்தில், மகாராஷ்டிரா மாநிலத்திலுள்ள ஒரு செயற்கை நூலிழை தயாரிக்கும் தொழிற்சாலையில் வெளியேறிய கந்தக அமிலம், அருகிலுள்ள கழிவு நீர் கால்வாயில் கலந்து ஒருவித விஷவாயுவை உற்பத்தி செய்துள்ளது. காற்றில் கலந்த இவ்விஷ வாயுவினைச் சுவாசித்த அருகிலுள்ள கிராமத்தைச் சேர்ந்த ஒன்பது பேரும், முப்பது கால்நடைகளும் இறந்து போனதுடன், 40-க்கும் அதிகமானோர் ஆபத்தான நிலையில் மருத்துவமனைகளில் சேர்க்கப்பட்டுள்ளனர். கடந்த இரண்டு ஆண்டுகளில் மகாராஷ்டிராவில் மட்டும் நடந்த இரண்டு பெரிய விஷவாயு கசிவு விபத்துகளில் இதுவும் ஒன்று. இத்தொழிற்சாலையில் இது போன்ற கசிவுகள் அடிக்கடி நிகழ்ந்தும் கண்டும் காணாதுமிருந்த அரசாங்கம், நிலைமை கைமீறிப் போன தற்பொழுதுதான் நிர்வாகத்தினர் மீது வழக்குப் போடுவது, தொழிற்சாலையை மூட உத்தரவிடுவது என்று நிர்வாக சம்மந்தப்பட்ட நடவடிக்கைகளில் மட்டும் இறங்கியுள்ளது. போபால் விஷவாயு விபத்து நடந்து ஒன்பது ஆண்டுகள் கழித்தும் 3 லட்சத்துக்கும் அதிகமானோருக்கு நிவாரணத் தொகை இன்னும் வழங்கப்படாத சூழ்நிலையில், இது போன்று அவ்வளவாக வெளியே தெரியாத விபத்துக்களினால் பாதிக்கப்பட்டோருக்கு அரசாங்கம் எடுக்கும் வெறும் நிர்வாக ரீதியான நடவடிக்கைகள் எந்தளவு உதவுவதாக அமைந்துவிடும்?

★ "எனது உறவினர்களோ, எனது மனைவியோ வேறு யாரானாலும் அரசு விவகாரங்களில் தலையிட்டு ஆதாயம் தேட முயன்றால் அதிகாரிகள் உதவக் கூடாது" என்று திராவிட பாரம்பரிய உரிமை பாராட்டிய எம்.ஜி.ஆரும் கருணாநிதியும் சுற்றறிக்கைகளும், விளம்பரங்களும் கொடுத்தது நினைவிருக்கலாம். அதைக் காங்கிரசு "தேசிய"வாதிகள் முன்பு கிண்டல் செய்தார்கள். இப்போது இதே போன்றதொரு சுற்றறிக்கையை அரசுத் தலைவர் சங்கர் தயாள் சர்மாவும், நரசிம்மராவும் அனுப்பியிருக்கின்றனர். ஓட்டுப் பொறுக்கி அரசியல்வாதிகள் எல்லோரும் ஒரே குட்டையில் ஊறிய மட்டைகள்தாம். இதில் "திராவிடம்", "தேசியம்" என்ற பாகுபாடு கிடையாது.

★ "பெண்ணாய்ப் பிறப்பதற்குப் பெருந்தவம் செய்திட வேண்டும்" என்றான் பாரதி. ஆனால், பெண்ணாய்ப் பிறந்தவர்கள் இந்த உலகில் அனுபவிக்கும் கொடுமைகள் கணக்கிலடங்காதவை, விதவிதமானவை, குரூரமானவை. நமது நாட்டின் "உடன் கட்டை முறை"யை விடக் கொடூரமான சித்திரவதை முறை ஒன்று கென்யாவில் நிலவுகிறது. அங்கே இளம் பெண்களின் உடல் உறுப்பில் உள்ள உணர்ச்சிப் பகுதிகளை வெட்டி எறிந்துவிட்டு தைத்து விடுகிறார்கள். மணமான பிறகுதான் தையலைப் பிரிக்க அனுமதிக்கிறார்கள். இப்படிக் காட்டுமிராண்டித் தனமாகக் கற்பைக் காத்துக் கொள்ளும்படி செய்த பெண்களைத்தான் கென்யாவின் பல சமூகங்களைச் சேர்ந்த ஆண்கள் விரும்பி மணம் முடிக்கிறார்கள்.

படிப்பகம்

# மே-1 சிறீரங்கம் கோயில் கருவறை நுழைவுப் போராட்டம்

# பார்ப்பன - இந்துமதவெறி ஆதிக்கத்தை கருவறுப்போம்!

பார்ப்பன - இந்துமத வெறி ஆதிக்கத்தை கருவறுக்க "மே-1 சிறீரங்கம் கோயில் கருவறை நுழைவுப் போராட்டம்" என மக்கள் கலை இலக்கியக் கழகம், விவசாயிகள் விடுதலை முன்னணி, புரட்சிகர மாணவர் - இளைஞர் முன்னணி ஆகிய அமைப்புகள். அறிவித்துள்ளன.

- மே-1, அரங்கநாதனின் உறக்கத்தை கலைப்போம்!
  அக்கிரகாரத்தின் சட்டத்தை நொறுக்குவோம்!
- "ஒரே மக்கள் ஒரே பண்பாடு ஒரே சட்டம்" என்று பிதற்றும் இந்து முன்னணியே!
  - சக்கலியரை சங்கராச்சாரி ஆக்குவாயா?
  - சூத்திரரை அர்ச்சகராக்க சட்டமியற்றுவாயா?
  - சிறீரங்கம் அர்ச்சகனை மாரியாத்தாளுக்கு கிடா வெட்டச் சொல்வாயா?
  - மக்களை இழிவுபடுத்தும் மனுதர்மத்தைக் கொளுத்த தயாரா?
- தீண்டாமை சட்டப்படி குற்றம்! ஆனால் 'பறையனே கோயில் கருவறைக்குள் நுழையாதே'' - என்பது சட்டப்படி பார்ப்பானின் சம்பிரதாய உரிமையாம்! மனுநீதியின் மறுபதிப்பான இந்திய அரசியல் சட்டம் ஒழிக!

இவையெல்லாம் மேற்கண்ட அமைப்புகளின் பிரச்சார இடிமுழக்கங்கள்! சுவரெழுத்தில், துண்டறிக்கைகளில், பிரசுரத்தில், சுவரொட்டிகளில், ஒலிநாடாக்களில் ஒலித்த வண்ணமுள்ளன. இப் போராட்டத்திற்காக தமிழகமெங்கும் 70 இடங்களில் ஒரு மாத காலமாக பொதுக் கூட்டங்கள் நடத்த இருப்பதாக அறிவிக்கிறது ஒரு துண்டறிக்கை. இவர்களின் பிரச்சாரம் வீச்சாக தமிழகமெங்கும் காணப்படுகிறது. இந்நிலையில் இதைக்கண்டு பீதியடைந்த பார்ப்பன - இந்து மதவெறிக் கும்பல், எதிர்த்து அறிக்கை வெளியிட்டுள்ளது. தினமலரில் அன்று இந்து முன்னணியைச் சேர்ந்த ராம கோபாலன் கருவறை நுழைவுப் போராட்டத்திற்கு எதிராக அன்று தேங்காய் உடைப்பு பிராத்தனை (?) நடத்தப் போவதாக அறிவித்துள்ளார். இது கருவறை போரராட்டத்திற்கு கிடைத்த முதல் வெற்றி.

பாபர் மசூதி இடிக்கப்பட்ட அந்த கறுப்பு நாள் தொடர்பாக 1-15 ஜன. '93, புதிய ஜனநாயகம் இதழில் சிறப்புக் கட்டுரை வெளியிட்டோம். இந்து மதவெறியர்களின் பின்னணி பார்ப்பன - பனியா கும்பல்தான். மகந்துகள், சாமியார்கள், சந்நியாசிகள், மடாதிபதிகள், பீடாதிபதிகள் உள்ளடக்கிய இப்பார்ப்பன - பனியா கும்பலின் நோக்கம் பார்ப்பனீய - வர்ணாசிரம ஆட்சி தான். எனவே இக்கும்பலுக்கு எதிராக தாழ்த்தப்பட்ட - பழங்குடி மற்றும் பின் தங்கிய - சிறுபான்மை மக்களை அணி திரட்ட வேண்டும். குறிப்பாக செயல்பூர்வமாக, இதைச் செய்வதற்காக திடீரென்று கோவில் கருவறைக்குள் நுழைவது போன்ற போராட்டங்கள் நடத்த வேண்டும்'', என எழுதியிருந்தோம். இதை மேற்கண்ட புரட்சிகர அமைப்புகள் வழிமொழிந்து களத்தில் இறங்கியுள்ளன.

நாடு முழுவதும் பார்ப்பன - இந்து மதவெறியர்கள் தாக்குதல் நிலையில் இருந்து கொண்டு முஸ்லீம் மக்களுக்கு எதிராக: இன, மொழி, உரிமைகளுக்கு எதிராக பகிரங்கமான தாக்குதல் தொடுத்து வருகிறார்கள். அதுவும் சமீப காலமாக தமிழகத்தை செயல்களமாக தேர்ந்தெடுத்து கவனம் செலுத்தி வருகிறார்கள். இந்நிலையில் மதச்சார்பற்ற கட்சிகள் என்று தம்மை அழைத்துக் கொள்கின்ற எதிர்க்கட்சிகள் பார்ப்பன - பாசிசத்தை கருத்து ரீதியாகவோ களத்திலோ நேருக்கு நேர் சந்தித்து முறியடிக்க இயலாமல் தடுமாறுகின்றன. குறிப்பாக "இந்தி - இந்து - இந்தியா" என்ற சாதி, மத, இன, மொழி ஒடுக்கு முறைகளின் எல்லாக் கூறுகளையும் எதிர்ப்பதற்கு இவர்கள் தயாராக இல்லை. காரணம் கருத்து ரீதியாகவே இவற்றுடன் பலர் ஒன்றுபடுகின்றனர். குறிப்பாக இந்து மதம் என்று அழைக்கப்படும் சனாதன பார்ப்பனீய - சாதீய ஒடுக்கு முறையின் முகத்திரையைக் கிழிப்பதற்கு திராவிடப் பாரம்பரியம் என்று சொல்லிக் கொள்ளும் கட்சிகளும் தயங்குகின்றன.

தமிழகத்தில் "கருவறை நுழைவுப் போராட்டம்" நடத்துவதாக பெரியார் தீர்மானித்திருந்து, ஆனால் பெரியார் மறைவின் காரணமாக நடைபெறாமல் போனது. பார்ப்பன - இந்துமத எதிர்ப்பில் 'பெரியாரின் பணி' என்ற சாதகமான பின்புலம் தமிழகத்தில் இருந்தும்கூட திராவிடர் கட்சிகள் பார்ப்பனீயத்தை எதிர்ப்பதில் தயக்கம் காட்டுவது மறைமுகமாக கருத்துத் துறையில் பார்ப்பனீயம் பெற்றுள்ள வெற்றியையே காட்டுகிறது. அதனால்தான் தமிழ் இன உரிமை பற்றியும் பெரியார் பற்றியும் இந்து முன்னணிக் கும்பல் திமிர்த் தனமாகத் தாக்கிப் பேச முடிகிறது. இதேப்போல் இந்து மதத்தற்கெதிராக மூர்க்கமாகத் தாக்குதல் தொடுத்த அம்பேத்கார் தோன்றிய மகாராஷ்டிர மண்ணில் (பம்பாய்) சிவசேனா, பாரதீய ஜனதா கும்பல் மிகப் பெரிய படுகொலையை நடத்த முடிந்திருக்கிறது.



மார்க்சியம் - லெனினியம் பேசுகிற இதுபோன்ற சாதி ரீதியான போராட்டத்தை எடுப்பது அவர்களது நிலைப்பாட்டுக்கே எதிரானது, வர்க்க சிந்தனைக்கு அப்பாற்பட்ட சாதியச் சிந்தனையின் வெளிப்பாடு என்றெல்லாம் பலர் பிதற்றி திரிகிறார்கள். இதில் வேடிக்கை என்னவென்றால் மண்டல் கமிஷன் பிரச்சினையில் இவ்வமைப்புகள் எடுத்த முடிவின் (ஆதரிக்கவோ, எதிர்க்கவோ முடியாது) காரணமாக இவ்வமைப்புகளை பார்ப்பனீயத் தலைமை கொண்டது என்று விமர்சித்த சிலரும் இதில் உண்டு. மேலும், பார்ப்பனீயத் தலைமை என்று பேசிய பலர் இன்று வாயடைத்து நிற்கிறார்கள்.

மார்க்சியம் வறட்டு சூத்திரமல்ல: நடைமுறைத் தத்துவம். அதன் ஒளியில் மண்ணுக்கேற்ற, கால மாற்றங்களுக்கு ஏற்ப நிலைப்பாடுகளையும் நடைமுறைகளையும் தீர்மானிப்பதிலேயே அதன் வெற்றியடங்கியுள்ளது. சாதியம் என்பது இந்தியாவில் உள்ள தனிச் சிறப்பான தன்மை. இது தொடர்பான நிலைப்பாடுகளையும் செயல்பாடுகளையும் கொண்டிருக்க வேண்டியது கம்யூனிச சித்தாந்தைத்தை ஏற்றுக் கொள்ளும் அமைப்புகளின் கடமை.

சாதீயம் என்பது பார்ப்பனீய ஒடுக்குமுறையன்றி வேறில்லை. இந்தியாவிற்குள் புகுந்த ஆரியர்கள் - பார்ப்பனர்கள் - நிறம், பிறப்பு அடிப்படையில் மக்களை நால் வருணங்களாகப் பிரித்து அடக்கி ஒடுக்கி ஆதிக்கத்தை நிலை நாட்டினார்கள் என்பதுதான் வரலாறு. அன்றிலிருந்து இன்று வரை பார்ப்பனீயம் - பார்ப்பன மதம் என்பதே இந்து மதமாகும். இன்றைக்கு சொல்லப்படுகிற 'இந்து மதம்', பல சீர்திருத்தங்களையும், மாற்றங்களையும் கண்டிருந்தாலும், அதன் சாரம் பார்ப்பனீய ஒடுக்கு முறைதான்.

இத்தகைய பார்ப்பனீய - இந்து மத

படிப்பகம்

வெறி பாசிச அபாயம் இன்று நாடு முழுவ ும் பரவி மக்களை அச்சுறுத்திக் கொண் ள்ளது. இந்து மதவெறியர்கள் இந்தி ாவை ஹிட்லரின் ஜெர்மனியைப் போல் ாற்றத் துடிக்கிறார்கள். நாட்டிலுள்ள மக்க ின் பல்வேறு பொருளாதார, வாழ்க்கைப் ிரச்சினைகளையெல்லாம் பின்னுக்குத் ள்ளிவிட்டு இந்து மதவெறி பாசிசம் ஒரு ாற்று என்கிற போர்வையில் முன் வந்து ிற்கிறது. இதை முறியடிப்பதே பிரதானக் டமை. போலிக் கம்யூனிஸ்டுகள் போல வெறும் இந்து மதவெறியை தாக்குவதல்ல; றிப்பாக பார்ப்பனீயத்தை தாக்கி முறிய டிப்பதே இன்றையத் தேவை.

முஸ்லீம்களுக்கு எதிரான இந்து வெறி ூட்டும் செயலை ஆர்.எஸ்.எஸ். கும்பல் பார்ப்பனீய அடையாளங்களை முன்னி றுத்தி - தூக்கி பிடித்துதான் செய்கிறது. மதுரை வீரன், மாரியாத்தா, அய்யனார், காளி என பின்தங்கிய, தாழ்த்தப்பட்ட மக்க ளால் வணங்கப்படும் எத்தனையோ கோயில்கள் இடிந்து கேட்பாரற்று கிடப் பதை இவர்கள் கண்டு கொள்வதே இல்லை. ஆனால், மனுதர்மத்தை நியாயப் படுத்தி வலியுறுத்தும் பகவத் கீதையின் நாயகன் கிருஷ்ணன், மனுதர்மப்படி ஆட்சி செய்து, சூத்திரனான சம்புகனைக் கொன்ற ராமன் முதலிய புரான - இதிகாச 'கற்பனா பாத்திரங்களுக்கே' கோயில் கட்ட இயக்க மெடுக்கிறார்கள். இவ்வியக்கத்திற்கு (மசூதியை இடிக்கவும், கோயில் கட்டவும்) தாழ்த்தப்பட்டவர்களையும் கூட "இந்துக் கள்" என்று கூறி அழைத்துச் செல்கிறார்கள்.

பார்ப்பான் தனக்கு என்று ஒரு தெருவை உருவாக்கிக் கொண்டுள்ளான். தாழ்த்தப்பட்டவர்கள் காற்றே படக்கூடாது, பட்டால் தீட்டு எனக்கூறி ஊருக்கு வெளியே ஒதுக்கி வைத்துள்ளான். யாருக் கும் விளங்காத சமஸ்கிருதத்தை தனது மொழியாக்கிக் கொண்டுள்ளான். பொது இடங்களையோ, பொதுப் பொருட்க ளையோ தாழ்த்தப்பட்டவர்கள் பயன்ப டுத்த முடியாத வண்ணம் சாதிய ஒதுக்கலை அமுல்படுத்தி வருகிறான். குடுமியும், பூணூலும், வேதமும் தனக்கு மட்டுமே சொந்தம் என தனிப்பட்ட உரிமை பாராட்டு கிறான். கடவுளை பிற இந்துக்கள் நேரடி யாக வழிபடக்கூடாது; பார்ப்பான் மூலமா கவே வழிபட வேண்டும். அதாவது கோயில் அர்ச்சகனாக பார்ப்பான் மட்டுமே இருக்க முடியும் என சட்டமாக்கி வைத்துள் ளான். இத்தகைய பார்ப்பனக் கூட்டம் தான் இந்து முன்னணி, பாரதீய ஜனதா போன்ற பல்வேறு பெயர்களில் திரண்டு "இந்து ஒற் றுமை" பேசி வருகிறது. "தலை நிமிர்ந்து சொல்: நாம் இந்துக்கள்" என்று போதை ஏற்றுகிறது. ஒட்டு மொத்த இந்துக்களின் பிரதிநிதியாக தன்னை முன்னிறுத்திக் கொண்டு வலம் வருகிறது. இக்கும்பல்.

இந்த மக்கள் விரோதக் கும்பலின் 'இந் து' முகத்திரையை இப்போது நாம் கிழிக்கா விட்டால் பார்ப்பனீய, மனுதர்மக் கொடுங் கோன்மையின் கீழ் நிரந்தரமாகத் தவிக்க நேரிடும். பெரியாரும் அம்பேத்காரும் மற்ற பல சமூக சீர்திருத்தவாதிகளும் போராடிப் பெற்ற உரிமைகளையும் நாம் இழக்க நேரிடும். எனவே இக்கும்பலின் 'இந்து' முகத்திரையைக் கிழிக்க "கருவறை நுழைவுப் போராட்டம்" பெரிதும் உதவும். மேலும் இக்கும்பல் இந்துக்களைத் திரட்டி னால்தானே முஸ்லீம்களைத் தாக்க முடி யும்? இந்துகளிலேயே இக்கும்பலின் உண்மை முகத்தைக் காட்டி தனிமைப் படுத் திவிட்டால் இக்கும்பல் முடமாகிப்போகும்; பிறகு "இந்து - முஸ்லீம்' என மக்களை கூறுபோடவும் முடியாது; முஸ்லீம்களைத் தாக்கவும் முடியாது.

## "இந்து வெறிக்கு எதிரான ஆயுதம் அசுரகானம்"

"அசுரகானம்" ஒலிப்பேழை விமர்சனக் கூட்டம் 14-3-93 அன்று காலை 10 மணிக்கு குடந்தை பெரியார் மாளிகையில் நடந்தது. குடந்தை திரைப் பட விமர்சனக் குழு, பகத்சிங் மன்றம் ஆகியவை இணைந்து இந்நிகழ்ச்சியை ஏற்பாடு செய்தன. கூட்டத்திற்கு வழக்கு ரைஞர் திருநாவுக்கரசு தலைமை ஏற் றார். கவிஞர் ரவி சுப்ரமணியம், துரை.மா ணிக்கம், இராமச்சந்திரன், கணேச மூர்த்தி, சாரா, இளஞ்சேட் சென்னி, ஓவி யர் புகழேந்தி, அசோகன், ஜெயபால், துரை பெரிய சாமி, கணணதாசன், முத்து பாரதி, அருட்கண்ணனார், சம்புகன ஆகியோர் விமர்சன உரையாற்றினர். ம.க.இ.க.-வைச் சேர்ந்த கலைஞர் கோவன் ஒலிப்பேழை உருவாக்க அனுப வம் பற்றிப் பேசினார். காளியப்பன் விமர் சனங்களுக்குப் பதிலளித்து ஏற்புரை நிகழ்த்தினார். சிற்சில தொழில் நுட்பக் குறைகளைத் தவிர்த்து, ஒலிப்பேழை தக்க தருணத்தில் வெளிவந்துள்ள, இந்து மதவெறிக்கு எதிரான வலிய ஆயு தம் என அனைவரும் பாராட்டினர்.




இப்போராட்டத்தை அரசு முனைப்பா கத் தடுக்கும். ஏனெனில் இது இந்திய அரசி யல் சட்டத்திற்கு எதிரானது. அதாவது இந் திய அரசியல் சட்டம் என்பது மனுதர்மத் தின் மறுபதிப்பு; பார்ப்பன - இந்து மத ஒடுக்கு முறைக்கு பாதுகாப்பு. கருவறை யில் இருக்கும் சாமி சிலையைச் சூத்திரன் தொட்டால் தீட்டாகிவிடும் என்று கூறும் ஆகம விதிக்கு உச்ச நீதிமன்றமே ஒரு வழக் கில் சட்ட அங்கீகாரம் கொடுத்துள்ளது. இந் திய அரசியல் சட்டப்படி ஒரு தாழ்த்தப்பட் டவன் பொது இடத்தையோ, பொதுப் பொருளையோ பயன்படுத்த விடாது தடுக் கப்பட்டால் அது தீண்டாமை சட்டப்படி குற் றம். ஆனால் இந்திய அரசியல் சட்டப்படி பார்ப்பானைத் தவிர கருவறை சாமியை யாரும் தொட முடியாது; பார்ப்பனனே அர்ச்சகனாக முடியும். எனவே "கருவறை நுழைவுப் போராட்டம்" இந்திய அரசியல் சட்டத்தின் இந்துமத சாயத்தை வெளுக்கச் செய்யும்.

காலம் மாறிவிட்டதென்றும் முன்பி ருந்த அளவுக்கு சாதிக் கொடுமைகள் இன்று இல்லை என்றும் பார்ப்பனக் கும்பல் பசப்புகின்றது. ஆர்.எஸ்.எஸ். தீண்டா மையை எதிர்ப்பதாகவே புளுகுகிறது. மத விவகாரங்களில் தலையிட அதை எதிர்க் கும் நாத்திகர்களுக்கும், கம்யூனிஸ்டுகளுக் கும் என்ன உரிமை இருக்கிறது என்று ஏமாளி பக்தர்களை உசுப்பி விடுகிறது: பார தீய ஜனதா - இந்து முன்னணி கும்பல். மே 1, அன்று "தேங்காய் உடைப்பு பிரார்த் தனை" பற்றிய உசுப்பல் சாதாரண பக்த னுக்கு மட்டுமல்ல. இன்னொரு பக்தனான அரசுக்கும் தான்! இதில் ஆத்திகரா, நாத்தி கரா, கம்யூனிஸ்டா என்பதல்ல பிரச்சினை. ஏனெனில் நாத்திகரையும் கூட சூத்திரன் என்கிறது இந்து சட்டம்; கம்யூனிஸ்டை முஸ்லீம்களோடு சேர்த்து அடித்து விரட்ட வேண்டும் என்கிறது இந்து முன்னணி கும் பல்.

எனவே கோவில் கருவறை நுழைவுப் போராட்டம் அனைவரும் பங்கெடுத்துக் கொள்ள வேண்டிய போராட்டம். இது வரை பார்ப்பனீய எதிர்ப்பு பேசி வந்த - பேசிவரும் திராவிடக் கட்சிகள் தமிழின அமைப்புகள், அம்பேத்கார் - பெரியார் அமைப்புகள், பா.ம.க. முதலியவை தங் கள் பதிலைக் கூற வேண்டிய போராட்டம். தொடரட்டும் இதன் பிரச்சார அலை! பதறட் டும் பார்ப்பன - இந்து மதவெறியர்கள்!

www.padippakam.com

# இந்துவெறி போதையில் இந்தியப் போலீசுத்துறை

*கடந்த டிசம்பர் - ஜனவரி மாதங்களில் வட மாநிலங்களில் நடந்த கலவரங்கள், இந்து வெறியர்களின் பாசிச அட்டூழியங்களோடு இந்தியப் போலீசாரின் இந்துவெறித் தன்மையையும் அம்பலப்படுத்திக் காட்டிவிட்டது. போலீசு மட்டுமல்ல; ராணுவம், சட்டம், நீதி, அதிகார வர்க்கம் உள்ளிட்ட ஒட்டுமொத்த அரசு எந்திரமே மதச்சார்பின்மையைக் குப்பையில் வீசிவிட்டு இந்துவெறி போதையில் மூழ்கிக் கிடக்கிறது. இந்தியப் போலீசுத் துறை இந்து வெறியுணர்வுகளுக்கு அப்பாற்பட்ட நடுநிலையான அமைப்பு அல்ல. மதச் சிறுபான்மையினர் இனிமேலும் அதன் மீது நம்பிக்கை வைத்து பாதுகாப்பைத் தேட முடியாது என்பதையே நிலைமைகள் உணர்த்துகின்றன.*

அயோத்தியில் பாபர் மசூதி இடிக்கப்பட்ட அடுத்த 48 மணி நேரத்தில் பம்பாயில் மதவெறிக் கலவரம் பற்றிக் கொள்ளத் தொடங்கியது. சிவசேனா குண்டர்கள் நடத்திய தாக்குதலில் பம்பாய் நகரமே இரு வாரங்களுக்கும் மேலாகப் பற்றி எரிந்தது. நூற்றுக் கணக்கான முஸ்லீம்கள் உயிருடன் எரிக்கப்பட்டனர். 1000-க்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டனர். கலவரத்தைக் கட்டுப்படுத்த வேண்டிய போலீசே இந்து வெறிபிடித்து முஸ்லீம்களுக்கு எதிரான கலவரத்தில் இறங்கியது.

இந்து வெறியர்களின் தாக்குதலுக்கு அஞ்சி தப்பியோடியவர்களைப் பிடித்து அவர்கள் ''சுன்னத்'' செய்துள்ளார்களா என்று ஆடையை உருவிப் பார்த்து, முஸ்லீம்கள் என்றால் சுட்டுக் கொன்றது பம்பாய் போலீசு. மருத்துவப் பிரேதப் பரிசோதனை அறிக்கைகளின்படி, போலீசு துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்டவர்களில் 99% பேர் முஸ்லீம்கள். எல்லாவற்றுக்கும் மேலாக, பம்பாய் கலவரத்தின் போது, ''முஸ்லீம் குடியிருப்புகளைத் தீயிட்டுக் கொளுத்து! உணவு மற்றும் அத்தியாவசியப் பொருட்கள் முஸ்லீம் பகுதிகளுக்குச் செல்வதை தடுத்து நிறுத்து!'' என்று போலீசு கட்டுப்பாட்டு அறையிலிருந்து ஒயர்லெஸ் மூலம் நூற்றுக் கணக்கான உத்திரவுகள் பறந்தன. அதைத் தொடர்ந்து சிவசேனா குண்டர்களுடன் சேர்ந்து பம்பாய் போலீசார் முஸ்லீம்களுக்கு எதிரான நரவேட்டையில் ஈடுபட்டனர்.

ஒயர்லெஸ் மூலம் இந்துவெறியூட்டும் உத்திரவுகளைப் பிறப்பித்து, நரவேட்டையில் ஈடுபட்ட போலீசார் மீது நடவடிக்கை எடுத்து தண்டிக்கக் கோரி பம்பாய் உயர்நீதிமன்றத்தில் ஜனநாயக உரிமைப் பாதுகாப்புக் கழகத்தினர் (CPDR) அண்மையில் வழக்கொன்றைத் தொடுத்துள்ளனர். போலீசு கட்டுப்பாட்டு அறையிலிருந்து ஒயர்லெஸ் மூலம் பரவிய உத்திரவுகளை ஒலி நாடாக்களில் பதிவு செய்து, தமது வழக்குக்கு ஆதாரமாக 77 ஒலி நாடாக்களைத் தாக்கல் செய்துள்ளனர். பம்பாய் போலீசாரின் இந்துவெறித் தன்மையை மூடி மறைக்க முடியாத நிலையில் ''சில சீழிந்த சக்திகள் போலீசுத் துறையில் ஊடுருவியிருப்பதையே இது காட்டுகிறது'' என்று பம்பாய் போலீசுக் கமிஷனர் ஏ.எஸ்.சாம்ரா ஒப்புக் கொண்டுள்ளார்.

கடந்த டிசம்பர் மாதத்தில் நடந்த கலவரங்களில் போலீசாரின் பங்கு, அதன் தன்மை பற்றி பத்திரிகைகளில் விவாதிக்கும் முதலாளித்துவ அறிஞர்கள், இன்னொரு கலவரம் மூண்டால் இத்தகைய போலீசைக் கொண்டு சமாளிக்கவே முடியாது என்று அங்கலாய்க்கிறார்கள். இந்து வெறி நோயிலிருந்து போலீசுத் துறையை மீட்பது எப்படி? எவ்வாறு மறு சீரமைப்பது முதலானவற்றைப் பற்றி ஆலோசனைகளைக் கூறுகிறார்கள். ஆனால், பம்பாய் போலீசு மட்டுமல்ல; ஒட்டுமொத்த இந்திய போலீசுத் துறையே இந்துவெறி போதையில் மூழ்கி, சிறுபான்மையினருக்கு எதிரான அதிக்கிரமங்களில் ஈடுபட்டு வருகிறது. தற்போதைய கலவரத்தின் போது மட்டுமல்ல; கடந்த பத்தாண்டுகளுக்கும் மேலாக இத்தகைய அட்டூழியங்களைச் செய்து வருகிறது.

பம்பாய் நாக்பதா போலீசு நிலையமும் இந்து கோயிலும்.




☆ ☆ ☆

அது ஒரு சிறிய அனுமார் கோயில். அனுமார் சிலைக்கு சிவப்பு நிற பட்டாடை சுற்றப்பட்டிருந்தது. அந்த ஆடையின் விளிம்புப் பகுதியில் ''ஜெய் சிரீராம்'' என்று பொன்னிறத்தில் எழுதப் பட்டிருந்தது. ஊதுபத்திகளைக் கொளுத்தி, மணியடித்து, கோயில் பூசாரி வழிபாட்டைத் துவக்கியதும் கூடியிருந்த பக்தர்கள் கண்களை மூடி பக்தியோடு வழிபட்டனர். பின்னர் அவர்கள் தங்கள் பூட்சுகளை அணிந்து, துப்பாக்கிகளுடன் போலீசு நிலையத்துக்குள் சென்றனர்.

இந்தப் பக்தர்களும் பூசாரியும் போலீசுக்காரர்கள். இந்த அனுமார் கோயில், பீகாரிலுள்ள சுல்தான்பூர் காவல் நிலையத்திலேயே அமைந்துள்ளது. இக் கோயிலைக் கட்டியமைத்து அதன் புரவலர்களாக இருப்பதும் போலீசுக்காரர்கள்தான்!

சுல்தான்பூர் மட்டுமல்ல; பீகாரிலுள்ள 1,097 போலீசு நிலையங்களில் சிறிய அளவிலான அனுமார் அல்லது சிவன் கோயில்கள் அமைந்துள்ளன. போலீசுக்காரர்களே அவற்றின் பூசாரிகள். சட்ட விரோதமான முறையில் போலீசு நிலையத்திலேயே கோயில் கட்டியுள்ளதற்கு எதிராக — அரசு நிலத்தை மத நோக்கங்களுக்குப் பயன்படுத்துவற்கு எதிராக இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

ஓராண்டுக்கு முன்பு தர்பங்கா போலீசு நிலையத்தைச் சேர்ந்த ஒரு போலீசு பூசாரியை இட மாற்றம் செய்ததற்கு எதிராக மாவட்டம் முழுவதும் போலீசார் திடீர் வேலை நிறுத்தம் செய்ததோடு வீதிகளில் திரண்டு ஆர்ப்பாட்டமும் செய்தனர். இதன் காரணமாக, அந்தப் பூசாரியின் இடமாற்ற உத்திரவை நிர்வாகம் ரத்து செய்ய வேண்டியதாயிற்று. சாதாரண இடமாற்ற உத்திரவுக்கே இந்த நிலைமை என்றால், போலீசு நிலையக் கோயில்களை அகற்றக்கோரி உத்திரவிட்டால் என்னவாகும் என்பதைச் சொல்ல வேண்டியதில்லை.

பீகார் என்பது பின்தங்கிய மாநிலம்; சமூக சீர்திருத்த இயக்கங்களின் தாக்கமோ, நாகரீக வளர்ச்சியோ இல்லாத அம்மாநிலத்தில் போலீசாரிடம் மதச் சார்பின்மையையும் கட்டுப்பாட்டையும் எதிர்பார்ப்பது அரிதாகவே இருக்கும் என்று சிலர் கருதலாம். ஆனால், நாகரீகமிக்க பம்பாயின் நாக்பாடா போலீசு நிலையத்திலும் இத்தகைய கோயில் உள்ளது. கடந்த ஜனவரியில் நடந்த கலவரத்தின்போது, ''முஸ்லீம்களைத் தாக்குங்கள்! மசூதிகளை இடித்துத் தள்ளுங்கள்!'' என்று ஒயர்லெஸ் மூலம் உத்திரவுகள் பறந்த போலீசு நிலையங்களில் இதுவும் ஒன்று.

அயோத்தியில் பாபர் மசூதி 5 மணி நேரத்திற்கும் மேலாக இந்து வெறியர்களால் காட்டுமிராண்டித் தனமாக இடிக்கப்பட்ட போது, அங்கே பாதுகாப்புக்காகக்



படிப்பகம்

www.padippakam.com

நவிக்கப்பட்டிருந்த போலீசார் கைகட்டி நின்று வேடிக்கைப் பார்த்தனர். சில போலீசார் இந்து வெறியர்களோடு சேர்ந்து கொண்டு கரசேவையிலும் ஈடுபட்டனர். இது வரலாற்றின் கறுப்பு அத்தியாயமாகப் பதிவாகிவிட்டது. வரலாறு மீண்டும் இருண்ட காலத்தை நோக்கிச் செல்வதற்கான அபாயமே இன்னமும் நீடிக்கிறது.

காசியிலுள்ள கியான்வபி மசூதியை இடித்து விசுவநாதன் கோயிலை விடுவிக்கப் போவதாக இந்து வெறியர்கள் ஏற்கனவே அறிவித்துள்ளனர். விசுவநாதன் கோயில் அருகே நிறுவப்பட்டுள்ள போலீசு நிலையச் சுவர்கள் முழுவதும் ''ஜெய் சிறீராம்!'' என்ற முழக்கங்களுடன் சுவரொட்டிகள் இப்போது காணப்படுகின்றன. அக்காவல் நிலைய போலீசு அதிகாரி, ''இந்த தெய்வீக வாசகத்தை நாள் முழுவதும் காண்பதில் நான் மிகவும் பரவசமடைகிறேன்'' என்கிறார். இக்கோயிலைச் சுற்றி பாதுகாப்புக்கு நிறுத்தப்பட்டுள்ள ஏழத்தாழ 300 போலீசுக்காரர்கள் அன்றாடம் இங்கு வழிபாடு நடத்தி விட்டுத்தான் பணிக்குச் செல்கின்றனர். ''நான் அயோத்திக்கு கரசேவகனாகச் சென்று மசூதி இடிப்பில் கலந்து கொண்டேன். கியான்வபி மசூதியை இடித்து விசுவநாதன் கோயிலை விடுவிக்க சாதுக்கள் போராட்டம் நடத்தினால் நான் அதில் முதன்மையாகப் பங்கேற்பேன்'' என்கிறார் அங்குள்ள போலீஸ்காரர் ஒருவர்.

உ.பி. போலீசைவிட பீகார் போலீசார் இதை தமது நடவடிக்கையின் மூலம் நிருபித்து முதலிடம் வகிக்கிறார்கள். அயோத்தியில் மசூதி இடிக்கப்பட்ட அதே நேரத்தில் பீகாரின் தன்பாத் மாவட்டம் ஜாரியா எனும் ஊரிலுள்ள மசூதியை போலீசாரே இடித்துத் தள்ளினர். இதிலே கொடுமை என்ன வென்றால், இப்போலீசார் அனைவரும் அம்மசூதியைப் பாதுகாப்பதற்காக அனுப்பப்பட்டவர்கள். இது மட்டுமின்றி, 5 நாட்களுக்கும் மேலாக இந்து வெறியர்களுடன் சேர்ந்து கொண்டு கலவரத்திலும் ஈடுபட்டனர்:

பீகாரிலுள்ள புர்னெயாவில், ''ஜெய் சிறீராம்'' என்று கூச்சலிட்டுக் கொண்டு முஸ்லீம் குடியிருப்புகளைத் தாக்கிய ஒரு சப்-இன்ஸ்பெக்டரை அவரது உயரதிகாரியே (டி.ஐ.ஜி) கையும் களவுமாகப் பிடித்தார். சப்-இன்ஸ்பெக்டரின் இந்து வெறியாட்டத்தின் விளைவாக 40-க்கும் மேற்பட்ட இடங்களில் சிறுபான்மையினர் தாக்குதலுக்கும் சூறையாடலுக்கும் ஆளாகினர்.

அயோத்தி சம்பவத்தையொட்டி வட மாநிலங்களில் நடந்த ஒருசில அதிக்கிரமங்களாக மட்டும் இவற்றைக் கருத முடியாது. கடந்த பத்தாண்டுகளுக்கும் மேலாக வேர்விட்டுப் பரவிவரும் இந்துவெறி பாசிசத்தின் வெளிப்பாடுகள்தான் இவை. இந்து வெறி போதை தலைக்கேறி ஆட்டம் போட்ட பம்பாய் போலீசாருக்கே பாடம் சொல்லித் தரும் வகையில் மிகக் கொடூரமான, காட்டுமிராண்டித்தனமான அட்டூழியங்கள் உத்திரப் பிரதேச ஆயுதப்படை போலீசாரால் ஏற்கனவே நடத்தப்பட்டுள்ளன.



பைசாபாத்தில் இந்துவெறி போலீசால் சூறையாடப்பட்ட ஹாதுன்னிஷாவின் வீடு; மதச்சார்பின்மையின் லட்சணம்.

● 1980 ஆகஸ்ட் மாதத்தில் பக்ரீத் திருநாளன்று மொராதாபாத்திலுள்ள ஈத்காவில் நண்பகல் தொழுகைக்காக ஏறத்தாழ 50,000 முஸ்லீம்கள் குழுமியிருந்தனர். அவர்களை ஆத்திரமூட்டும் நோக்கத்தோடு, நமாஸ் படிக்கும்போது ஆயுதப் படை போலீசார் கூட்டத்தினுள் பன்றிகளை ஏவிவிட்டனர். இதனால் தங்கள் தொழுகையின் புனிதத்துவம் கெட்டுவிட்டதாக முஸ்லீம்கள் கூச்சலிடத் தொடங்கியதும், போலீசார் கண்மூடித்தனமாக கூட்டத்தின் மீது துப்பாக்கிச் சூடு நடத்தி 12 பேரைக் கொன்றொழித்தனர்.

● 1987 ஜனவரியில் நடந்த மீரட் கலவரத்தின் போது உ.பி. ஆயுதப் படை போலீசார் தம்மை இந்து வெறிபிடித்த காட்டுமிராண்டிகள் என்பதை நிரூபித்துக் காட்டினர். மீரட்டின் புறநகர் பகுதியான ஹாஷிம் புராவில் வீடு வீடாக தேடுதல் வேட்டை என்ற பெயரில் 50-க்கும் மேற்பட்ட முஸ்லீம் இளைஞர்களைப் பிடித்து இழுத்துச் சென்ற போலீசார், அருகிலுள்ள ஹிண்டன் கால்வாய் அருகே வரிசையாக நிற்கவைத்து சுட்டுக் கொன்று பிணங்களை கால்வாயில் வீசியெறிந்தனர். இதில் அதிசயமாக உயிர் பிழைத்த ஒரு இளைஞர் டெல்லிக்குத் தப்பிச் சென்று, பத்திரிகையாளர்களிடம் பேட்டியளித்த பின்னரே இக்கொடுஞ் செயல் உலகுக்குத் தெரிய வந்தது.

இக் கொலை வெறியாட்டத்தைத் தலைமை ஏற்று நடத்திய போலீசு சூப்பிரண்டு திரிபாதி, பின்னர் பிலிபிட் வட்டாரத்துக்கு மாற்றப்பட்டான். நான்காண்டுகளுக்குப் பின்னர் 1991-ல், பொற்கோயிலுக்குப் புனிதப் பயணம் சென்ற சீக்கிய யாத்திரீகர்களை வழிமறித்து நடுக்காட்டில் 10 பேரைச் சுட்டுக் கொன்றுவிட்டு அவர்களைப் பயங்கரவாதிகள் என்று கதை கட்டியவனும் இதே திரிபாதிதான்.

● 1990 அக்டோபர் 30-ந் தேதியன்று அயோத்தியிலுள்ள பாபர் மசூதி மீது இந்து வெறியர்கள் தாக்குதல் நடத்தி அதன் குவிமாடங்களைத் தகர்த்த செய்தி பரவியதும், அலிகாரில் தொழுகைக்காக கூடிய முஸ்லீம்கள், ஆத்திரமடைந்து, வீதியிலுள்ள கடைகளை அடைக்கக் கோரினர். இதைத் தடுத்த போலீசார் மீது வெறுப்புற்று கல்லெறிந்தனர். இதற்குப் பழிவாங்கும் வெறியோடு, அடுத்த நாளன்று ஆயுதப் படை போலீசார் இந்து குடியிருப்புகளின் மாடி

படிப்பகம்

www.padippakam.com




மொராதாபாத்தில் முஸ்லிம்கள் மீதான போலீசின் காட்டுமிராண்டித் தாக்குதல்.

யில் நின்று கொண்டு கண்ணில்பட்ட முஸ்லீம்கள் மீது வெறித்தனமாக துப்பாக்கிச் சூடு நடத்தினர். இந்து வெறியர்களை உசுப்பிவிட்டு, அவர்களோடு சேர்ந்து முஸ்லீம் குடியிருப்புகளைத் தாக்கிச் சூறையாடினர்.

● 1991 டிசம்பரில் வாரணாசியில் நடந்த கலவரத்தின் போது ஊரடங்கு உத்திரவு தளர்த்தப்பட்ட நேரத்தில் 8 இந்துக்கள் கொல்லப்பட்டனர். குற்றவாளிகளைப் பிடித்து தண்டிப்பதை விடுத்து, ஆயுதப் படை போலீசார் முஸ்லீம் சமூகத்தை எதிரியாகப் பாவித்து மிருகத்தனமாகத் தாக்கத் தொடங்கினர். முஸ்லீம்கள் அதிகமாக வாழும் மதன்புரா பகுதியில் ஒவ்வொரு வீடாக நுழைந்து கண்ணில் பட்டதை அடித்து நொறுக்கி, ஆண்களைக் காட்டுமிராண்டித்தனமாக தாக்கினர். அப்பகுதியின் மதிப்பிற்குரிய பிரமுகரான டாக்டர் அனீஸ் அன்சாரியை பொதுமக்கள் முன்னிலையிலே தெருவில் இழுத்துச் சென்று நாயைப் போல அடித்தே கொன்றனர். போலீசார் நடத்திய வெறியாட்டத்தில் 70 பேரின் எலும்புகள் முறிந்து போனதோடு, உரிய சிகிச்சையின்றி சிறையில் அடைக்கப்பட்டதால் இன்றும்கூட அவர்களால் எழுந்து நிற்கவோ நடக்கவோ மலம் கழிக்கவோ கூட முடியவில்லை.

● இதேபோல கடந்த டிசம்பரில் பாபர் மசூதி இடிக்கப்பட்டதும் கான்பூரிலுள்ள முஸ்லீம்களில் ஒரு பகுதியினர் ஆத்திரமடைந்து சில இந்து கடைகளைச் சூறையாடித் தீயிட்டனர். இதைத் தடுக்க வந்த ஆயுதப் படை போலீசார் கண்மூடித்தனமாக துப்பாக்கிச் சூடு நடத்தி 9 பேரைக் கொன்றொழித்தனர். அடுத்த நாள் இந்து குடியிருப்புகளின் கூரைமீது நின்று கொண்டு தாடி வைத்துக் கொண்டு தெருவில் நடந்து சென்றவர்கள் மீதெல்லாம் துப்பாக்கிச் சூடு நடத்தி வெறியாட்டம் போட்டனர். டிசம்பர் 6,7 தேதிகளில் மட்டும் கான்பூரில் போலீசார் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் 22 முஸ்லீம்கள் கொல்லப்பட்டார்கள்.

உ.பி. ஆயுதப் படை போலீசாரின் இந்து வெறித்தன்மையின் காரணமாகவே, 1990-ல் மாநில முதல்வராக இருந்த முலாயம்சிங் யாதவ், பாபர் மசூதி பாதுகாப்புப் பணியிலிருந்து இப் போலீசாரை விலக்கி வைத்தார். ஆனாலும் அவ்வாண்டு அக்டோபர் 30-ந் தேதியன்று பாபர் மசூதி பகுதியளவு தகர்க்கப்பட்ட போது, ஆயுதப் படை போலீசார் காவியுடை அணிந்து கொண்டு இந்துவெறி குண்டர்களுக்கு உதவி செய்தனர். "பாபர் மசூதியின் குவிமாடத்தை இடித்து காவிக்கொடி ஏற்ற பஜ்ரங்தள் தொண்டனுக்கு நான் உடனிருந்து உதவி செய்தேன்" என்று வெளிப்படையாகவே கூறுகிறார், ஒரு ஆயுதப் படை போலீஸ்காரர்.



தமது குறுகிய ஆதாயங்களுக்காக ஓட்டுக் கட்சிகளும் ஆட்சியாளர்களும் இந்து வெறியைக் கிளறிவிடும் போது, மொத்த அரசு எந்திரமும் — அதிகார வர்க்கம், போலீசு, நீதித் துறை அனைத்தும் மேலும் மேலும் மதவெறி நோயில் வீழ்கிறது.

உ.பி. ஆயுதப் போலீசாரின் இந்து வெறியாட்டம் அடுத்தடுத்து அம்பலப்பட்டு வருவதால் முன்னாள் போலீசு உயரதிகாரிகளில் சிலர் இந்த உண்மையை வேறு வழியின்றி ஒப்புக் கொள்கின்றனர். இதர போலீசுப் படைகளில் இத்தகைய போக்கை அறவே காண முடியாது என்றும், உ.பி ஆயுதப் போலீசாருக்கு முறையான பயிற்சி அளித்து சீரமைத்துவிட முடியும் என்றும் நம்பிக்கை தெரிவிக்கிறார்கள். ஆனால், உ.பி ஆயுத போலீசின் இளைய பங்காளியாகவே இதர போலீசுப் படைகளும் மாநிலப் போலீசும் இந்துவெறி போதையில் மூழ்கிக் கிடக்கின்றன.

அயோத்தியில் பாபர் மசூதி இடிக்கப்பட்ட போது அங்கே பாதுகாப்புக்காக நிறுத்தப்பட்டிருந்த மத்திய ரிசர்வ் போலீசுப் படையும், மாநிலப் போலீசாரும் 5 மணி நேரத்திற்கும் மேலாக கைகட்டி நின்று வேடிக்கை பார்த்தனர். தடையை மீறி மசூதியினுள் நுழைந்த இந்துவெறி குண்டர்கள் மீது தடியடியோ, கண்ணீர் புகை வீச்சோ கூட நடத்தவில்லை. மாறாக, பக்திப் பரவசத்தோடு அவர்கள் இந்துவெறி காலிகளுக்கு உதவி செய்தார்கள்.

எல்லாவற்றையும்விட, பாசிச இந்திரா 1984-ல் சுட்டுக் கொல்லப்பட்டபோது சீக்கிய சமூகத்தினரை காங்கிரசு குண்டர்கள் நரவேட்டையாடியபோது இந்தியப் போலீசுத் துறையும் துணை ராணுவப் படைகளும் அவர்களோடு சேர்ந்து கொண்டு அட்டூழியம் புரிந்ததை நாடே நன்கறியும். டெல்லியில் சீக்கியர்களுக்கு எதிரான கலவரத்தில் ஈடுபட்ட காங்கிரசு குண்டர்கள் மீது இன்று வரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணமும் வழங்கப்படவில்லை. இந்துவெறித் தீயைக் கிளறிவிட்டுக் குளிர் காய்வதிலேயே ஆட்சியாளர்கள் குறியாக இருந்தார்கள். போலீசுப் படைகளோ மேலும் மேலும் இந்து வெறி போதையில் மூழ்கி முழுக் காட்டுமிராண்டிகளாக மாறிவிட்டன.

தமது குறுகிய ஆதாயங்களுக்காக ஓட்டுக் கட்சிகளும் ஆட்சியாளர்களும் இந்து வெறியைக் கிளறிவிடும் போது, மொத்த அரசு எந்திரமும் — அதிகார வர்க்கம், போலீசு, நீதித் துறை அனைத்தும் மேலும் மேலும் மதவெறி நோயில் வீழ்கிறது. ஒவ்வொரு கலவரத்தின் போதும் சிறுபான்மை மக்கள் மீது போலீசார் வெறியாட்டம் போட்டாலும் அவற்றை எந்த ஆட்சியாளர்களும் தண்டிப்பதும் கிடையாது. இதனால், அச்ச உணர்வு கிஞ்சித்துமின்றி போலீசார் அட்டூழியம் புரிவதும், கலவரங்களின் போது அதிகாரத்தை ஏந்திச் சுவைப்பதுமாக முழுக்கவும் வெறிபிடித்த காட்டுமிராண்டி கும்பலாக போலீசுத் துறை சீரழிந்து கிடக்கிறது. கடந்த டிசம்பர் - ஜனவரி மாதங்களில் வட மாநிலங்களில் நடந்த கலவரங்களே போலீசின் இந்து வெறித் தன்மைக்குச் சான்று கூறப் போதுமானது.

மத்தியப் பிரதேசத்தில் போலீசார் இந்



படிப்பகம்

www.padippakam.com

துவெறி குண்டர்களுடன் சேர்ந்து வெறிக் கூத்தாடியதை கட்டுப்படுத்த முடியாத நிலையில், ''சட்டம் - ஒழுங்கு, கட்டுப்பாட்டைக் காப்பதில் மாநில போலீசாருக்கு அக்கறையே இல்லை. அவர்கள் வகுப்புவாத சக்திகளுடன் சேர்ந்து கொண்டு அட்டூழியங்களைச் செய்து வருகிறார்கள். அரசு நிர்வாகத்தின் மீது மக்கள் நம்பிக்கை இழந்து வருகிறார்கள்'' என்று மாநில கவர்னர் குன்வர் அலிகான் 'குடியரசு'த் தலைவருக்குக் கடிதம் எழுதியுள்ளார்.

தலைநகர் போபாலில் இந்து வெறியர்கள் பகிரங்கமாக முஸ்லீம் குடியிருப்புகளைத் தாக்கி தீயிட்ட போதும், முஸ்லீம் பெண்களைக் கற்பழித்தும் இளங் குழந்தைகளை வெட்டிக் கொன்றும் அட்டூழியங்களைச் செய்த போதும் மாநிலப் போலீசும், சிறப்பு ஆயுதப் படை போலீசும் கைகட்டி நின்று வேடிக்கை பார்த்தது. மேலதிகாரிகளிடமிருந்து உத்திரவுகள் வராமல் துப்பாக்கிச் சூடோ, தடியடியோ கூட நடத்த மறுத்துவிட்டது.

குஜராத்தில் அகமதாபாத்திலும் சூரத்திலும் இந்து வெறி குண்டர்கள் முஸ்லீம் பெண்களைக் கும்பலாக கற்பழித்து, எரியும் தீயில் வீசியெறிந்து கோரத் தாண்டவமாடிய போதும், பிழைப்புக்காக குடியேறிய பிற மாநில மக்களை வெட்டிக் கொன்று மாநிலத்தை விட்டே விரட்டியபோதும் மாநிலப் போலீசார் வெறும் பார்வையாளர்களாகவே கைகட்டி நின்றனர். சில பகுதிகளில் இந்து வெறி குண்டர்களுடன் சேர்ந்து கொண்டு கற்பழிப்பிலும் சூறையாடலிலும் ஈடுபட்டனர்.

வகுப்புக் கலவர வாடையே இல்லாத மாநிலம் என்று மார்தட்டிக் கொண்ட 'மார்க்சிஸ்டு'களின் மே.வங்கத்திலும் இம்முறை இந்துவெறித் தீ பற்றி எரிந்தது. ''போலீசுத் துறையில் இந்து வெறி சக்திகள் ஊடுருவியுள்ளன'' என்று மாநில முதல்வர் ஜோதி பாசு பகிரங்கமாகவே ஒப்புக்கொண்டுள்ளார்.

முன்னாள் உ.பி. போலீசு இயக்குனரான பாட்நாகர், ''வகுப்புவாத சக்திகளுக்கு பணிந்து போவதாகவும் உடந்தையாகவும் போலீசுத் துறை சீரழிந்து போய்விட்டது. உரிய அறுவை சிகிச்சை மேற்கொள்ளாமல் இனி போலீசுத் துறையை சீரமைக்கவே முடியாது'' என்கிறார்.

இந்து வெறி நோய் தாக்கி புரையோடிப் போய்விட்ட இத்தகைய போலீசைக் கொண்டு, வகுப்புவாதச் சக்திகளை எதிர்த்துப் போராடப் போவதாக காங்கிரசுப் பெருச்சாளிகள் பம்மாத்து செய்வது நல்ல வேடிக்கை! போலீசு மட்டுமின்றி, அதிகார வர்க்கம், சட்டம், நீதி, ராணுவம் உள்ளிட்ட ஒட்டுமொத்த அரசு எந்திரமே மதச்சார்பின்மையை குழிதோண்டிப் புதைத்துவிட்டு இந்து வெறி போதையில் மூழ்கிக் கிடக்கிறது. கேரளாவில் சபரிமலை கோயிலுக்குச் செல்லும் போலீசார் சீருடை அணிய மறுத்து கறுப்பு வேட்டி அணிந்து தாடி வைத்துக் கொண்டு விரதமிருக்கின்றனர். இது விதிமுறைகளுக்கு எதிரானது என்று நிர்வாகம் எச்சரித்தபோது, போலீசார் போராட்டத்தில் இறங்கி அதில் வெற்றியும் பெற்றனர்.

ஆனால், இந்துவெறி போதை தலைக்கேறி அதிக்கிரமங்களில் ஈடுபட்டு வரும் இன்றைய போலீசார் மீது எந்த நடவடிக்கையும் எடுக்க வக்கற்றுக் கிடக்கும் ஆட்சியாளர்கள், அதை சீரமைத்து சைவப் புலியாக மாற்றிவிடலாம் என்று நம்பச் சொல்கிறார்கள். போலீசுப் படையில் சிறுபான்மையினரது விகிதாச்சாரத்தை அதிகரிப்பது, போலீசாருக்கு புதிய வகையிலான பயிற்சிகள் அளிப்பது, பொறுக்கி எடுக்கப்பட்ட போலீசாருக்கு சிறப்புப் பயிற்சி அளித்து, அதிரடி நடவடிக்கைப் படையைப் (RAF) போன்று புதிய வகை போலீசுப் படையைக் கட்டியமைத்து கலவரப் பகுதிகளுக்கு அனுப்புவது முதலான சீர்திருத்த நடவடிக்கைகளை மேற்கொள்ளப் போவதாகக் கூறுகிறார்கள். போலிக் கம்யூனிஸ்டுகள் உள்ளிட்ட அனைத்து ஓட்டுக் கட்சிகளும் இதற்கு ஒத்தூதிக் கொண்டு நாய்வாலை நிமிர்த்தும் முயற்சியில் இறங்கியிருக்கிறார்கள்.

**O பாலன்**

# பங்கு - வங்கி மோசடி: தப்பிக்கும் தமிழகப் பார்ப்பனக் கும்பல்

**பங்கு சந்தை - வங்கி மோசடிகளில் பார்ப்பனக் கும்பல் முக்கிய பங்கு வகித்துள்ளது. இப்பார்ப்பனக் கும்பலைத் தப்புவிக்க மேலிடத்தில் ஒரு பார்ப்பனக் கும்பல் வேலை செய்கிறது.**

உலகிலேயே மிகப் பெரிய ஊழல் விவகாரங்களில் ஒன்றாகக் கடந்த ஆண்டு அம்பலமாகிய இந்திய பங்குச் சந்தை — வங்கி மோசடி அநேகமாக இந்த மாதம் இறுதிச் சடங்குகளுடன் புதைக்கப்படும். கடைசியாக ஒருமுறை எதிர்க் கட்சிகளும் பத்திரிகைகளும் உரத்த குரல் எழுப்பி ஒப்பாரி வைக்கும்.

இந்த விவகாரம் முதலில் அம்பலமானதற்கே காரணம், அரசு வங்கி மற்றும் தொழில் நிறுவனங்களின் நிதியை எடுத்துப் பங்குச் சந்தையில் சூதாடவும், முதலீடு செய்யவும் ஒரு பிரிவு புதுப் ''பொறுக்கி'' தரகு முதலாளிகளுக்கே வாய்ப்புக் கிடைக்கிறது; அவர்களது வரைமுறையற்ற செயல்களால் பங்கு-வங்கிச் சந்தை முழுவதுமே கட்டுப்பாடின்றி - நிதி அராஜகமாகி வருகிறது - என்கிற பொறாமை, போட்டி காரணமாக பழம்பெருச்சாளிகளான தரகு முதலாளிகள் முன்முயற்சி எடுத்ததுதான். அவர்களது கட்டுப்பாட்டில் உள்ள பத்திரிகைகள் இந்த அம்பலப்படுத்துதலுக்குத் துணை நின்றன.

எதிர்க் கட்சிகளின் வழக்கமான வெற்றுக் கூச்சலைத் தொடர்ந்து, பங்குச் சந்தை - வங்கி மோசடியின் தலைமையகமாக விளங்கிய இந்திய ரிசர்வ் வங்கி தனது துணை கவர்னர் ஜானகிராமன் தலைமையில் ஒரு விசாரணைக் கமிசன் போட்டது. அது தனது ஐந்தாவது அறிக்கையை வெளியிட்டுள்ளது. மொத்தம் 4,200 கோடி ரூபாய் அளவு மோசடி நடந்திருப்பதாகவும், அதன் வழிவகைகளிலும் தனது அறிக்கைகளில் கூறும் இந்த ஜானகிராமன் கமிட்டி அதற்குப் பொறுப்பான குற்றவாளிகள் பற்றி மௌனம் சாதிக்கிறது. நன்கு தெரிந்தே திட்டமிட்ட மோசடிதான் என்று ஒப்புக் கொண்டாலும் அது ஏதோ நிதி - வங்கி அமைப்பு முறையில் உள்ள குறைபாடுகளால், நிர்வாகக் கவனக் குறைவால் ஏற்பட்டுவிட்ட தவறுகள் என்பதாக சித்தரிக்கிறது. குற்றவாளியே விசாரணை அதிகாரியாகச் செயல்படுவதைப் போன்றதுதான் இந்த ஜானகிராமன் கமிட்டி. ஊழல் நாயகர்கள் மலிந்த இந்திய ரிசர்வ் வங்கியே தனக்கு எதிராக குற்றங்களை நிரூபிக்க முன்வருமா?

பங்குச் சந்தை - வங்கி மோசடிகளை விசாரித்து, குற்றவாளிகளைக் கண்டு பிடித்துத் தண்டிப்பதில் தீவிர அக்கறை காட்டுவதாக விசாரணைக்கு உத்திரவிட்டது, காங்கிரசு அரசு. சி.பி.ஐ. என்பதே குற்றவாளிகளைத் தப்புவிப்பதற்கான உளவுத் துறை, ஆளும் கட்சியின் உண்மை ஊழியன் என்று பீரங்கி பேர ஊழல் உட்பட பல விவகாரங்களில் கண்டோம். ஆனால், நேர்மைக்கும் திறமைக்கும் புகழ் பெற்றவர் எனப் பத்திரிகைகள் பாராட்டிய சி.பி.ஐ. இணை இயக்குனர் மாதவன் பொறுப்பில் விசாரணை துவங்கியதும் நம்பிக்கையூட்டும் வகையில் அவை எழுதின. அவசரச் சட்டங்கள் பிறப்பிக்கப்பட்டு, சில பங்குச் சந்தை தரகர்கள், வங்கி அதிகாரிகள் கைது செய்யப்பட்டனர். பொருளாதார கிரிமினல் குற்ற விசாரணைக்கு என்று சிறப்பு நீதிமன்றம் நியமிக்கப்பட்டு சில தரகர்களின் சொத்துக்கள் பறிமுதல் செய்யப்பட்டன.

விசாரணையின் போக்கில் அம்பானி

படிப்பகம்

www.padippakam.com





**வங்கி - பங்குச் சந்தை ஊழலில் முக்கிய புள்ளிகளான தமிழகப் பார்ப்பனர்கள்; வி.கிருஷ்ணமூர்த்தி, கீதா கிருஷ்ணன்.**

போன்ற பெரும் தரகு முதலாளிகள், குலாம் நபி ஆசாத், பலராம் ஜாக்கர், சங்கரானந்த், சிந்தியா போன்ற பல காங்கிரசு மந்திரிகள், திட்டக் கமிசன் உறுப்பினர் கிருஷ்ண மூர்த்தி, ரிசர்வ் வங்கி கவர்னர் வெங்கடரமணன் போல பல உயர் அரசு - வங்கி அதிகாரிகள் பங்குச் சந்தை - வங்கி மோசடிகளில் சம்பந்தப்பட்டிருப்பது பற்றிய தகவல்கள் சிக்கின. சி.பி.ஐ. விசாரணையை முடக்கி வைக்க ஒருபுறமும், முக்கிய வழக்குகளை வருவாய் துறையிடம் மாற்றிக் கிடப்பில் போடவும் பிரதமர் அலுவலக அதிகாரிகள் நடவடிக்கை எடுத்தனர். இதற்குச் சம்மதிக்காத சி.பி.ஐ. இணை இயக்குனரை நிர்பந்தித்து தானே முன்வந்து பதவி விலகும்படி செய்தனர். அவர் பதவி விலகக் காரணம் பதவி உயர்வு பெறமுடியாத ஆதங்கம் தான் எனப் புளுகினர்.

உண்மைகள் வெளிவர முடியாதவாறு அரசு தடுக்க முயல்கிறது என்று எதிர்க் கட்சிகள் உரக்கக் கூச்சலிட்டன. அதன் பிறகு நாடாளுமன்றக் கூட்டுக் குழு விசாரணைக்கு அரசு ஏற்பாடு செய்தது. ஆனால், அதோடு சி.பி.ஐ. விசாரணையும் சிறப்பு நீதிமன்ற வழக்குகளும் கிடப்பில் போடப்பட்டன. சி.பி.ஐ. இணை இயக்குனர் மாதவன் வீட்டுக்கு அனுப்பப்பட்டதோடு குற்றவாளிகளைத் தப்புவிப்பதில் அரசுக்கு உதவும் சி.பி.ஐ. இயக்குனர் தத்தாவுக்கு மேலும் ஆறுமாதம் பதவி நீட்டிப்புத் தரப்பட்டது.

பங்குச் சந்தை - வங்கி மோசடியை சர்வ கட்சிச் சம்மதத்துடன் வெள்ளையடித்து மூடிமறைத்து விடுவதற்கான ஒரு கருவியாகவே நாடாளுமன்ற கூட்டுக்குழுவைப் பயன்படுத்துவது என்று ஆரம்பம் முதல் திட்டமிட்டுச் செயல்படுகிறது. காங்கிரசு அரசு. நாடாளு மன்றத்தில் சிறுபான்மையினராக இருந்தும் கூட்டுக் குழுவில் சம அளவிலும் தலைமைப் பதவியிலும் காங்கிரசு எம்.பிக்களே உள்ளனர். எனவே, குழுக் கூட்டத்திற்கும், விசாரணைக்கும் பத்திரிகையாளர்களை அனுமதிப்பதில்லை. இரகசியமாகவே நடக்கும்; தலைவர் தவிர வேறு யாரும் முழு நடவடிக்கைகள், விசாரணைகள் பற்றிச் செய்திகள் வெளியிடக் கூடாது என்று தடை விதித்து இருட்டடிப்பு செய்தனர்.

விசாரணைக்குத் தேவையான விவரப் பட்டியல்களில் இது இதைக் கோர வேண்டாம் என்றும், கூட்டுக் குழுவில் எப்படி நடந்து கொண்டு குற்றவாளிகளைத் தப்புவிக்க வேண்டும் என்றும் காங்கிரசு உறுப்பினர்களுக்கு அறிவுறுத்தும் கடிதங்களும் ஆவணங்களும் இரகசியமாகச் சுற்றுக்கு விட்டனர், நிதித்துறை மந்திரிகள். காங்கிரசு கோஷ்டித் தகராறு காரணமாக இதுவும் அம்பலமாகவே மந்திரிகள் மீது உரிமைக் குழு விசாரணை என்கிற கண்துடைப்பு நாடகமாடி நடவடிக்கை ஏதுமின்றி விட்டனர். அமைச்சகங்கள், வங்கிகளிடம் இருந்து தேவையற்ற விவரக் குப்பைகளும், தணிக்கைச் செய்யப்பட்ட ஆவணங்களுமே கூட்டுக் குழுவிற்குத் தரப்பட்டன. தணிக்கைகள், தடைகளை மீறி அதற்குத் தகவல்கள் கொடுத்த அதிகாரிகள் இலாகா பூர்வ கண்டிப்புகளுக்கும் தண்டனைகளுக்கும் இலக்காகினர்.

சாட்சி சொன்ன அரசு, வங்கி அதிகாரிகள் குற்றவாளிகளைத் தப்புவிக்கவும், விவரங்களை மூடி மறைக்கவுமே முயன்றனர். தயாரிப்பின்றி வந்து கேள்விகளைத் தட்டிக் கழித்தனர். குறுக்கு விசாரணை செய்யப்பட்ட குற்றஞ் சாட்டப்பட்டவர்கள் சட்ட விதிகளுக்குள்ளும் கீழ்நிலை ஊழியர் மீதும் பழிபோட்டு மழுப்பினர். மந்திரிகள், அரசு அதிகாரிகளை விசாரிப்பதை தள்ளிப் போட்டு இழுத்தடித்து. இறுதியில் கேள்விப் பட்டியலுக்குப் பதில் பெறுவதோடு நிறுத்தப்பட்டது. காலமின்மையைக் காரணம் காட்டி அவசர கோலத்தில் அரைகுறை அறிக்கை தயாரிக்கப்படுகிறது. இறுதியில் உண்மையான, உயர்மட்ட குற்றவாளிகளை சுட்டிக் காட்டுவது தவிர்க்கப்பட்டு, நிதி அமைப்பு முறையின் பலவீனங்கள், குறைபாடுகள், தோல்விகள், கவனக் குறைகள், ஏற்கனவே அம்பலமாகிப் போன சில அதிகாரிகள் தரகர்கள் மீது பழிபோட்டு பங்குச் சந்தை - வங்கி மோசடி விவகாரத்துக்கு கருமாதி நடத்தும் வேலைக்குத் தயாராகிறது கூட்டுக் குழு. அவ்வப்போது கூச்சல் போட்டு முடங்கிவிடும் எதிர்க் கட்சிகளும் இதற்கு உடன்படுகின்றன.

**ஊழல் மோசடிகளில் அந்நிய வங்கிகள் மிக முக்கியப் பங்கு வகித்துள்ளன என்றாலும் அவற்றுக்கு எதிராக எந்தக் கிரிமினல் குற்ற நடவடிக்கைகளும், தடை - கட்டுப்பாட்டு நடவடிக்கைகளும் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை.**

பங்குச் சந்தை வங்கி மோசடி என்றாலே அனைவரது நினைவுக்கும் வருவது தரகன் அர்ச்த் மேத்தாதான்! அவன் மீது தான் சி.பி.ஐ. தனது தாக்குதலைக் குவித்தது; அவர்தான் முக்கியப் புள்ளி என்கிற அடிப்படையில் பத்திரிகைகள் சித்தரித்தன. ஆனால், பங்குச் சந்தை வங்கி மோசடியில் அதிகபட்சம் கொள்ளையடித்துக் கொண்டு போனவை ஐந்து அந்நிய பெரும் ஏகபோக வங்கிகள். இங்கிலாந்தைத் தலைமையகமாகக் கொண்ட ஸ்டாண்டார்டு சார்ட்டட் வங்கி, ஏ.என்.இஸட் கிரிண்லேஸ் வங்கி, அமெரிக்காவைத் தலைமையகமாகக் கொண்ட சிடி வங்கி, பாங்க் ஆஃப் அமெரிக்கா மற்றும் அமெரிக்கன் எக்ஸ்பிரஸ் வங்கி ஆகியவை.

இந்த ஐந்து அந்நிய வங்கிகளின் வரவு செலவு சில ஆயிரம் கோடி ரூபாய்களாக இருந்து, 1991-92 ஆம் ஆண்டு திடீரென்று லட்சக்கணக்கான கோடி ரூபாய்களாக உயர்ந்தது. லாபமே பல ஆயிரம் கோடி ரூபாய்களாகக் குவிந்தது; அவ்வளவும் வெளிநாட்டுக்குக் கடத்தப்பட்டுவிட்டது. இந்திய அரசுடமை வங்கிகளிடம் இருந்தும், சில தரகர்களின் கராத் வங்கி, பெரு நகரக் கூட்டுறவு வங்கி போன்றவற்றிடம் இருந்தும் வங்கியாளர்களின் போலி ரசீதுகளையும், காப்புறுதிப் பத்திரங்களையும் பெற்றுக் கொண்டு ஏராளமான தொகையை அதீத வட்டிக்கு இந்த அந்நிய வங்கிகள் கொடுத்தன.

சில முக்கிய பங்குச் சந்தைத் தரகர்களிடம் இருந்து போலியான பங்குப் பத்திரங்களைப் பெற்றுக் கொண்டு பல ஆயிரம் கோடி ரூபாய் கடனைக் கொடுத்து பங்குச் சந்தைச் சூதாட்டத்தில் மேற்கண்ட ஐந்து வங்கிகளும் ஈடுபட்டன. உள்நாட்டு வெளிநாட்டு வங்கிகள் அனைத்தையும் கணக்கில் எடுத்துப் பார்க்கும்போது இந்த அந்நிய வங்கிகள் மட்டும் 68% பங்குப் பத்திரச் சூதாட்டத்தில் ஈடுபட்டுள்ளன. பங்குச் சந்தைச் சூதாட்டத்திற்கான நிதியைக் கூட இந்திய அரசுடமைத் தொழில் நிறுவனங்களிடம் இருந்தே பெரும்பாலும் அந்நிய வங்கிகள் பெற்றன. அதாவது மின் உற்பத்தி முதலீடு நிறுவனம், ஏர்-இந்தியா, இந்தியன் ஏர்

படிப்பகம்

www.padippakam.com

லைன்ஸ். உர உற்பத்திக் கூட்டுறவு, பெட் ரோலிய எண்ணெய்க் கழகம் போன்ற அர சுத் துறைத் தொழில் நிறுவனங்களின் உப ரித் தொகையை குறைந்தபட்ச வட்டிக்கு வாங்கி, அதிக லாபம் தரக்கூடிய பங்குச் சந்தையில் முதலீடு செய்து கொள்ளையடித் தன, அந்நிய வங்கிகள்.

அரசுத் துறைத் தொழில் நிறுவனங்க ளைத் தனியார்மயமாக்குவது என்ற காங்கி ரசின் புதிய தொழிற் கொள்கைப்படி அவற் றின் பங்குகள் புழக்கத்தில் விட முடிவு செய் யப்பட்டது. அவற்றைத் திறந்த சந்தையில் விற்பதற்குப் பதில் இரகசியமான பேர அடிப்படையில் மிகக் குறைந்த மதிப்புக்கு அந்நிய வங்கிகளிடம் பங்குகள் ஒப்படைக் கப்பட்டன. அந்த வங்கிகள் அக்குறைந்த மதிப்பில் மெக்கா்டிச் மற்றும் ஸ்டீவார்ட் ஆகிய இரு தரகுக் கம்பெனிகளுக்கு விற் றன. ஒரே நாளில் அத்தரகு கம்பெனிகள் அதே பங்குகளை அதிக மதிப்பில் இந்திய அரசுடமை வங்கிகளுக்கு விற்று கோடி கோடியாகக் கொள்ளையடித்தன. இக் கொள்ளையை அத்தரகுக் கம்பெனிகளும், அந்நிய வங்கிகளும் பங்கிட்டுக் கொண் டன.

மொத்தத்தில் அடிமாட்டு விலைக்கு அரசுடமைத் தொழில் நிறுவனப் பங்கு களை விற்றது மற்றும் அவற்றையே அதிக விலைக்கு அரசுடமை வங்கிகள் வாங்கியது ஆகிய இரண்டு வகையில் அரசுச் சொத்து சூறையாடப்பட்டுள்ளது. அரசுடமை வங்கி களின் முதலீட்டுப் பிரிவுகள் அதிக விலைக்கு வாங்கிய பங்குகளையே குறைந்த விலைக்கு தாமே நட்டமேற்ப டுத்தி, தரகுக் கம்பெனிகளுக்கும், அந்நிய வங்கிகளுக்கும் லாபம் ஏற்படுத்திக் கொடுப்பதும் திரும்பத் திரும்ப நடந்துள் ளது. 1991-92-ம் ஆண்டில் மட்டும் 1,20,000 கோடி ரூபாய்க்கு ஸ்டாண்டார்டு சார்ட்டட் வங்கியும் 80,000 கோடி ரூபாய்க்கு கிரிண்லேஸ் வங்கியும் இப்படி பங்குச் சந்தையில் புரட்டியிருக்கின்றன.

''இவ்வளவும் எங்களுக்குத் தெரியா மல் நடந்துவிட்ட — தலைமையகத்துக்குத் தெரியாமல் இந்தியாவிலும், இங்கும் மேல் அதிகாரிகளுக்குத் தெரியாமலும் கீழேயும் தவறுகள் நடந்துள்ளன'' என்று அந்நிய வங்கிகள் சமாதானம் கூறுகின்றன. திடீ ரென்று பல மடங்கு வரவு - செலவும், லாப மும் ஈட்டப்படுகின்றன; இதில் ''சூது'' இருக்கிறது என்று மேலிடத்துக்குத் தெரி விக்கப்பட்டிருக்கின்றன என்பதற்கு ஆதா ரம் இருக்கின்றன.

இந்த ஊழல் மோசடிகளில் அந்நிய வங்கிகள் மிக முக்கியப் பங்கு வகித்துள் ளன என்றாலும் அவற்றுக்கு எதிராக எந்தக் கிரிமினல் குற்ற நடவடிக்கைகளும், தடை கட்டுப்பாட்டு நடவடிக்கைகளும் இது வரை மேற்கொள்ளப்படவில்லை. இதே குற்றங்களுக்காக ஒரு சில இந்திய வங்கி அதிகாரிகள் மீதாவது வழக்குகள் - கைது கள் நடக்கின்றன. ஆனால் ஏகாதிபத்திய எஜமானர்களுக்கு அஞ்சியும், அவர்கள் உதவியை நாடியும் இந்திய அரசு இருப்பதால் பங்குச் சந்தை - வங்கி மோசடியில் ஈடு பட்ட அந்நிய வங்கிகள் மீது நடவடிக்கை எடுக்கப்படவில்லை.



கூட்டு பாராளுமன்றக் கமிட்டி உறுப்பினர்கள் கூடி உணவருந்தி மகிழ்கிறார்கள்; எதற்கு? கூட்டாக ஊழலை மூடிமறைத்து வருவதற்காகவா?

இவ்வளவு தூரம் ஊழல் - மோசடிக ளில் அந்நிய வங்கிகள் ஈடுபட்டதற்கும், குற்றங்கள் அம்பலப்பட்டும் தண்ட னையோ தடையோ இல்லாமல் தப்பித்துக் கொண்டதற்கும் முக்கியக் காரணம் இந்திய அரசியல்வாதிகளையும், அதிகாரிகளை யும் அவ்வப்போது விலைக்கு வாங்குவது மட்டுமல்ல. அவர்களின் பிள்ளைகளுக்கு ஏராளமான தொகையைச் சம்பளமாகக் கொடுத்து தமது வங்கிகளில் வேலைக்கு அமர்த்தியிருப்பதுதான்.

இந்திய அரசின் 29 அதிகாரிகளு டைய பிள்ளைகள் உள்நாட்டிலும், வெளி நாடுகளிலும் உள்ள மேற்கண்ட ஐந்து அந் நிய வங்கிகளில் அதிகாரிகளாக வேலை செய்கிறார்கள். அவர்களில் எட்டு அதிகாரி கள் அமைச்சகச் செயலாளர் பதவிகளில் உள்ளவர்கள். முன்னாள் மந்திரி சபைச் செயலாளரும், நிதி அமைச்சக செயலாளரு மான பி.கே.கௌலின் மகள் ரஞ்சனா கிரின் லேஸ் வங்கியிலும், அவரது கணவன் விஜய் ஹாங்காங் வங்கியிலும் அதிகாரி கள், தொழிலாளர் துறை செயலாளர் சஹானி மகன் ரோகித்தும் தொழில் - பொதுத் துறை செயலாளர் சுரேஷ் குமார் மகள் சுஜாதாவும் இதே கிரிண்லேஸ் வங்கி அதிகாரிகள். இவ்விரு செயலாளர்களும் தனியார் மய்மாக்கும் கமிட்டி உறுப்பினர்க ளாக உள்ளனர்.

இந்திய எண்ணெய் வாயுக் கழக தலை வர் எஸ்.எல்.கோஸ்லாவின் மகன் அஜய் கோஸ்லாவும், போபார்ஸ் பீரங்கி பேர புகழ் இராணுவச் செயலாளர் பாட்நகர் மக னும் அமெரிக்கன் எக்ஸ்பிரஸ் வங்கி அதி காரிகள். ராஜீவ் காந்தியின் விசுவாசியும் முன்னாள் நிதித்துறை செயலாளரும், இப் போது ஐ.எம்.எஃப் நிர்வாகக் குழுவில் இந் திய இயக்குநராகவும் உள்ள கோபி அரோ ராவின் மகன் சிடி வங்கி அதிகாரி, அவரது வருங்கால மருமகள் உலக வங்கி அதிகாரி. இதே போல இந்தியத் தொழில் முன்னேற் றத் தலைவர் மகேஷ் பிரசாத் மகனும் மக ளும், தொழில் துறை விலைநிர்ணயக் குழுத் தலைவர் பி.வி.தேசாய், உள்துறை செயலாளர் மாதவ் கோடிபோல் விஸ்வசா யத்துறைச் செயலாளர் எம்.எஸ்.ஜில் ஆகி யோர் பிள்ளைகளும் அந்நிய வங்கிகளில் அதிகாரிகளாக உள்ளனர். இந்தக் குலக் கொழுந்துகள் மூலமாகத்தான் அந்நிய வங் கிகள் தமது காரியங்களை சுலபமாகச் சாதித்துக் கொள்கின்றன.

அந்நிய வங்கிகளுக்கு அடுத்து மிக அதிகமாக பங்குச் சந்தை - வங்கி மோசடி மையங்களாக விளங்கியவை ஸ்டேட் பாங்க் ஆஃப் இந்தியா, தேசிய வீட்டு வசதி வங்கி, யூகோ வங்கி, கனரா வங்கி, சிண்டி கேட் வங்கி, ஆந்திரா வங்கி, விஜயா வங்கி போன்ற அரசுடமை வங்கிகளும் அவற் றின் நிதி மூலதன முதலீட்டுத் துணை நிறுவ னங்களும் ஆகும். இந்திய ரிசர்வ் வங்கியே இவற்றின் தலைமையகமாக இருந்தது.

முக்கியமாக மூன்று பங்குச் சந்தைத் தரகுக் கும்பல்கள் இந்த மோசடி விவகாரங் களில் ஈடுபட்டிருந்ததாக அம்பலமாகியுள் ளது. பம்பாய் ''குரோமோர் முதலீட்டு நிறு வனம்'' மற்றும் அதன் துணை - பினாமி - போலிக் கம்பெனிகளை நடத்திய அர்சத் மேத்தா அவரது சகோதரர்கள், கூட்டாளி கள் அடங்கியது ஒரு கும்பல். இவர்களது கொள்ளைப் பணத்தை வெளிநாடுகளுக் குக் கடத்திக் கொண்டு போய் பதுக்கி வைப் பதில் முக்கிய பங்காற்றிய நிரஞ்சன்ஷா என்ற ஏற்றுமதி வியாபாரி மோசடிகள் அம் பலமானதும் நாட்டைவிட்டுத் தப்பியோட அனுமதிக்கப்பட்டான். இந்தக் கும்பல் ரிசர்வ் வங்கிக் கவர்னர் வெங்கடரமணன், நிதிச் செயலாளர் கீதா கிருஷ்ணன், திட்டக் குழு உறுப்பினர் கிருஷ்ணமூர்த்தி ஆகியோ ரின் துணையுடன் நேரடியாகவே அரசு டமை வங்கிகளின் நிதியை எடுத்துப் பங் குச் சந்தையில் சூதாடியிருக்கிறது.

பம்பாய், லண்டன், ஷார்ஜா (துபாய்) ஆகிய இடங்களில் கிளைகளைக் கொண் டுள்ள ''சம்பக்லால் முதலீடு மற்றும் நிதி ஆலோசனை சேவை நிறுவனம்'' என்கிற பெயரில் பூபேன் தலால், ஹிட்டேன் தலால், ஜே.பி.காந்தி, ஏ.டி.நரோத்தம் ஆகிய தரகர்களும், டி.பி.ரூயா என்கிற தரகு முதலாளியும் இந்தக் கும்பலின் முக் கிய புள்ளிகள். கராத் வங்கி, பெரு நகர கூட்டுறவு வங்கி ஆகிய இரண்டு வங்கிகள்

படிப்பகம்

www.padippakam.com

மூலம் போலி காப்புறுதி மற்றும் பங்குப் பத்திரங்களை அரசுடமை வங்கிகளிடம் கொடுத்துப் பல ஆயிரம் கோடி ரூபாய்க ளைப் பெற்று பங்குச் சந்தையில் இந்தக் கும்பல் சூதாடியிருக்கிறது.

பெங்களூரைத் தலைமையகமாகக் கொண்டுள்ள ''ஃபேர் குரோத் நிதிச் சேவை நிறுவனம்'' முன்னாள் கனரா வங்கி தலைவர் ரத்னகர் நிறுவியது. அவரும் லக்சுமி நாராயணன், தர்ம்பால் போன்ற தரகர்களும் டி.கே.ஆதிகேசவலு என்ற சாராய அதிபரும் சி.என்.சதுர்வேதி என்ற காங்கிரசு முதலாளியும் இந்த கும்பலின் முக்கிய புள்ளிகள். கர்நாடகா, ஆந்திராவைச் சேர்ந்த பிரபல மந்திரிகள், அரசியல்வாதிகள் முதல் மத்திய மந்திரி சிதம்பரம், குலாம் நபி ஆசாத், பலராம் ஜாக்கர், சிந்தா மோகன் ஆகியோர் இந்தக் கும்பலோடு நெருங்கிய தொடர்புடையவர்கள். முக்கிய அதிகாரிகளுக்கு பங்குகளைத் தாராளமாக ஒதுக்கி மோசடிகளுக்கான ''உரிமம்'' வாங்கி வைத்துக் கொண்டு இந்தக் கும்பல் இயங்கியது. போலி பங்குப் பத்திரங்களை மூட்டை மூட்டையாக அச்சிட்டு வைத்துக் கொண்டு ஆந்திரா வங்கியிடம் அவற்றை விற்று ஆயிரம் கோடி ரூபாய்களுக்கு மேலாகச் சுருட்டிக் கொண்டது இந்தக் கும்பல்.

இந்தப் பங்குச் சந்தை - வங்கி மோசடி விவகாரத்தில் வழக்கமான நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த தம்மை வேண்டும் என்றே பழிவாங்கி விட்டதாகவும், தாமும் தமது உறவினர்கள் மீதும்தான் அரசுத் தாக்குதல்கள் கைதுகள், வழக்குகள் தொடுக்கப் படுவதாகவும், முக்கியமான வேறு இரு கும்பல்கள் மீது நடவடிக்கை எடுக்காது நழுவ விடுகிறார்கள் என்றும் அர்சத் மேத்தாவும் கிருஷ்ணமூர்த்தியும் புகார் கூறுகின்றனர். ராஜீவ் நினைவு நிறுவனத்துக்கு 50 லட்சம் ரூபாய் நன்கொடை கொடுத்தது. கிருஷ்ணமூர்த்தி மகனுக்கு 35 லட்சம் ரூபாய் ''கடன்'' கொடுத்தது ஆகியவற்றை வைத்து ராஜீவுக்கு நெருக்கமானவர்கள் மீது நரசிம்மராவ் அரசு தாக்குதல் தொடுப்பதாகக் கூறுகின்றனர். கிருஷ்ணமூர்த்தி மகனைப் போலவே நரசிம்மராவ் மகனுக்கு ஹிட்டேன் தலால் மூன்று கோடி ரூபாய் ''கடன்'' கொடுத்துள்ளார். எனவே அந்த கும்பல் பாதுகாக்கப்படுகிறது என்று பத்திரிகைகள் எழுதுகின்றன.

பங்குச் சந்தை - வங்கி மோசடிகளில் பார்ப்பனர்கள் அதுவும் தஞ்சையைப் பூர்வீகமாகக் கொண்ட ஒரு கும்பல் முக்கிய பங்கு வகித்துள்ளது என்பது கவனிக்கத்தக்கது. அரசுத் துறை நிறுவனமான திருச்சி பாய்லர் தொழிற்சாலையில் சாதாரண வரைவியாளராக தமது தொழிலைத் துவக்கி அதன் தலைவராக உயர்ந்து, இரும்பு எஃகு நிறுவனம், மாருதி ஆகிய அரசு நிறுவனங்களது தலைவராகவும்; திட்டக்குழு உறுப்பினராகவும் வளர்ந்துவிட்ட கிருஷ்ணமூர்த்தி மோசடிகளின் முக்கியப் புள்ளியாக விளங்கியுள்ளார். இன்று பல ஆயிரம் கோடி ரூபாய் மூலதனமுள்ள பல தொழில்களுக்கு அதிபராக உள்ளார். நேரு - இந்திரா - ராஜீவ் ஆகிய மேலிடத்துக்குப் பரம்பரை



ரிசர்வ் பேங்கின் இயக்குனர், வெங்கடரமணன்.

> ரிசர்வ் வங்கி கவர்னர் வெங்கடரமணன், கீதா கிருஷ்ணன், கிருஷ்ணமூர்த்தி ஆகியோரின் துணையுடன் நேரடியாகவே அரசுடமை வங்கிகளின் நிதியை எடுத்துப் பங்குச் சந்தையில் சூதாடப்பட்டுள்ளது.

ஊழியராக இருந்து இதைச் சாதித்துள்ளார். அர்சத் மேத்தாவிடமும் ஜப்பானிய வங்கியிடமும் லஞ்சம் வாங்கியதாக இரு குற்றச்சாட்டுக்களின் கீழ் கைதாகி வெளிவந்தார. கிருஷ்ணமூர்த்தி தான் தனியார் மயமாக்கும் கமிட்டித் தலைவர் என்கிற முறையில் அரசு தொழில் நிறுவனப் பங்குகளை அற்ப விலைக்குத் தாரை வார்த்தவர். அர்சத் மேத்தாவை கீதாகிருஷ்ணன், வெங்கடரமணன் ஆகியோருக்கு அறிமுகப்படுத்தியவர்.

ராஜீவின் ஊழல்களுக்கு, நிதிச் செயலர் என்கிற முறையில் உடந்தையாக இருந்து, பின்னர் ரிசர்வ் வங்கி கவர்னர் பதவி பெற்ற வெங்கடரமணனும், அவரைத் தொடர்ந்து நிதிச் செயலரான கீதா கிருஷ்ணனும் வேறு முக்கிய பார்ப்பன அதிகாரிகள். இவர்கள் இருவருக்கும் நன்கு தெரிந்தே பங்குச் சந்தை வங்கி மோசடிகள் நடந்துள்ளன என்பதற்கும் ஆதாரங்கள் உள்ளன.

தஞ்சையில் சாதாரண - குடிகார வக்கீலாக இருந்த ஜி.ராமசாமி மேலிடத்துத் தொடர்பைப் பயன்படுத்தி இந்திய அரசு பொது வக்கீலாக ராஜீவ் - சந்திரசேகர் - நரசிம்மராவ் ஆட்சிகளின் கீழ் பதவி பெற்றார். இவர்களது ஜனநாயக விரோத ஊழல் வழக்குகளில் உதவி புரிவதுதான் ராமசாமியின் முக்கியப் பணி. ஜனதா ஆட்சியில் அம்பானி முதலிய தரகு முதலாளிகளுடன் சேர்ந்து கொண்டு வழக்காடினார். அரசு வக்கீலாக இருந்து கொண்டே குற்றஞ்சாட்டப்பட்ட எதிரிகளுக்கு ஆதரவாகவும், தொழிலில் நேர்மையின்றி எதிர் எதிராக மாறிமாறியும் வாதாடக்கூடியவர். பங்குச் சந்தை - வங்கி மோசடிகளில் சிக்கிய தரகர்களின் முடக்கி வைக்கப்பட்டிருந்த பங்குகளை சந்தையில் புழக்கத்துக்கு விடும்படி ஆலோசனை கூறி குற்றவாளிகளுக்கு உதவினார். மோசடி வழக்கில் சிக்கியுள்ள ஸ்டாண்டார்டு சார்ட்டட் வங்கிக்கு இரகசிய உதவி செய்து, அடமான உறுதிப் பத்திரம் எதுவும் தராமல் 15 லட்சம் ரூபாய் ''கடனாக'' பெற்றார். இது அம்பலமான பிறகு ஆண்டுக்கு ஒரு கோடி ரூபாய் வருமானம் உள்ளவரெனவும் அந்த வங்கி அதிகாரி கண்ணன் (மற்றொரு பார்ப்பனர்) தனது ஊர்க்காரர் எனவும் நம்பிக் கடன் தரப்பட்டது என்றும் கூறினார். நிர்ப்பந்தம் காரணமாக பதவி விலகி இப்போது குற்றவாளிகளுக்கு ஆலோசனை வழங்கி வருகிறார்.

ரிசர்வ் வங்கியின் துணை கவர்னர் ஜானகிராமன், பார்ப்பனராக இல்லாவிட்டாலும் சங்கராச்சாரியின் விசுவாச சீடரும், யூகோ வங்கித் தலைவருமான மார்க்கபந்து ஆகியோர் முக்கியப் புள்ளிகள். இவர்கள் தவிர ஸ்டேட் பாங்க் ஆஃப் இந்தியா சீதாராமன், அர்சத் மேத்தாவின் கூட்டாளி எஸ்.ராமசாமி, பூபேன் தலால் கூட்டாளி கே.ஆர். சம்பத் என்று பல சிறிய புள்ளிகளும் உள்ளனர்.

இந்தப் பார்ப்பனக் கும்பலைத் தப்புவிப்பதற்கும் மேலிடத்தில் ஒரு பார்ப்பன கும்பல் வேலை செய்கிறது. அரசியல்வாதிகளின் ஊழலை அம்பலப்படுத்த அவதாரமெடுத்தவராக நடிக்கும் சுப்பிரமணியம் சாமி, ''இதில் ஒன்றும் ஊழல் மோசடி நடக்கவில்லை; வேண்டுமென்றே பெரிதுபடுத்துகிறார்கள்'' என்று அவர்களுக்குப் பரிந்து பேசுகிறார். காங். எம்.பி மணிசங்கர் அய்யர், கிருஷ்ணமூர்த்திக்காக பரிந்து நிற்பார் என பத்திரிகைகள் எழுதுகின்றன. அவரும் ''கிருஷ்ணமூர்த்தி போன்றவர்கள் குற்றவாளிகள் என நிரூபிக்கப்படவில்லை; நாடாளுமன்றக் கூட்டுக் குழுவில் குறுக்கு விசாரணை செய்யும் எதிர்க் கட்சி எம்.பி.க்களை கேலி செய்வதும், குரட்டை விட்டுத் தூங்குவதும் மணிசங்கர் அய்யரின் வாடிக்கையாக உள்ளது.

மொத்தத்தில் இந்த பங்குச் சந்தை - வங்கி மோசடியில் குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் மீது கடும் நடவடிக்கைகள் எதுவுமே கிடையாது; வழக்குகளில் கைதானவர்கள் கூட சிறையில் வசதியாக இருந்துவிட்டு வெளியே வந்து வெற்றி வீரர்களாக படகுக் கார்களில் பவனி வருகின்றனர். அவர்களில் ஒரு சிலர் பதவி விலகும்படி நேர்ந்தது; அதையும் புதுத் தொழில்கள் துவங்கவும், புதுப் பதவிகள் பெறவும் வாய்ப்பாகப் பயன்படுத்துகின்றனர். 300 கோடி ரூபாய் ஊழலான போபார்ஸ் விவகாரம் ஏற்படுத்திய அளவு கூட இந்த பல ஆயிரம் கோடி ரூபாய் மோசடி - ஊழல் விவகாரம் அரசியல் தாக்கத்தை ஏற்படுத்தவில்லை. எதிர்க் கட்சிகளின் நாடாளுமன்றக் கூச்சல், பத்திரிகைகளின் பரபரப்புச் செய்தியோடு அடங்கி விட்டது. நாடே மதவெறி பயங்கரவாதத்தில் மூழ்கிடும்போது ஊழல் ஒரு விவகாரமே இல்லை என்கிற நிலை தோற்றுவிக்கப்பட்டுள்ளது. மொத்தத்தில் லஞ்சம், ஊழல், மோசடி - ''இந்திய தேசியப்'' பாரம்பரியத்தின் ஒரு அங்கமாகிவிட்டது.

● ஆர்.கே.

படிப்பகம்

www.padippakam.com




● *வருமானவரி என்றால் என்ன?
இதில் சினிமா நடிகர்கள் எவ்
வாறு நடந்து கொள்கிறார்கள்?
ிரபலமான நடிகர்கள் ரசிகர் மன்
ங்களுக்கு எதற்காக பணம்
கொடுக்கிறார்கள்? ரஜினி, கமல்
போன்றோரும் கூட வரி பாக்கி
வைத்துள்ளதாகக் கூறுவது
உண்மையா? எனில் எவ்வளவு?*

**— விசுவநாதன், கோவை.**

☆ இந்த அரசு பிரதானமாக
ரண்டு வகையில் வரி விதித்துத்
னது வருவாயைத் தேடிக்கொள்
றது. உள்நாட்டு உற்பத்திப்
பாருட்களின் மீது தீர்வை (Exci-
) வரி விதிப்பது. இறக்குமதிப்
பாருட்களின்மீது சுங்கத்தீர்வை (Customs) வரி விதிப்பது போன்
வை மூலம் வருவாய் தேடுவது மறைமுக வரி எனப்படுகிறது. நபர்
ருமான வரி, கம்பெனி — கூட்டுக் கழக வரி, சொத்து வரி,
ன்கொடை வரி போன்றவை மூலம் வருவாய் தேடுவது நேரடி வரி
னப்படுகிறது. இந்த நேரடி வரிவிதிப்பு என்பது ஒரு நபரின்
ண்டு வருமானம் குறிப்பிட்ட அளவுக்கு மேல் இருந்தால் அதில்
வ்வளவு சதவீதம் வரியும், துணை வரியும் செலுத்த வேண்டும்.
ரியின் விகிதம் படி முறையில் தீர்மானிக்கப்படும். லட்சம் லட்ச
ய் வருமானம் காணும் சினிமா நடிகர்கள் உண்மையாகப் பெறும்
ாகையைக் கணக்குக் காட்டினால் அதன் கணிசமான பகுதி வரி
கப் போய்விடும். ஆதலால் ஒரு பகுதியை மட்டும் கணக்குப்படி
வள்ளைப் பணமாகக் காட்டி, அதற்கு மட்டும் வருமானவரி கட்டு
ார்கள்; இன்னொரு பகுதி கணக்கில் வராத கருப்புப் பணமாக
ங்கிக் கொள்கிறார்கள். அதில் பல நடிகர்கள் பல்வேறு சட்டச்
கல்களைக் காட்டி பாக்கி வைத்து விடுகின்றனர். வருமானத்தில்
வகைச் சொத்துக்கள் வாங்கினாலும், அறக்கட்டளைகள் போன்
ற்றுக்கு நன்கொடை வழங்கினாலும் வரிவிலக்குகள் உண்டு.
தைப் பயன்படுத்தி வரிவிலக்குப் பெற்று ஏய்ப்பதோடு ''வள்ளல்''
று பெயரும் பெற முயலுகிறார்கள். இதோடு, விளம்பரம் தேடிக்
ாள்வதற்கு வசதியாக ரசிகர் மன்றங்களைப் பயன்படுத்திக்
ாள்கிறார்கள். தோல்வியடைந்துவிட்ட படத்தைக் கூட வெற்றிப்
மாகக் காட்டி முட்டுக்கொடுத்து நிறுத்தவும், இன்றைய பொறுக்
கலாச்சார சூழலில் தொழில் போட்டியைச் சமாளிக்கவும் இந்த
றங்கள் பயன்படுகின்றன.

*தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமையால், நாடுகள் பிரி
து - புதிய அரசுகள் உருவாவதுமான இக்கால கட்டத்தில் அகில
ந்தியப் புரட்சி சாத்தியமானதா? சாத்தியம் என்றால் எவ்வாறு
ன்பதை விளக்கவும்?* **— ஆர்.பி.தமிழ்த்தேசிகன், மதுரை-10**

ஐரோப்பாவில், முன்னாள் சோசலிச நாடுகளில் நடந்த ஆட்சி
ாற்றத்துக்குப் பிறகு நாடுகள் பிரிவதை மனதில் வைத்து வாசகர்
துகிறார். அதே ஐரோப்பாவில் தேசிய எல்லைகளை உடைத்துக்
ாண்டு பொருளாதார, அரசியல் ஐக்கியத்தை நோக்கிய போக்
வளர்ந்து வருகிறது. இத்தகைய மாற்றங்கள், உலகின் வேறு
திகளில் பிரதானப் போக்காக இல்லை; ''நாடுகள் பிரிவது —
ய அரசுகள் உருவாவதுமான காலகட்டமாக உள்ளது'' என்பது
கைப்படுத்தப் பட்டதாகும். எனினும், நாடுகள் சுதந்திரத்தை
ரும்புகின்றன; தேசங்கள் விடுதலையை விரும்புகின்றன; மக்கள்
சியை விரும்புகின்றனர் என்பது இன்றைய பொதுப் போக்காக
க்கின்றது. இந்தப் பொது மதிப்பீட்டை எந்திரபூர்வமாகப்
ருத்த முடியாது. ''அகில இந்தியப் புரட்சி''யை விட ''தேசிய
ங்களின் விடுதலை''ப் போராட்டம்'' முன்னேறிக் கொண்டிருக்
து. பின்னதுதான் சாத்தியப்பாடானது என்பதும் தவறான மதிப்பீ
ன். காஷ்மீர் மற்றும் வடகிழக்கிந்திய தேசிய இனங்கள் தவிர
வை, அதிலும் தமிழ்நாடு போன்ற ஒருசில மட்டுமே, சில குட்டி
லாளித்துவக் குழுக்களின் பொதுப் பிரச்சார நிலையிலேயே
ளன என்பதுதான் உண்மை. பார்ப்பன - பனியா ஏடுகள் பயங்க
த - பிரிவினைவாத பீதி கிளப்புவதைத் தமக்கு ஆதாரமாக
த்து இந்தக் குட்டி முதலாளி குழுக்கள் தேசிய இன விடுதலைப்
ராட்டம் குறித்து மிகைப்படுத்திப் பேசுகின்றன. சாத்தியப்
பாட்டை மட்டும் வைத்து புரட்சியின் திட்டம் வகுப்பதில்லை. மேலும், ''அகில இந்தியப் புரட்சி'' என்பது தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமைப் போராட்டத்தையும் உள்ளடக்கியதுதான்.

● *ராஜீவ் கொலை வழக்கில் ''புதிய ஜனநாயக''த்தைத் தொடர்புபடுத்திப் பேசி அதற்கு நெருக்கடியை உருவாக்கிய விடுதலைப் புலிகளின் தளபதி கிட்டுவின் மரணம் பற்றி கொலை செய்யப்பட்டார் என்றும் இந்திய அரசைக் குற்றங் கூறியும் ஏன் வெளியிட்டுள்ளீர்கள்?*

**— ராமகிருஷ்ணன், அன்னூர்.**

☆ இந்தியக் கடல் எல்லைக்கு வெகு தூரத்துக்கு அப்பால் சர்வதேச நெடுங்கடலில் சென்று கொண்டிருந்த புலிகளின் கப்பலை வழிமறித்துத் தாக்கி அழித்தது இந்திய அரசின் அடாவடித்தனம், அட்டூழியம், அக்கிரமம். இலங்கையின் மீதான ஆக்கிரமிப்பு, ஆதிக்கப் போரில் இந்திய இராணுவம் முறியடிக்கப்பட்டதற்கும், ராஜீவின் கொலைக்குப் பலிவாங்கவும், தனது ஆதிக்கத்துக்கும் ஒப்புதலுக்கும் மீறி ஈழ விடுதலையைச் சாதிக்க முடியாது எனக் காட்டவும் இந்திய அரசு தொடர்ந்து மேற்கொண்டு வரும் பிராந்திய ரௌடித்தனம். இதைக் கண்டித்து எதிர்த்துப் போராட வேண்டியது நமது பாட்டாளி வர்க்க சர்வதேச, ஜனநாயகக் கடமை. புலிகளின் பாசிசத் தன்மையை அம்பலப்படுத்தி வருவதற்காக புதிய ஜனநாயகத்தின் மீது பழிபோட்டு அதற்கு நெருக்கடி உருவாக்கிட கிட்டு முயன்றார் என்பதற்காக பாட்டாளி வர்க்க சர்வதேசிய, ஜனநாயகக் கடமையைக் கைவிடும் அளவுக்கு நாம் குறுகிய சிந்தனை உடையவர்கள் அல்ல. ''எதிரியின் எதிரி நண்பன்'' என்கிற சித்தாந்தம் எம்முடையதல்ல; புலிகளுடையதாக இருக்கலாம்.

● *மாவோவின் கலாச்சாரப் புரட்சியிலும், லெனின் — ஸ்டாலின் ஆட்சிகளிலும் மஸ்ஜிதுகள் பல தகர்க்கப்பட்டு, மூடுவிழாக்கள் நடத்தப்பட்டிருக்க பாபர் மசூதி இடிப்பை தாங்கள் எப்படி எதிர்க்க முடியும்.*

**— பஷீர், காயல்பட்டினம்.**

☆ இது உண்மையல்ல. தஜிகிஸ்தான், துருக்மேனிஸ்தான், அஜர்பைஜான் போன்ற தேசிய இனங்களில் மிக மிகப் பெரும்பான்மையினர் இசுலாமிய மதத்தைச் சேர்ந்தவர்கள். இவர்கள் எழுபது ஆண்டுகளுக்கு மேலாக சோவியத் ஒன்றியத்தில் இணைந்து வாழ்ந்தனர். இன்னமும் ஓர் ஒன்றியமாகவும், சோசலிசத்தில் கீழும் வாழவும் விரும்புகின்றனர். வாசகர் குறிப்பிடுவதைப் போல மசூதிகள் பல தகர்க்கப்பட்டு மூடுவிழாக்கள் நடத்தப்பட்டிருந்தால் அப்படி வாழ இந்த இசுலாமிய மக்கள் சம்மதித்திருப்பார்களா? மதம் தனிநபர் நம்பிக்கை என்கிற முறையில் வழிபாட்டு உரிமைகள் வழங்கப்பட்டிருந்த அதேசமயம் இசுலாமிய மதத்தின் பெயரால் முல்லாக்களும், யுத்தப் பிரபுக்களும் புரிந்து வந்த அட்டூழியங்கள், சுரண்டல்களுக்கு ருசியப் புரட்சி முடிவு கட்டியதோடு, சோசலிச சமுதாயக் கட்டமைப்பு தமக்கு ஜனநாயக, நவீன - நல்வாழ்வை வழங்கியது என்பதாலேயே அவர்கள் அதை ஏற்றிருந்தனர். தாமே முல்லாக்கள், யுத்தப் பிரபுக்களை எதிர்த்துப் போராடி வென்றனர். இதே நிலைதான் சீனத்திலும். மஞ்சூரியப் பிரதேசத்தில் வாழும் பல்வேறு தேசிய இனச் சிறுபான்மையினரும் இசுலாமிய மதத்தினர்; ஆனாலும், இவர்கள் மாவேவின் தலைமையிலான புதிய ஜனநாயகப் புரட்சியையும், தொடர்ந்து கலாச்சாரப் புரட்சியையும் தாமே பங்கேற்று ஆதரித்தனர். சீனப் புரட்சி அதன் துவக்க காலத்தில் இருந்தே பெரும்பான்மை மக்கள் பின் பற்றிய கன்பூசிய - பௌத்த மதத்தின் ஒடுக்கு முறைகளுக்கு எதிராகவே நடத்தப்பட்டது. இதனால் விழிப்புற்ற பிற சிறுபான்மை மதத்தினர் தமது சொந்த விருப்பத்தின் அடிப்படையில் மதச் சீர்திருந்தங்களுக்காகப் போராடி வெற்றி பெற்றனர். கம்யூனிஸ்டுகள் வரலாற்றுப் பொருள்முதல்வாதிகள். மதவெறியர்களைப் போல வரலாற்றுத் தடயங்களை அழித்திட ஒருபோதும் அவர்கள் முயலுவதில்லை. ஆகவே மசூதிகள் உட்பட வரலாற்றுச் சின்னங்களை பாதுகாப்பதில் மிகவும் அக்கறையுடையவர்கள்.

படிப்பகம்

www.padippakam.com

# பாரம்பரிய உரிமை பறிப்பும் ஏகாதிபத்திய கொள்ளையும்

**விவசாயம், கால்நடை வளர்ப்பு, மருத்துவத்தில் மரபின மூலக் கூறுகளைத் திருடும் பன்னாட்டு பகாசுர நிறுவனங்கள் நமக்கே விற்று கொள்ளையடிக்கின்றன.**

நம்மில் எவ்வளவு பேருக்குத் தெரியும் - நம் நாட்டிலிருந்து பெற்ற மூலிகைகளிலிருந்து தயாரிக்கப்பட்டு நமக்கே மிக உயர்ந்த விலையில் விற்கப்படும் மருந்துகள் பற்றி? இதய நோயாளிக்களுக்காக முன்மொழியப்படும் போர்ஸ்கோலின் இப்படிப்பட்ட ஒன்றாகும். ஹெஸ்ட் என்னும் பன்னாட்டு பகாசுர நிறுவனம் தயாரிப்பது. இதற்கு ஆதாரமான மூலிகையின் தாவர இயல் பெயர் ஓலியால் போர்ஸ்கோலிஸ். பாரம்பரிய மூலிகை மருந்துகள் பற்றிய இந்திய ஆயுர்வேதப் பாடப் புத்தகத்தில் குறிக்கப்பட்டுள்ள மூலிகை தான் இது.

ஒரு காலத்தில் தொழில் வளர்ச்சி அடைந்த நாடுகள், தொழிற்சாலை மூலப் பொருட்களை காலனிய, பின் தங்கிய நாடுகளிலிருந்து எடுத்துச் சென்றன. பின்னர் இந்நாடுகளிலேயே தமது மூலதனத்தை இறக்குமதி செய்து தொழில்கள் தொடங்கின. இவ்விரு வழிகளிலுமே அந்நாடுகளின் இயற்கை வளங்களை ஓரளவு அழிக்கவும் செய்தன. இன்று இன்னமும் ஏழை நாடுகளில் விட்டு வைத்திருக்கப்படும் விவசாயம். கால்நடை வளர்ப்பு. பாரம்பரிய மருத்துவம் ஆகிய துறைகளிலும் உறிஞ்சி எடுக்க செல்வ வளங்கள் இருப்பதறிந்து வேட்டையில் இறங்கியிருக்கின்றன.

மனிதகுலம் பல ஆயிரக்கணக்கான ஆண்டுகளில், இயற்கையோடு ஒட்டி வாழ்ந்ததில் இயற்கையிலுள்ள தாவரங்கள். மிருகங்கள் ஆகியன பற்றி செறிந்த அனுபவ அறிவைப் பெற்றுள்ளது. இன்னமும் இயற்கையோடு ஒட்டி வாழ்வது குலைக்கப்படாமல் பழங்குடி மக்களிடமும் நாட்டுப்புற மக்களிடம் இந்த அறிவுக் களஞ்சியம் இருந்து வருகிறது.

வறட்சியைத் தாக்குப் பிடிக்கும் ரகங்கள். நீர்தேங்கி நிற்கும் சதுப்புப் பகுதிக்கான ரகங்கள், பூச்சிகளின் தாக்குதலுக்கு எதிரானவை. உப்புத் தண்ணீர் உள்ள பகுதியிலும் வளரக் கூடியவை. குறைந்த உரமே தேவையானவை என்று பல்வேறு பயிர் ரகங்கள் பற்றிய அனுபவ அறிவும் விதைகளும் பழங்குடி மக்களிடமும் நாட்டுப் புறங்களிலும் இருக்கின்றன. ஒவ்வோர் பகுதியிலும் மரபு ரீதியிலேயே இன்வ பருவத்திற்கு இன்ன ரகம் பயிரிடுவது என்று தெரிந்து வைத்துள்ளனர். அதற்கான விதைகளை சேகரித்து பராமரித்து வருகிறார்கள்.

இதே போல கால்நடை வளர்ப்பிலும் என்னென்ன பிராணிகளை வளர்க்க முடியும். எப்படி வளர்க்க வேண்டும் என்று செழுமையான அனுபவங்களைக் கொண்டுள்ளனர். கால்நடைகளுக்கு வரும் நோய்களைக் குணப்படுத்தவும் விவசாயிகள் அறிந்து வைத்துள்ளனர்.

பழங்குடி மக்களிடமும் நாட்டுப்புறங்களிலும் அற்புதமான மருத்துவ முறைகளும் அரிய மருந்துகள் பற்றிய அறிவும் காணக் கிடக்கின்றன. எண்ணிறந்த மூலிகைகள், பிராணிகள், பறவைகளிலிருந்து தயாரிக்கக் கூடிய மருந்துகள் பற்றி மக்கள் தெரிந்து வைத்துள்ளனர். சாதாரண நோய்களிலிருந்து, மிருகங்களால் கடிபடுதல், பாம்பு, பூரான் போன்ற விஷத்தன்மையுடைய உயிரினங்களால் பாதிக்கப்படுதல், எலும்புகள் முறிவு போன்றவை வரை மருந்து மற்றும் சிகிச்சை முறைகளை கண்டு பிடித்திருந்தனர். கருத்தடை மருந்துகள் கூட அறிந்திருந்தனர்.

இப்படிப்பட்ட பாரம்பரிய அறிவுக் களஞ்சியம் இந்தியா, ஆப்பிரிக்கா, அமேசான் பள்ளத்தாக்கு, சீனா, மேற்கிந்திய தீவுகள், ஐரோப்பா ஆகிய பிரதேசங்களில் விவசாயிகளிடமும் பழங்குடி மக்களிடமும் நாட்டுப்புற வழக்கில் நிலவி வருகிறது.

இந்த இயற்கையின் அன்பளிப்பையும், மனிதர்களின் அறிவுச் சொத்து. சேமிப்புகளையும் தான் கள்ளத்தனமாக, நயவஞ்சகமாக அபகரிக்க, மிகவும் வளர்ச்சியுற்ற நாடுகள் குறி வைத்தன. கணிசமாக எடுத்துக் சென்றன. இன்னமும் எடுத்துச் செல்கின்றன. இவற்றின் நோக்கமும் திட்டமும் இதுதான்: இந்தப் பாரம்பரிய அறிவுச் சொத்தை ஆதாரமாகக் கொண்டு, பாரம்பரிய பயிர் ரகங்கள் - பிராணிகள் - மூலிகைகளை ஆராய்வது; அவற்றின் மூலக்கரு தோற்றுவாய்களை ஆராய்ந்து தமக்கு தெரிந்தவற்றை தெரிவு செய்வது; புதிய வகை பயிர் ரகங்கள் - பிராணிகள் - மருந்துகள் உருவாக்குவது; இவற்றின் விற்பனையை உத்திரவாதம் செய்வது; அதன் மூலம் பாரம்பரிய செல்வ வளங்களை படிப்படியாக இழக்கச் செய்து தமது கட்டுப்பாட்டில் ஏழை நாடுகளைக் கொண்டு வருவது. எப்படிப்பட்ட நயவஞ்சகத் திட்டம் பாருங்கள்! நம்மிடமிருந்து களவாடி நமக்கே விற்று நம்மை போண்டியாக்கும் திட்டம்!

**தாவரங்கள், பிராணிகள், பறவைகள் ஆகியவற்றின் மரபின மூலக் கூறுகளைத் திருடிக் கொண்ட பகாசுர நிறுவனங்கள் தமது லாப நோக்கங்களுக்கு ஏற்ப புதிய ரகங்களை, புதி‹! குணாம்சங்கள் கொண்டவற்றை உருவாக்குகின்றன. இவற்றின் செய்முறையுடன் புதிய குணாம்சங்களுக்காகவும் சேர்த்து வடிவுரிமை பதிவு செய்து கொள்கின்றன.**

மர்பின மூலக்கூறுகளை பாரம்பரிய பிரதேசங்களிலிருந்து எடுத்த வர வல்லரசு நாடுகளின் பகாசுர நிறுவனங்கள் (பன்னாட்டு தொழில் கழகங்கள் - தேசங் கடந்த தொழில் கழகங்கள்) பல உத்திகளை கையாண்டு வருகின்றன.

பன்னாட்டு நிறுவனங்கள் தாவரச் செல்வங்களைப் பற்றி ஆராய்தல், அவற்றிற்காக தாவரங்களை சேகரித்தல் என்று கூறி நேரடி தாவர சேமிப்பு நிலையங்களை ஏழை நாடுகளின் காடுகளில் அமைந்துள்ளன.

தமது நோக்கத்திற்கான ஆராய்ச்சிகளை தமது நாட்டு பல்கலைக் கழகங்களில் நிதி அளித்தோ அளிக்காமலோ செய்ய தூண்டிவிடுகின்றன. இந்தப் பல்கலைக் கழகங்கள், ஏழைநாடுகளின் கல்வி நிறுவனங்கள், அரசு ஆராய்ச்சிக் கூடங்கள் என்று தொடர்பு கொண்டு மரபின மூலக்கூறுகளை எடுத்துச் சென்று ஆராய்கின்றன; விவரங்களை பன்னாட்டு பகாசுரக் கம்பெனிகளுக்கு அளிக்கின்றன. சில கம்பெனிகள் பிரச்சினைகளுக்கு தகுந்தாற்போல ஏழை நாடுகளிலேயே நேரடியாக பல்கலைக் கழகங்கள் — ஆராய்ச்சி நிறுவனங்களுடன் ஏற்பாடு செய்து கொள்கின்றன. உதாரணமாக அமெரிக்க அரசும், இந்திய அரசு நிறுவனமான தாவர மரபின மூலக்கூறு தோற்றுவாய்களுக்கான தேசிய கழகமும் கூட்டாக ஒரு திட்டம் தொடங்கியுள்ளன. இதற்கு அமெரிக்க அரசு 110 லட்சம் டாலர்கள் (சுமார் ரூ. 33 கோடி) அளிக்கிறது.

பகாசுர நிறுவனங்கள் ஏழை நாடுகளி லுள்ள ஆராய்ச்சியாளர்களிடமிருந்து நே டியாகவே அரசுக்கோ, நிறுவனங்க ளுக்கோ தெரியாமலே மரபின மூலக்கூறு களை கள்ளத்தனமாக பெற்றுக் கொள்ள வும் செய்கின்றன. விஞ்ஞான மற்றுப் தொழில் துறை ஆராய்ச்சிக் கழகம் (CSIR மற்றும் இந்திய வேளாண்மை ஆராய்ச்சி கழகம் (ICAR) ஆகியவற்றில் விஞ்ஞானிகள் கண்டு பிடித்து சேகரித்த விவரங்கள் அடா கிய கோப்புகள் காணாமல் போயுள்ளன.

தாவரங்கள், பிராணிகள், பறவைகள் ஆகியவற்றின் மரபின மூலக்கூறுகளை திருடிக் கொண்ட பகாசுர நிறுவனங்க தமது முன்னேறிய கணிணி மற்றும் பி நவீன ஆராய்ச்சிக் கருவிகள் கொண் கிடைத்த தகவல்களை முறைப்படுத்தி அரித்துச் சலித்து தமது லாப நோக்கங் ளுக்கு ஏற்ப புதிய ரகங்களை, புதி குணாம்சங்கள் கொண்டவற்றை உருவா குகின்றன. இவற்றின் செய்முறையுட புதிய குணாம்சங்களுக்காகவும் சேர்த் வடிவுரிமை பதிவு செய்து கொள்கின்றன

மரபின மூலக்கூறுகளை எடுத்து செல்லும்போது. மனித குலத்தின் பொது சொத்தாக அவை பிரகடனப்படுத்தப்ப டன. மனிதகுல மேன்மைக்காக ஆராய்ச

படிப்பகம்

www.padippakam.com

செய்யப்படுவதாக சித்தரிக்கப்பட்டன. இயற்கையை எதிர்கொள்ள உதவுவதாக பசப்பப்பட்டன. ஆனால் சந்தைக்கான உயிரியல் ரகத்தை ஏற்படுத்தியதுமே, பன்னாட்டு பகாசுர நிறுவனங்களின் குரல் வேறு வகையாக ஒலிக்கத் தொடங்கிவிட்டது.

புதிய விதைகளைக் கண்டுபிடிக்க, புதிய குணாம்சங்களையுடைய பிராணிகளை (உதாரணமாக, பால்மாடு) உருவாக்க, புதிய மருந்துகளைக் கண்டுபிடிக்க, ஆண்டாண்டுகால கடின உழைப்பு ஈடுபடுத்தப்படுகிறது; ஏராளமான பொருட்களை உயர்ந்த தொழில் நுட்பத் திறனோடு ஆராய்ந்து, அரித்து சலித்து தேர்வு செய்வதால், ஏற்படும் செலவுகள் மிகவும் அதிகம். வர்த்தகம் சார்ந்த அறிவுத்துறை சொத்துரிமை மதிக்கப்பட வேண்டும்; கடுமையாக உழைத்தோர் தக்க முறையில் பொருளாதார ரீதியில் குறிப்பிட்ட காலத்திற்கு பலனடையுமாறு செய்ய வேண்டும்; தாவரங்கள் மற்றும் பிராணிகள், பறவைகளின் மரபின மூலக்கூறுகளிலிருந்து தொழில் நுட்பத்தினால் உருவாக்கப்படுவதால், அவை பாரம்பரிமானவை எனக் கருத இயலாது; அவற்றுக்கு வடிவுரிமைகள் தரப்பட வேண்டும்; உற்பத்தி செய்யும் முறை மட்டுமில்லாது, உற்பத்தி செய்யப்பட்ட பொருளின் குணாம்சங்களுக்கும் வடிவுரிமைகள் வழங்கப்பட வேண்டும்; இதற்கேற்ப வழக்கத்திலுள்ள வடிவுரிமைச் சட்டங்களை மாற்ற வேண்டும்; இதுதான் பன்னாட்டு பகாசுர நிறுவனங்களின் கோரிக்கை — பிரபல டங்கல் முன்மொழிதல்களின் சாரம்.



கர்நாடகா விவசாயிகள், தமது பாரம்பரிய உரிமையை திருடும் கார்கில் எனும் நிறுவனத்தை தாக்கிய பிறகும் ஆராய்ச்சித் தாட்களை பொறுக்கும் அதிகாரிகள்.

இந்த டங்கல் முன்மொழிதல்கள் பின்பற்றப்படுமானால்:

இந்திய விவசாயத்தில் இருக்கின்ற சுயசார்பை இழக்க வேண்டிவரும். அமோக விளைச்சல் தருவதாகக் கூறப்படும், பன்னாட்டு பகாசுர நிறுவனங்களில் விதைகள் வாங்கி பயிரிடலாம். அதனால் ஏற்படும் விளைச்சலில் அடுத்த போகத்திற்காக விதைகளை சேமிக்க முடியாது. இன்னொருவரிடம் விதைக்காக விற்கவும் கூடாது. இதுகாறும் தொன்று தொட்டு இருந்து வரும் விவசாயிகளின் விதைகள் மீதான உரிமை பறிக்கப்படும். விதை நிறுவ

## மக்களின் பாரம்பரிய மருந்துகளிலிருந்து கண்டறியப்படும் நவீன மருந்துகள்

பழங்குடி மக்களின் பாரம்பரியத்திலிருந்து கண்டுபிடிக்கப்பட்டுள்ள மருந்துகளின் விவரங்கள் நம்மை வியப்பில் ஆழ்த்தக் கூடியவை.

சின்கோனா மரத்திலிருந்து தயாரித்த கொய்னா மருந்து தற்போது வரும் மலேரியா நோயை கட்டுப்படுத்துவதில்லை. எனவே மாற்று தேவை என உலக சுகாதார நிறுவனம் அறிவித்திருந்தது. 2000 ஆண்டுகளாக சீனாவில் மருந்துப் பொருளாக பயன்படுத்தப்படும் கிவிங்ஷாவோ மூலிகை மலேரியா கிருமிகளை அழிப்பதை கண்டறிந்துள்ளனர்.

அமேசான் பழங்குடி இந்தியர்கள் காளான் வகை (Fungal) தொற்று நோய்களுக்கு சாதிக்காய் குடும்பத்தைச் சேர்ந்த ஒரு காயை பயன்படுத்துகின்றனர். இதிலிருந்து இப்போது காளான் எதிர்ப்புச் சக்தி கொண்ட இரு மருந்துகள் கண்டறியப்பட்டுள்ளன.

இதே மக்கள் பயன்படுத்தி வரும் இன்றொரு மருத்துச் செடி கருப்பு முசுமுசுக்கை. இப்போது இதிலிருந்து தயாரிக்கப்படும் பியூடைல் டிஜேஎன் என்ற மருந்து எய்ட்ஸ் நோய் சிகிச்சைக்கு பயன்படுத்த முடியும் என கண்டறியப்பட்டுள்ளது.

'பெருவோசெட்' என்பது இதய நோயாளிகளுக்குரிய நவீன மருந்தாகும். இது இந்திய ஆயுர்வேத மருத்துவ முறையில், 'மஞ்சள் அலரி' என அழைக்கப்படும் தாவரத்திலிருந்து தயாரித்ததாகும்.

இந்தியாவில் காட்டுப்புறங்களில் பாம்புக்கடி முதல் பைத்தியம் பிடித்தது வரை பலவற்றுக்கு சர்ப்பகண்டா என்னும் ஒரு மருந்தை பயன்படுத்துகின்றனர். கிட்டதட்ட 3000 ஆண்டுகளாக இது பழக்கத்தில் இருந்து வருகிறது. ஒரு நூற்றாண்டாக ஆராய்ச்சி செய்தும் 1950-ல் தான் ஒரு ஸ்விட்சர்லாந்து ஆராய்ச்சி நிலையம் 'ரெஸ்பரின்' மருந்தை இதிலிருந்து வடித்தெடுத்தது. ரெஸ்பரின் இன்று மன நோயால் பாதிக்கப் பட்டவர்களுக்கும் இரத்த அழுத்தத்தை குறைப்பதற்கும் மருந்தாக பயன்படுத்தப்படுகிறது.

இந்திய ஆயுர்வேத மருத்துவ முறையில் கூகுல் என்ற மரம் பற்றி குறிப்பிட்டு அதன் மருத்துவ குணங்களை குறிப்பிட்டிருக்கிறார்கள். ராஜஸ்தான், கர்னாடகா மற்றும் குஜராத் மாநிலங்களில் பழங்குடி மக்கள் இதனை பல வகையில் மருந்தாக பயன்படுத்தி வருகின்றனர். இன்று இம்மரத்திலிருந்து தயாரித்த வடிச்சாற்றை கீல்வாத நோய்க்கான மருந்தாக பயன்படுத்துகின்றனர்.

ஆப்பிரிக்காவைச் சேர்ந்த 'கொடி-வள்ளிக்கிழங்கு'-லிருந்து கருத்தடை மாத்திரைகள் உருவாக்கப்படுகின்றன.

ஆஸ்த்துமாவுக்குப் பயன்படுத்தப்படும் இன்டால் என்னும் மருந்து மத்திய தரைக்கடல் பிரதேசத்து தாவரம் ஒன்றிலிருந்து உருவாக்கப்பட்டது. இந்த தாவரம் பற்றி கிரேக்க பாடப் புத்தகங்கள் குறிப்பிடுகின்றன.

இதேபோன்று திபேத்திய பாடப் புத்தகங்களில் ஆடாமாசி என்னும் தாவரத்தின் மருத்துவ குணங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. இதன் வடிச்சாறு கலைப்பு - சோர்வை போக்கும் ஊக்க மருந்தாக பயன்படுத்தப்படுகிறது.

அமெரிக்காவின் வடமேற்கு பசிபிக் காடுகளில் கிடைக்கும் பசிபிக் யீ என்ற மரத்து பட்டையிலிருந்து, புற்று நோய்க்கு சிகிச்சை அளிக்கும் டாக்சால் தயாரிக்கப்படுகிறது. இப்போது மார்பக, கருப்பை புற்றுகளுக்கு மருந்தாகுமா என சோதிக்கப்பட்டு வருகிறது.

இந்தியாவிலும் சீனாவிலும் கிடைக்கும் மரங்களிலிருந்து காம்போடோதெசின் என்ற மருந்து புற்று நோய் சிகிச்சைக்கு பயன்படுத்தப்படுகிறது. இதற்கு இணையாக, ஸ்மித் - கிளைன் - பீசாம் என்ற பன்னாட்டு பகாசுர நிறுவனம், கிளாக்சோவும் இதேபோன்ற இன்னொரு தாவரத்தில் புற்று நோய் சிகிச்சைக்கான மருத்துக்காக ஆராய்ந்து வருகின்றன.

இந்த உதாரணங்கள் அனைத்தும் இயற்கையிலிருந்து மனிதகுலம் சுவீகரித்த அரும் அறிவுக் களஞ்சியத்தை எடுத்துக்காட்டுகின்றன.

படிப்பகம்

www.padippakam.com

னங்களுக்கு போட்டியாளராக விவசாயி கள் நடத்தப்படுவார்கள்.

குறிப்பிட்ட களைக் கொல்லிகளுக்கு எதிரான தடுப்பு சக்தி கொண்ட ரகங்கள் என்பவற்றை வாங்குவதால், அந்தக் களைக் கொல்லிதான் போட வேண்டும்.

விவசாயத்தில் மீண்டும் சுயசார்புக்கு செல்ல வழியே இருக்காது. இதைத்தான் நைஜீரிய அனுபவம் எடுத்துக் காட்டுகிறது. 1988-க்கு முன்பு இந்த ஆப்பிரிக்க நாடு பெரிய கோதுமை இறக்குமதியாளராக இருந்தது. அமெரிக்க பகாசுர நிறுவனமான கார்கில்தான் அதற்கு கோதுமையை விற்று வந்தது. உள்ளூர் விளைச்சலைப் பாதித்த தால் 1988-ல் கோதுமை இறக்குமதியை நைஜீரிய அரசு தடை செய்தது. உருகுவே சுற்று பேச்சுவார்த்தை உடன்படிக்கையை காரணம் காட்டி அமெரிக்க அரசு, நைஜீரிய துணி ஏற்றுமதிக்கு தடை செய்யும் என்று மிரட்டி நைஜீரியாவை பணியச் செய்தது.

உள்நாட்டு விவசாய ஆராய்ச்சியில் புதிய ரக உற்பத்தி என்ற போட்டிக்கே இட மிருக்காது. ஏனெனில் புதிய ரகம் என்னும் போது அதற்கான குணங்களுக்கும் சேர்த்து வடிவுரிமைகளை பன்னாட்டு நிறுவனங் கள் பெறுகின்றன. அதே குணங்கள் கொண்ட ஒரு ரகத்தை சுயேச்சையான ஒரு முறையில் தயாரித்தாலும், அது வடிவுரி மைச் சட்டத்தை மீறியதாகவே எடுத்துக் கொள்ளப்படும். வடிவுரிமை வகிப்போ ருக்கே சிறப்புக் கட்டணம் (Royalty) செலுத்த வேண்டும். உதாரணமாக சன்ஜீன் என்ற நிறுவனம் ஒலியிக் அமிலச் சத்து அதிக அளவு கொண்ட ஒரு சூரியகாந்தி ரகத்திற்கு வடிவுரிமை பெற்றுள்ளது. இத னால் ஒலீயிக் அமிலம் அதிக அளவு கொண்ட எந்த ஒரு சூரியகாந்தி ரகத்தையும் சூரியகாந்தி விதை உற்பத்தியில் உள்ள வேறு நிறுவனங்களோ, விவசாய ஆராய்ச் சியாளர்களோ, விவசாயிகளோ வேறு பட்ட முறையில்கூட உருவாக்குவதிலி ருந்து தடுக்கப்படுகின்றனர். இதே போல ஹிப்பர்டு என்றொரு ஆராய்ச்சியாளர் திசு வளர்ச்சியுடைய சோள ரகம் ஒன்றுக்கு அதன் 260 குணாம்சங்களுக்கும் வடிவு ரிமை பெற்றுள்ளார். இதே போன்ற சோள ரகத்தை வேறொருவர் உருவாக்கவோ, 260 குணாம்சங்களில் ஏதேனும் சிலதைக் கொண்டதாக படைக்கவோ எவருக்கும் அனுமதியில்லை.

பாரம்பரிய கால்நடை வளர்ப்பிலும் இதே நிலைதான். இந்த பகாசுர நிறுவனங்க ளிலிருந்து பால் மாட்டிற்கான மரபின மூலக்கூறு அடங்கிய உறை விந்து வாங்கி பயன்படுத்தலாம். அந்த இனப் பெருக்கத் தின் மூலம், மேலும் இனப் பெருக்கம் செய்ய தடை செய்யப்படுகிறது. அந்த நிறு வனத்திற்கு சிறப்புக் கட்டணம் செலுத்த வேண்டும். பயிர்களுக்கு உரம், பூச்சி மருந்து போலவே, கால்நடை வளர்ப்பில், தீவனம், மருந்துகளை குறிப்பிட்ட பகாசுர நிறுவனங்களிடம் வாங்க வேண்டும்.

பாரம்பரிய மருந்துகளை பயன்படுத் துவதை மெல்ல மெல்ல கைவிட்டு பகாசுர



**கார்கில், 27 நாடுகளுக்கும் மேலாக தமது விஷ வலையை விரித்துள்ள அமெரிக்காவின் தேசங்கடந்த நிறுவனமாகும். இந்தியாவில் 7 கோடி ரூபாய் செலவில் சூரியகாந்தி விதை நிறுவனம் வைத்துள்ளது. இதை எதிர்த்துத்தான் கர்நாடகா விவசாயிகள் போர்க் கொடி உயர்த்தினர்.**

கம்பெனிகளின் ''மருந்துப் பிடியில்'' சிக்கி விடுவோம். நமது பாரம்பரிய வைத்திய முறைகள், ஏற்கனவே அழிந்து வருகின் றன; இவை இன்னும் காணாமல் போய்வி டும்.

இவ்வாறு விவசாயம், கால்நடை வளர்ப்பு, மருத்துவம் ஆகிய துறைகளில் பாரம்பரியமாக நமது மூதாதையர்கள் சேக ரித்து தந்த, கடும் துன்ப துயரங்களில் நமக்கு மாற்றித் தந்துவிட்டு சென்ற அறிவுக் களஞ்சியத்தை, செறிவான அனுபவங் களை இழந்து நிற்கும் நிலை ஏற்படும். இந்த செல்வத்தை உயிரினும் மேலாக நமது மூதா தையர்கள் மதித்துள்ளனர். இமாலயன் கெசட்டெர் என்ற நூலில் அட்கின்சன் என் னும் ஆசிரியர் தெரிவித்துள்ள செய்தி இது: கார்வால் மலைப் பகுதிகளைச் சேர்ந்த பிர தேசத்தில் ஒரு சமயம் கொடியதொரு பஞ் சம் ஏற்பட்டது. ஆயிரக்கணக்கானோர் இறந்தனர். பின்னர் அங்கு சென்றவர்கள், எல்லா வீடுகளிலும் பிணங்களுக்கு அரு கேயே நெல், கோதுமை மற்றும் மலைப் பகுதி தாவரங்களின் விதைகள் இருந்ததை பார்த்தனர். விதைகளை உண்பதைவிட பட் டினி கிடந்து சாகவும் துணிந்திருக்கின்றனர்; கார்வால் பழங்குடி மக்கள்! இவ்வளவு அரும்பாடு பட்டு சேகரித்த மக்களின் பொதுவான உடைமையை திருடிக் கொண்டு ஒரு சில மாற்றங்களை நவீன முறைகளால் செய்து புதிய மரபினங்களை தோற்றுவித்ததற்காக உலகையே விலை பேசிக் கொண்டிருக்கின்றன பகாசுர பன் னாட்டு நிறுவனங்கள்.

ஆண்டுதோறும் ரூ.1,000 கோடிக்கு மூலிகைத் தாவரங்களை இந்தியா ஏற்றுமதி செய்கிறது. இங்கிலாந்து மருந்துத் துறை தகவல் களஞ்சியத்தில் கூறப்பட்ட மூலிகை களில் பாதிக்கும் மேலானவை இந்தியா வில் இமயமலை அடிவாரத்தில் கிடைப் பவை. இந்தியா 12 நாடுகளுக்கு 1900 விதை ரகங்களை ஏற்றுமதி செய்து வருகி றது. இவை எதற்கும் ஒரு பைசா கூட சிறப்பு கட்டணமாகப் பெறுவதில்லை. (இதே சமயம் அமெரிக்கா ஆண்டொன் றுக்கு 6,600 கோடி டாலர்களை விதைகள் வியாபாரத்தில் குவிக்கிறது) இதேபோல இந்திய கால்நடைச் செல்வத்தின் ஏற்றுமதி யும் கணிசமானவை. இவ்வளவு பரந்த பொக்கிஷங்களைத்தான் இந்தியா இழப்ப தற்கு ஆட்சியாளர்கள் வகை செய்கின்ற னர். பன்னாட்டு பகாசுர நிறுவனங்களின் நலன்களுக்காக, ஐ.எம்.எப். — உலக வங்கி எஜமானர்களுக்காக டங்கல் முன் மொழிதல்களை ஏற்பதற்கு உள்ளனர். இந் திய விவசாயிகளின் நன்மைக்காக என்று சொல்லியே அதனைத் திணிக்க வழிகளை வகுத்து வருகின்றனர்.

ஆனாலும் இந்திய விவசாயிகளின் முன்னோடிப் பகுதியாக கர்நாடக விவசா யிகள் 1992 டிசம்பர் இறுதியில் புதிய வடிவு ரிமைகளுக்கு எதிராக ஒரு போராட்டம் நடத்தினர். பெங்களூரில் 'கார்கில் என்ற பன் னாட்டு பகாசுர நிறுவனத்தின் இணை அலு வலகத்தில் புகுந்து, நமது நாட்டு தாவரங் ளைப் பற்றி தொகுத்திருந்த ஆராய்ச் கோப்புகளை அழித்தனர். கார்கில் - இ திய அரசின் வருடாந்திர பட்ஜெ தொகையை விட நான்கு மடங்கு பெரி அளவு வரவு செலவு கொண்ட பகாசுர நி வனமாகும். 27 நாடுகளுக்கும் மேலா தமது விஷ வலையை விரித்துள்ள அமெ ரிக்காவின் தேசங்கடந்த நிறுவனமாகும் இந்தியாவில் 7 கோடி ரூபாய் செலவி சூரியகாந்தி விதை நிறுவனம் வைத்து ளது. இன்னும் பிற தானிய வகைகள், உட் ஆகிய உற்பத்திக்காக பல கோடி ரூபா திட்டங்களை அமுல்படுத்த உள்ள நிறு னம். இதை எதர்த்துத்தான் கர்னாடகா வி சாயிகள் போர்க் கொடி உயர்த்தினர். ஏகா பத்திய நாடுகளுக்கும், பகாசுர நிறுவனங் ளுக்கும், அதன் பாதந்தாங்கிகளாக உள் இந்திய ஆட்சியாளர்களுக்கும் எதிர தொடுக்கப்பட வேண்டிய தொடர் யுத் தின் ஓர் ஆரம்பமே இது!

★

படிப்பகம்

www.padippakam.com

# தீண்டாமைக் கொடூரமும் நீதிமன்ற இழுத்தடிப்பும்

ஊரின் பொதுக் கிணற்றிலிருந்து நீர் எடுப்பதற்குக்கூட உச்ச நீதிமன்றம் வரை செல்ல வேண்டிய அவல நிலையில் தான் தாழ்த்தப்பட்டோரின் அன்றாட வாழ்க்கை உள்ளது. அதிர்ச்சியாக இருக்கலாம்; ஆனால், 'சுதந்திர'மடைந்து 45 ஆண்டுகள் கழித்த பின்னும் இதுதான் நடைமுறை உண்மையாக உள்ளது.

உதாரணத்திற்கு ஒன்று: கர்நாடக மாநிலம், மாலிக்வாடி கிராமத்தில் 'மகர்' எனும் சாதிப் பிரிவைச் சேர்ந்த தாழ்த்தப்பட்டோர் வாழ்ந்து வருகின்றனர். இவர்கள், இக் கிராமத்திற்கென அரசினால் அமைத்துக் கொடுக்கப்பட்ட பொதுக் குழாயிலிருந்து குடிநீர் எடுக்கச் சென்றபொழுது மேல் சாதி கும்பலால் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளனர். தாழ்த்தப்பட்டோர் இக்குழாயிலிருந்து நீர் எடுத்தால், அதன் புனிதம் கெட்டுவிடுமென்றும், அப்புனிதமற்ற நீரை எடுத்து கோவில் சாமி சிலைகளுக்கு அபிஷேகம் செய்ய முடியாதென்றும் திமிராகத் தெரிவித்துள்ளனர். மேலும், இதை மீறி நீர் எடுத்தால் சுட்டுக் கொலை செய்து விடுவதாக துப்பாக்கியைக் காட்டி மிரட்டினர். இந்நிகழ்ச்சி நடந்தது 1978 செம்டம்பரில்.

உடனேயே, பாதிக்கப்பட்ட தாழ்த்தப்பட்ட மக்கள், தங்களின் அடிப்படை உரிமையைப் பறிப்பதாக மேல் சாதி வெறியர்கள் மீது குற்றஞ் சுமத்தி குற்றவியல் நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்தனர். வழக்கை விசாரித்த அந் நீதிமன்றம் குற்றவாளிகள் ஐவரையும் அடிப்படை உரிமை பாதுகாப்பு சட்டத்தின் கீழ் தண்டித்தது. இருந்தும் பிரச்னை இத்துடன் முடியவில்லை.

குற்றவாளிகள் கொடுத்த மேல்முறையீட்டு மனுவின் கீழ், வழக்கு மாவட்ட நீதிமன்றத்திற்கு விசாரணைக்கு வந்தது. தனது தீர்ப்பில், 'இத்தகைய வழக்குகளுக்கு போதுமான சாட்சியங்கள் தேவை' என்பது அவசியமானதல்ல எனக் கூறப்பட்டிருந்தாலும், சட்டத்தின் ஓட்டைகளைப் பயன்படுத்திக் கொண்டு இரு குற்றவாளிகள் விடுதலை பெற்றனர்.

வழக்கு மறுபடியும் மறு பரிசீலனைக்காக மாநில உயர் நீதிமன்றத்திற்கு வந்தபொழுது, அரசியல் சாசனம் உறுதி செய்துள்ள அடிப்படை உரிமைகளுக்கு எதிராக மட்டுமின்றி, முன்னுக்குப் பின் முரணான கருத்தைக் கொண்டு தீர்ப்பை அளித்தது. 'போதுமான சாட்சிகள் இல்லை' எனக் கூறி குற்றவாளிகள் ஐவரையும் விடுதலை செய்தது.


தங்களது உரிமை நிலைநாட்டப்பட வேண்டும், சாதி வெறியர்கள் தண்டிக்கப்பட வேண்டும் என்ற உறுதியுடன் பாதிக்கப்பட்ட அம் மக்கள் வழக்கை உச்சநீதி மன்றத்திற்கு எடுத்துச் சென்றனர். உச்சநீதிமன்றம் தனது தீர்ப்பில் 'குற்றவாளிகள் தண்டனையை உறுதி செய்துள்ளதுடன், இக் கொடிய செயலை அமெரிக்காவின் வரலாற்றில் நடந்த அடிமைகளின் மீதான அடக்கு முறைகளுடன் சமப்படுத்தி கண்டித்துள்ளது.

இத்தீர்ப்பு வெளியான ஆண்டு 1992 இறுதியில் இடையில் எத்தனை ஆண்டுகள்? கணக்கிடுங்கள் - சுத்தமாக 24 ஆண்டுகள்! வனவாசக் கதைதான்.

24 ஆண்டுகள் அம் மக்கள் எவ்வளவு கஷ்டங்களுடன் விடாப்பிடியாக போராடியிருப்பார்கள்? தங்களின் அன்றாட வேலைகள், வருமானம், குடும்ப சுக, துக்கங்கள் அனைத்தையும் ஒதுக்கி விட்டு, உறுதியுடன் தங்களின் உரிமைகளுக்காக, இழுத்தடிக்கும் நீதிமன்றங்களில் போராடியிருப்பார்கள்? அது மட்டுமன்றி, மாநில உயர் நீதி மன்றத்தால் விடுதலை செய்யப்பட்ட சாதி வெறியர்கள் அம் மக்களுக்கு எதிராக மேலும் அடக்கு முறைகளை ஏவிவிட்டிருக்க மாட்டார்கள் என்பதற்கு என்ன ஆதாரமுள்ளது? நாட்டிலேயே, தாழ்த்தப்பட்டவர்களுக்கு தண்ணீர் தர மறுக்கும் கொடூரத்திற்கு எதிராக வந்துள்ள முதல் நீதிமன்ற தீர்ப்பு இதுதானாம். ஆனாலும் குஜராத்தில் இன்றளவும் 67 சதவீத கிராமங்களில் தாழ்த்தப்பட்டவர்கள் பொதுக் கிணற்றிலிருந்து நீர் எடுக்க மறுக்கப்படுகின்றனர். ஒரு வழக்கு முடியவே 14 ஆண்டுகள் எனில், மீதமெல்லாம்?

● ராகவன்


**கர்நாடகாவில், குஜராத்தில் இன்றளவும் 67 சதவீத கிராமங்கில் தாழ்த்தப்பட்டவர்கள் பொதுக் கிணற்றிலிருந்து நீர் எடுக்க மறுக்கப்படுகின்றனர்.**





Published and owned by R.SHANMUGARAJ, 4, Samiyar Thottam, Alandur Road, Saidapet, Madras - 600 015
Printed by him at EZHIL PRINTS, 321, Arcot Road, Madras - 600 024, Editor: R.SHANMUGARAJ

www.padippakam.com



# இதுதான் இன்றைய இந்தியா

ஓடாத தறியின் மீது காலைத் தூக்கி வைத்துக் கொண்டு இருக்கும் இச் சிறுமியின் சிரிப்பிற்கு காரணம் என்னவாக இருக்கும்? இட நெருக்கடியும், எவ்வித இரைச்சலும் இல்லாது விளையாடுவதற்கு விஸ்தாரமாக இடம் கிடைத்ததற்காகக் கூட இருக்கலாம். சில காலங்கள் முன்பு வரை இரைச்சலோடு தறிகள் இயங்கிக் கொண்டும், சுறுசுறுப்பாக தனது குடும்பத்தார் வேலை செய்து கொண்டு இருந்ததும் இவளுக்கு நினைவிருக்கலாம்; அப்பொழுது இவள் கூட ஏதாவது கூடமாட உதவி செய்திருக்கலாம். ஆனால் எல்லாம் திடீரென ஒரு நிசப்ததிற்கு வந்து விட்ட இந்நிலைக்கான காரணங்களையும், அதன் பின் விளைவுகளையும் இவளால் அறிந்து கொள்ள முடியுமா? வயிற்றுப் பிழைப்புக்காக வேறு ஏதாவது வேலை தேடி டில்லி நகரத் தெருக்களில் அலையும் இவளது தந்தைக்கும், தாய்க்கும் தான் அது தெரியும். இவளின் குடும்பத்திற்கு மட்டுமா இந்தக் கதி? இல்லை. அரசு ஆரவாரத்துடன் அமுலாக்கி வரும் புதிய பொருளாதாரக் கொள்கை நாட்டிலெங்கும் உள்ள 3 கோடி நெசவாளி குடும்பத்தினரை இந்த இழிநிலைக்குத் தாழ்த்தியுள்ளது. அது ஆந்திர நெசவாளிகளை தற்கொலைப் பாதையில் தள்ளியது. டில்லியைச் சேர்ந்த நெசவாளர்களுள் பலரை பிச்சை எடுக்கவும், சேலம் தமிழ்நாடு நெசவாளிகளை சிறுநீரகத்தை விற்கச் செய்யும் அவல நிலைக்கும் தள்ளி வருகிறது.

இதோ ஒரு பெண்மணிக்கு சிகை அலங்காரம் செய்து கொண்டிருக்கிறாரே. மாதம் ஒரு முறையோ. இரு முறையோ இந்தியாவிலுள்ள தனது வாடிக்கையாளர்களுக்கு முடி அலங்காரம் செய்து விட இலண்டனிலிருந்து விமானம் மூலம் வந்து செல்கிறார். இவரிடம் முன் கூட்டியே தேதியும், நேரமும் குறித்துக் கொண்டு தான் முடி வெட்டிக் கொள்ள இயலும். கட்டணமோ குறைந்த பட்சமாக ரூ. 500/- முதல் ரூ.2000/- வரை. இருந்தால் என்ன? டில்லி, பம்பாய், கல்கத்தா போன்ற பெரு நகரங்களிலுள்ள ஐந்து நட்சத்திர ஹோட்டல்களில் இவரிடம் சிகை அலங்காரம் செய்து கொள்ள தங்களின் அடுத்த முறைக்கு நீண்ட வரிசையில் காத்துக் கிடக்கிறது புதுவகை பணக்காரர்களின் கும்பல்! நிழலான காரியங்களின் மூலம் சம்பாதித்த பணத்தைக் கொண்டு என்ன செய்வதென்றே தெரியாது வக்கிரமாக அலைகிறது இக்கும்பல். அந்நிய நாட்டின் முதலாளிகளின் கொள்ளைக்காக பருத்திநூலை ஏற்றுமதி செய்வதிலும், செயற்கை நூல் இழைகளை இறக்குமதி செய்வதிலுமே இந்திய அரசு குறியாக உள்ளது. உள்நாட்டில் தரகு முதலாளிகள் செயற்கை இழை நூல் மூலம் நவீன ரக துணிகளை உருவாக்கி ஏராளமாக கொள்ளையடிக்க இந்திய அரசு சலுகை செய்ததே ஒழிய நலிவடையும் நெசவாளர் குடும்பங்களுக்கு மறுவாழ்வுக்கான வழியைக் காட்டுவதில்லை. இந்த தைரியத்தில்தான் எதை இறக்குமதி செய்வது என்ற வரைமுறையே இல்லாமல் முடி வெட்டக் கூட ஆட்களை 'இறக்குமதி' செய்து கொட்டமடிக்கிறது மேட்டுக்குடி கும்பல். இதை நாம் சகித்துக் கொண்டு இருப்பதா?



படிப்பகம்